Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 14/00

දිනමුරසු වාරමලර් ஏப்ரல் 28- மே 04, 2002

வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY இதழ் 457

பேச்சு வார்த்தை மேசையில் அரசாங்கத்தின் வியூகம்!

ஆன்மீகம்

எவற்றை விலக்க வேண்டும்?

நிலையற்ற இந்த உலகில் ஒவ்வொரு மனிதனும் அமைதியுடனும் பாதுகாப்புடனும் வாழ வேண்டும் என்று விரும்புகிறான். ஆனந்தம், அமைதி இவற்றை மனிதன் இழந்ததற்கு என்ன காரணம்? உன்னிடம் அகங்காரம் உள்ளவரையில் யாருமே உன்னை விரும்பமாட்டார்கள். மனிதனிடம் கோபம் உள்ள வரையில் அவனிடம் வருத்தமும் இருந்தே தீரும். மனிதனிடம் ஆசைகள் அதிகமாக இருக்கும்போது, அவையனைத்தையும் நிறைவேற்றுவது மிகக் கடினம்.



பேராசை உள்ளவனுக்கு வாழ்க்கை முழுவதுமே மகிழ்ச்சி இராது. அவனது கருமித்தனத்தைக் கைவிட்டால்தான் அவனால் மகிழ்ச்சியுடன் இருக்க முடியும்.

நித்ய சத்யமான இறைவன் பிரபஞ்சம் முழுவதையும் படைத்தார். பிரபஞ்சம் முழுவதும் சத்தியத்திலேயே திரும்ப ஐக்கியமாகிறது. பரிசுத்தமான களங்கமற்ற சத்யம் இவ்வுலகில் வியாபிக்காத இடமில்லை.

ஆதாரம்: சாயி அருளமுதம்(கோடை 1999)

செல்வி அகல்யா சிவபாலன், மண்டூர்-02.

அன்பு

அன்பு என்பது புனிதமான ஓர் உணர்வு. விலை கொடுத்து வாங்காமலேயே பிறருக்கு கொடுக்கக் கூடியது. 1 யோவான் 4: 8ல் அன்பில்லாதவன் தேவனை அறியான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நாம் உண்மையாகவே தேவனுடைய பிள்ளைகள் என்றால் நமக்குள் அன்பு இருக்க வேண்டும்.

பெற்றோர்களுக்கு, உறவினர்களுக்கு, உலகத்தவர்களுக்கு, உயிரினங்களுக்கு என்று நம் அன்பை பகிர்ந்தளிக்க வேண்டும். ஏனெனில் 1 யோவான் 4: 7ல் அன்புள்ள எவனும் தேவனை அறிந்திருக்கிறான் என்று சொல்கிறது. பரிசுத்தாவியைப் பெற்றிருக்கிறீர்களா என்று கேட்டால் சிலர் ஆம் என்றும் இல்லை யென்று சிலரும் சொல்வோம். ஆனால் பரிசுத்தாவியைப் பெற்றவர்கள் உண்மையிலுமே அன்புள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதே கிறிஸ்துவத்தின் நியதி (ரோமர்: 5:5) பரிசுத்தாவியின் முதலாவது வெளிப்பாடே அன்பாகும் என்பதை கலா-5:22 நமக்கு கோடிட்டுக் காட்டுகின்றது. இது தவிர 1கொரி 13ம் அதிகாரம் முழுவதையும் வாசிக்கும்போது அன்பின் மகத்துவத்தையும் அதன் ஆழத்தையும் நாம் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும். அம்பாக அல்ல அன்பாக வாழ்ந்து ஆண்டவரில் களிகூருவோம்.

ஜெ.ராம் விக்டர், லபுகெலை.

தொழுகை

* தொழுகையை குறிப்பிட்ட நேரங்களில் நிறைவேற்றுவது முஃமீன்களின் மீது விதியாக்கப்பட்டுள்ளது. (4:103)

* தொழுகையை நிலை நிறுத்துவீராக! நிச்சயம் தொழுகை (மனிதரை) மானக் கேடானவற்றையும் தீமையையும் விட்டு விலக்கும். (29:45)

* (கவனமற்ற) தொழுகையாளிகளுக்குக் கேடு தான் அவர்கள் தம் தொழுகையில் பாராமுகமாகவும் இருப்பார்கள். மேலும், பிறருக்குக் காண்பிக்கவும் தொழுகிறார்கள். (107: 4,5,6)

* தொழுகையை நிலை நிறுத்துங்கள் இணைவைப்போரில் நீங்களும் ஆகி விடாதீர்கள். (30: 31)

* (முனாஃபிக்குகள்) தொழுகைக்கு தயாராகும் பொழுது சோம்பலுடனும் (அடுத்தவர்களுக்கு காண்பிப்பதற்காகவும் நிற்கிறார்கள்) (4:142)

* ஈமான் கொண்டவர்கள் வெற்றியடைந்து விட்டார்கள். அவர்கள் தங்கள் தொழுகையில் உள்ளச்சத்தோடு இருப்பார்கள். (23: 1,2,9)

* ஈமான் கொண்டவர்களே! ஜும்ஆ நாளில் தொழுகைக்காக நீங்கள் அழைக்கப்பட்டால், வியாபாரத்தை விட்டுவிட்டு அல்லாஹ்வைத் தியானிக்க செல்லுங்கள். (62:9)

ஜவாத் பின் சுபைர், ஏறாவூர்.

கவிதைப் போட்டி இல.454

பரிசுக்குரிய கவிதை

நிலுவை

எம் பாவங்களின்
நிமித்தம்
சுமந்தீர்
நீரன்று சிலுவை
ஆன்ம பலத்தால் தாங்கினீர்
அப்பெரும் பளுவை
ஆனால் கைம்மாறாக
மனிதர்கள் விட்டுவைப்பதோ
பாவங்களின் நிலுவை.

ச. ஜெகதீஸ்வரன்-நாவலப்பிட்டி.

இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

பாரச்சிலுவை

அன்றொரு நாள் இறைமகன்
கோரப்புண்ணில் குருதி ஒழுகிட
பாரின் பாவத்தைப் பரிந்து சுமந்தனன்
இன்று... எம் தேச மைந்தர்...
பாசதீபங்களைப் பாதியில் பிரிந்து
பாரெங்கும் அலைகிறார் தொழில் தேடி
இதுவும் இங்கு பாரச்சிலுவை தான்.

ப. சைந்தவி- மட்டுவில்.

ஏற்றமான வாழ்வு

மண்ணுயிர் எல்லாம்
தன்னுயிராய் எண்ணி
தரணி வாழ்ந்த ஏசுவே
எங்கள் பரமபிதாவே
நீர் இன்னும் மரிக்கவில்லை
மாண்புடன் வாழ்கிறாய்
வானகத்தில்.

க.கமால்தீன்-ஏறாவூர்-03.

திருநாமம்

போதனைகளின்
விளைவாய் இந்த
சோதனைகள் இதனால்
உடலை வாட்டும்
வேதனைகள் ஆனால்
என்றும் அழியா
சாதனையாய் நிலைத்த
உம் திருநாமம்.

இராமஜெயபாலன்-
கொக்குவில்.

வாக்குறுதி!

சிந்துவது கண்ணீர்த்துளி!
சீறுவது இரத்தத் துளி!
கொட்டுவது வியர்வைத்துளி!
உள்ளத்தின் மனவலிமை!
உறுதியாய் உள்ளவரை...!
சிலுவையினை மட்டுமல்ல...!
மலையையும் சுமப்பேன்
மக்களுக்காய்...!

ஹப்புத்தளையூர்-
மனோ கோபாலன்.

விடுதலை!

விடுதலைக்கு விலைகள்
வீரச்சாவுகள் என்றால்!
வானமே வாய்விட்டழ-எம்
வீரர்களை விதைத்தோமே
மண்ணில்
எங்கே எங்கள் விடுதலை?

சீனிராசா எடிசன்-
கொழும்பு-12.

பாவம்

பரமபிதாவின் மைந்தன்
பாவிகள் எம் பாவத்தை கழுவ
பாடு சுமந்து சிலுவையில்
குருதி சிந்தினாரே!

க.ரவிராஜ்-கோண்டாவில்.

எச்சரிக்கை!

சூரியன் மேற்கில் உதிக்கும்
புவியில் வால் நட்சத்திரம் விழும்
வானம் வெடித்துச் சிதறும்
இந்த பூமி சில நொடிகளில் அழியும்
இத்தனையும் ஏற்படும்
உன் துயரத்தைப் பார்த்து!

கிருஸ்னன் சிவா-கெலனிய எஸ்டேட்,மஸ்கெலிய.

திருந்தினார்களா?

சிலுவை சுமந்தார்
பாவத்தைச் சுமந்தார்
யாருடைய பாவத்தை
பாழாய்ப் போன மானிடனின்
பாவத்தை
திருந்தினார்களா மானிடர்கள்?

ஐ. நதர்சன்-கம்பளை.

கவிதைப் போட்டி இல.457

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 04.05.2002

கவிதைப் போட்டி இல.457
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

கடவுளுக்கோர் கவிதை

சிலுவையை
சிவக்க வைத்தது
இயேசுவின் இரத்தம்
அப்போது சிவக்கவில்லை
உங்கள் சிந்தனை
உங்களை அழுத்தியிருக்கும்
ஆணிகளை தகர்த்தெறிந்து
நீங்கள்...
உயிர்த்தெழுவது
இனி எப்போது?

துரைராஜா, பரிமளாதேவி-
திக்கன பத்தனை, கலஹா.

அறியாமை!

முள் முடி அவருள்ளத்தை
தாக்கவில்லை'
சிலுவை அவருக்கு சுமையாக
இருக்கவில்லை'
இவர்கள் செய்வது என்னவென்பது'
இவர்களுக்கே தெரியவில்லை!

சி.சுரேந்திரன்-நல்லூர்.

மதவெறி

எத்தனை அடிதடி மதத்தின் வெறியால்
ஏன் இந்த உயிர்ப்பலி! இதனால்
மனிதன் கண்ணில் தினமும் நீர்த்துளி
ஏனோ மனிதா இந்த மதவெறி.

ரி. புகலேந்திரன்- சாமிமலை.

உங்கள் பக்கம்

விட்டில் பூச்சியாகும் நாளைய சந்ததி

பல வருடமாக இலங்கை வானொலியிலே தேசிய சேவையில் இடம்பெறும் நிகழ்ச்சியே 'நாளைய சந்ததி' என்ற நிகழ்ச்சியாகும். எதுவித கொடுப்பனவும் இன்றி 30 நிமிட நிகழ்ச்சிக்காக நான்கு மணி நேரத்திற்கு மேலாக ஒலிப்பதிவிற்காகவும் எதிர்காலத்தில் நல்ல உச்சரிப்புடன் திறமையான அறிவிப்பாளராக வருவோம் என எண்ணி காலத்தையும் நேரத்தையும் வீண் விரயம் செய்து நாளைய உலகினை பார்க்கப் போகும் இந்த நாளைய சந்ததியினரை பார்க்கும் போது மனம் கலங்குகின்றது.

அன்று நானும் இது போல் முன்றாண்டிற்கு மேலாக இந்த நிகழ்ச்சியில் பங்கு பற்றி ஏமாற்றமடைந்து இன்று வேறுதுறையில் நிம்மதியுடன் உழைத்து வருகின்றேன். இந்த நிகழ்ச்சியில் பங்குபெற வரும் பல இளைய தலைமுறை ஒர சில நிகழ்ச்சிக்கு வந்தவுடனேயே அந்த நிகழ்வால் என்ன பயன் என அறிந்து நின்று விடுவார்கள். சிலர் தயாரிப்பாளராலும் ஏனைய சக கலைஞர்களாலும் நம்பிக்கையூட்டப்பட்டு பல வருடங்களையும் வாழ்க்கையினையும் வீண்விரயம் செய்கிறனர். எனினும் இந்த நிகழ்வில் பங்குபற்றி அறிவிப்பாளராகவோ அல்லது ஒலி, ஒளிபரப்பும் துறையில் ஏதாவது ஓர் துறையில் பிரகாசிப்பவராகவோ வருவது என்றால் அவர்களை விரல் விட்டு எண்ணி விடலாம். அவர்கள்கூட இந்த நிகழ்ச்சியை நம்பி இராது தம் முயற்சியால் வந்தவர்கள் என்றே கூறலாம். அவ்வாறு இல்லாவிட்டால் செல்வாக்கு பெற்றோர் ஒத்துழைப்போடு அல்லது வேறு சில விடயங்களுக்கூடாக வந்தவர்களே.

ஆனால் மற்றவர்கள் அங்கே இடம்பெறும் நாடக கலைஞர் தேர்வு, அறிவிப்பாளர் தேர்வு, உரைச்சித்திர கலைஞர் தேர்வு என பல தேர்வில் பங்கு பற்றுவதும் பின் அத் தேர்விலே பிரபல்யம் ஆனோரின் பிள்ளைகளும் சொந்தங்களது பிள்ளைகளும் தேர்வு பெற்று வேலை செய்வதும் வாடிக்கை. இதை எண்ணாது ரஜனி ஸ்ரைலிலே நம்பிக்கையை ஊட்டி ஏமாற்றுவோர்களிடம் ஏமாறும் நாளைய உலகு தனது காலத்தையும் நேரத்தையும் வீணாக அழிக்கிறது. ஒருவன் அறிவிப்பாளனாக வர திறமையுடனும் முயற்சியுடனும் தேடலை ஏற்படுத்த வேண்டுமே தவிர பாசாங்கு வார்த்தைக்கும். ஸ்ரைலிற்கும் மயங் கக்கூடாது. இதை அந்த நிகழ்ச்சியில் பங்கு பற்றி விலகியவர்கள் நன்குணர்வர். இதை ஏனையோரும் உணர வேண்டும்.

வி.கே.தீபசுதன், மலேவீதி, கொழுமபு-12.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772,கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):-074-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@dialogsl.net
edmurasu@dialogsl.net

வாசகர் சாலை

மதிப்பிற்குரிய ஆசிரியரே,

யாழ்ப்பாணத்தில் முரசு வாங்கும் பொழுது படித்துக்கொண்டிருக்கும் (பாடசாலை முடித்த) இளைஞர்களால் எச்சரிக்கை விடப்படுகின்றது. உண்மையை சொன்னால் கோபம் வருகின்றது. நீதியை நிலை நாட்டும் பத்திரிகையைத்தான் மக்கள் வாசிப்பார்கள் என்பதை தகுந்தவர்கள் புரியவேண்டும். எச்சரிக்கை விட்டு அனைவரையும் வெருட்டி விட முடியாது. நாம் எவருக்கும் அஞ்சப் போவதில்லை என்பதை புரிய வேண்டும். 'அதிரடி அய்யாத்துரை' தரும் உண்மைகள் சுவையானவை அதுபோன்று இன்னும் தரவேண்டும். முரசு நிலைக்கட்டும்.

தர்ஷா- யாழ்ப்பாணம்.

இலங்கையின் முதற்தர முரசே!

பத்திரிகையில் வரும் அம்சம் அனைத்தும் நன்று. ஒன்றையும் விட்டுவிட முடியாது. முரசே உன்னை வாங்கியவுடனேயே வாசித்து முடித்து விடுவேன். அதுதான் சூடு, சுவை, சுவாரசியம். உண்மை-நேர்மை. ஆசிரியரே குறுக்கெழுத்துப் போட்டி ஒன்றை ஆரம்பிப்பீர்களா? ஆரம்பிப்பீர்கள் என்று காத்திருக்கிறேன். என்றும் வாழ்க. எங்கும் வாழ்க என் வாழ்த்துக்கள்.

ச.நிதிபன்-யாழ்ப்பாணம்.

எப்போது 'முரசு' அதிக பக்கங்களில் வெளிவந்து களிப்பைத் தரப்போகிறது? 'முரசு'ம் பெயருக்கேற்றாற் போல கூடிய கெதியில் 'தினமலராக' மலரவேண்டும் என்பதும் பேரவா+ஆசை!

முரசில் அதிகம் எழுத்துப்பிழைகள் இருப்பதில்லை. இருந்தும் 'முரசு 445'இல் குறிப்பாக 'சினி விசிட்' பக்கத்தில் எழுத்துப் பிழைகள் இருந்ததைக் காண முடிந்தது.

'பாப்பா முர'சில் ஏன் முன்னம் போல கனிந்த சிறுவர் கவிதைகளை பிரசுரிப்பதில்லை? மீண்டும் சேர்த்துக்கொண்டால் நன்றாக இருக்குமே? தற்போது முரசில் அடிக்கடி இல்லாவிட்டாலும்கூட; இடைக்கிடையாவது இனிக்கும் 'இலக்கியச் செய்திகள்' இல்லாதிருப்பது கவலைக்குரியது.

கோட்டைமுனை 'முத்துமணி', பதுளை.

என் உயிரிலும் கலந்த தினமுரசே!

தினமுரசு பத்திரிகையில் ஒவ்வொரு வாரமும் வெளிவரும் அனைத்து அம்சங்களும் எம்மை சிந்திக்க வைக்கின்றன. இதில் 'அரசியல் கட்டுரைகள்', 'சினிமா', 'செய்திகள்', 'சிறு கதைகள்', 'தேன் கிண்ணம்', 'தொடர் கதைகள்', சிறுவர்களுக்கான கதைகள் இப்படி எல்லா அம்சங்களும் எம்மை கவர்ந்தன. வாழ்க இன்னும் பல நூற்றாண்டுகள் தினமுரசு.

திருமதி ஜெயலக்ஷி உதயச்சந்திரன், அவிசாவளை.

என் அபிமான முரசே!

நீ சுமந்து வரும் ஆக்கங்கள் அனைத்தும் தரமானவை அதிலும் சிந்திக்க சிரிக்க வைக்கும் 'சிந்தியா பதில்கள்' அதிர வைக்கும் 'அரசியல்' பக்கம் வர்ணம் பகுதியில் அச்சிட்டு வெளியாகும் 'சினிமா' துணுக்குகள் இத்தனையும் என் மனதில் நிறைந்தவை. முரசே நீ வாழ்க. உன் பணி தொடர எனது வாழ்த்துக்கள்.

உலகநாதன் வனிதா, புங்குடுதீவு-02.

முத்தான முரசே!

சுடச்சுட செய்தி அள்ளி சுவையின் சிகரம் தொட்டு கற்பனை கடலில் மூழ்கி வாரம் ஒருமுறை வண்ணத் தமிழில் வாரிவரும் விடயங்கள் வாழ்க்கையை வசந்தமாக்கி, அறிவை கூர்மையாக்கி, சிந்தனையை கிளறிச் செல்லும் உன் பணி தொடர வாழ்த்தி மகிழும் வாசகி.

என்.கோகிலா, பெல்மோரல்.

மதிப்புக் குரிய முரசுக்கு, உன்னை முன்னைய இரு வருடமாக கட்டாரில் சந்தித்தேன். இந்த 1 வருடமாக சார்ஜாவில் சந்திப்பதை நினைத்துப் பெருமைப்படுகிறேன். எங்கே போனாலும் நீ எனக்கு நெருங்கிய நண்பன்தான். இங்கே நம் நாட்டுப் பத்திரிகைகள் நிறையக் கிடைக்கிறது எதுவும் உன்னைப்போல் அரசியல் 'சினிமா', 'கவிதை' இன்னும் எத்தனையோ அம்சங்களை உள்ளடக்கி வருவதில்லை என்ற உண்மையை நான் சொல்லத் தேவையில்லை. இனவாதத்திற்கு அப்பாற்பட்ட உன் நடையை நான் பாராட்டுகிறேன். இந்துக்களும் முஸ்லிம்களுமாய் எத்தனையோ ரசிகர்கள் உனக்கு. இவர்களில் எவரையும் விட்டுக் கொடுக்காமல் தொடரட்டும் உன் பணி. வாழ்க!

எம். ஹிப்ஸி, சார்ஜா.

அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தாலோ, உங்கள் முகவரிடம் திருப்பிக் கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

இந்தியாவை அனுசரித்துப்போவதில் ஜனாதிபதியும் பிரதமரும்

ஒருவரை ஒருவர் 'முந்திக்கொள்ளும்' நிலை!

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஜூன் மாதத்தில் ஆரம்பமாவதற்கு முன்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டு அந்த நாட்டுத் தலைவர்களுக்கு சமாதான முயற்சிகள் குறித்து விளக்கமளிப்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது பிரதமரின் இந்த விஜயம் அனேகமாக ஜூன் மாத நடுப்பகுதியில் இடம்பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தியாவுக்கு விஜயம் செய்திருக்கும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தற்போதைய சமாதான முன்னெடுப்புக்களில் இந்திய அரசாங்கத்தின் பொதுவான ஐயப்பாடுகள் குறித்து இந்தியத் தலைவர்களுடன் விவாதிப்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நான்கு நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு இந்தியா சென்றுள்ள திரு மதி குமாரணதுங்க செவ்வாய்க்கிழமை புதுடில்லியில் நடைபெற்ற மறைந்த காங்கிரஸ் தலைவர் மாதவராவ் சிந்தியாவின் நினைவு வைபவத்தில் உரையாற்றும் போது தெற்காசியாவில் பொதுப்படையான பயங்கரவாத அச்சுறுத்தல் குறித்து கருத்து வெளியிட்டார்.

பயங்கரவாதத்தை அரசியல் கொள்கையாக ஏற்றுக்கொள்ளும் வழிமுறையை கண்டித்த ஜனாதிபதி சந்திரிகா பிராந்தியத் தலைவர்கள் ஒன்றுபட்டு பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

புலிகளையும் அல்கைய்தா அமைப்பையும் ஒப்பிட்டுப் பேசிய ஜனாதிபதி பயங்கரவாதத்தின் மோசமான விளைவுகள் தனது அரசாங்கத்தின் காலத்திலேயே இடம்பெற்றதை நினைவு கூர்ந்தார்.

சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கை அரசியல் தலைவர்கள் உண்மையான கூட்டரசாங்கம் ஒன்றையும் பல்லின சமூகமொன்றையும் உருவாக்கத் தவறிவிட்டமையே இலங்கை இனப்பிரச்சனை கொடிய ஆயுதப் போராட்டமாக பரிணமிக்கக்காரணம் என்றும் அவர் சொன்னார்.

இதேவேளை தற்போதைய சமாதான முன்னெடுப்புகள் குறித்து இந்தியப் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய், உள்துறை அமைச்சர் அத்வானி, எதிர்க்கட்சித் தலைவி திரு மதி சோனியா காந்தி உள்ளிட்ட உயர் மட்ட இந்தியத் தலைவர்களுடன் திரு மதி குமாரணதுங்க கலந்துரையாட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இந்த சந்திப்புக்கள் வியாழக்கிழமை இடம்பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

முன்னதாக இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சிங்கை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

இது இவ்வாறிருக்க ஜனாதிபதியின் இந்திய விஜயத்துக்கு மத்தியில் அமைச்சர் ஜீ.எல். பீரிஸும் இந்தியா சென்று அந்த நாட்டுத் தலைவர்களை சந்தித்து வருகிறார். அவரும் தற்போதைய சமாதான முன்னெடுப்புக்கள் குறித்து இந்திய தலைவர்களுக்கு விளக்கமளித்துள்ளார். ■

பஸ் கட்டணம் அதிகரிக்கும்

எரிபொருள் விலையேறியதையடுத்து பஸ் கட்டணங்களும் அதிகரிக்கப்படவுள்ளன. அதிகரிக்கப்பட்ட கட்டணத்தைச் சீராக்கும்பொருட்டு பஸ் கட்டணங்களை உயர்த்த வேண்டியிருப்பதாகத் தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது. இதற்கு முன்பே டீசல் விலை அதிகரிப்பின் போதும் பஸ் கட்டணங்களை உயர்த்த தமது சங்கம் முடிவுசெய்யபோது அரசு சில சலுகைகளை வழங்கிக் கட்டண அதிகரிப்பைத் தவிர்த்ததாகவும், இம்முறை கட்டண அதிகரிப்பதைத் தவிர வேறு வழிகிடையாது என்றும் அந்தச் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் கையடக்கத் தொலைபேசிக் கட்டணங்கள் எதிர்வரும் 8ம் திகதி தொடக்கம் 13 சதவீதத்தினால் அதிகரிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ■

புலிகள் மீது புகார்!

கிழக்குக் கடற்பரப்பில் படகுகளில் ஆயுதங்களுடன் நடமாடிய கடற்புலிகள் குழுவொன்று கடற்படையினரால் தடுத்துநிறுத்தப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாக நோர்வேயின் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு முறைப்பாடு செய்யப்பட்டது.

திருகோணமலைக்கு வடக்காக 8 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள கடற்பரப்பில் புலிகளின் படகுத் தொடரணியொன்றை அவதானித்த கடற்படையினர் அவற்றைச் சுற்றி வளைத்துத் தடுத்து நிறுத்தினர். பின்னர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினதும், கடற்படைத்தலைமையகத்தினதும் உத்தரவாதத்தின் பேரில் படகுகளிலிருந்த 40க்கும் மேற்பட்ட புலி உறுப்பினர்கள் கரைக்குச் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

கொழும்பிலும் மலையகத்திலும் புலிகளின் அலுவலகங்கள்

வவுனியாவில் பொலிஸ், நீதிமன்றம்...?

வடக்கு கிழக்கிற்கு வெளியில் புலிகளின் அரசியல் நடவடிக்கைகளை விஸ்தரிக்கும் திட்டத்தின் முதல் கட்டமாக மலையகத்திலும், கொழும்பிலும் அலுவலகங்கள் அமைக்கப்படவிருக்கின்றன.

கொழும்பு அலுவலகம் தமிழர்கள் அதிகமாக வாழும் வெள்ளவத்தைப் பகுதியில் அமையவிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. மலையகக் காரியாலயம் தலவாக்கலையில் அல்லது கொட்டகலையில் அமையலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், வவுனியாவில் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதியில் பொலீஸ் நிலையமொன்றையும், நீதிமன்றமொன்றையும் அமைக்கப் புலிகள் திட்டமிட்டுவருவதாகக் கூறப்படுகின்றது. இது தொடர்பாகப் பாதுகாப்புத் தரப்பினர் அரசாங்க உயர்மட்டத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளனர்.

வவுனியாவில் புலிகளின் அலுவலகங்களில் வந்து குவியும் முறைப்பாடுகளை விசாரணை செய்யவே பொலீஸ் நிலையத்தையும், நீதிமன்றத்தையும் அமைப்பதற்கு உத்தேசித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குண்டுவெடிப்பில் படைவீரர் மரணம்

அம்பேபுஸ்ஸ இராணுவ பயிற்சி முகாமிலிருந்த குண்டு ஒன்று தவறுதலாக வெடித்ததில் ஒரு படைவீரர் கொல்லப்பட்டதுடன், மேலும் முன்று படையினர் காயமடைந்தனர்.

கடந்த 20ம் திகதி இராணுவ வீரர்கள் பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தபோதே இந்தக் குண்டு வெடிப்பு அசம்பாவிதம் நடைபெற்றுள்ளது. ●

அன்ரன் பாலசிங்கம் லண்டன் பயணம்!

புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் மீண்டும் லண்டன் திரும்பியுள்ளார். அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான சமாதான முன்னெடுப்புக்கள் குறித்துப் பிரபாகரனுடன் கலந்தாலோசிக்கவென இம்மாத ஆரம்பத்தில் இலங்கை வந்திருந்த பாலசிங்கம் புதன்கிழமை மாலைதீவு வழியாக மீண்டும் லண்டன் திரும்பியதாக அறிவிக்கப்படுகின்றது.

இவர் வருகை தந்த வழியாகவே சிறிய விமானம் ஒன்றில் இரணைமடுவிலிருந்து மாலைதீவுக்குச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவரது விசா நடைமுறைகளைக் கையாளும் பொருட்டுக் குடிவரவு குடியகல்வுத் திணைக்களஅதிகாரிகள் வன்னிசென்றிருந்தனர்.

பெயர்ப்பலகையில் உள்ள "இலங்கை"யை அழிக்குமாறு வவுனியாவில் புலிகள் உத்தரவு!

வவுனியாவில் உள்ள அரசாங்க அலுவலகங்கள் மற்றும் பொது இடங்களில் உள்ள பெயர்ப்பலகைளில் காணப்படும் "இலங்கை" என்ற சொல்லை அழிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் புலிகளால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் வவுனியா நகரசபை எல்லைக்குள் இருக்கும் சகல வீதிகளுக்கும் உயிரிழந்த புலிகளின் பெயர்களைச் சூட்டுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. சில பெயர்ப்பலகைகளில் ஏற்கனவே "இலங்கை" அழிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக வவுனியா நகரசபை மைதானத்தை இனிமேல் சிங்கள மக்களின் கலாசார நிகழ்ச்சிக்காக வழங்கக் கூடாதெனவும், அங்கு நடைபெறும் இசைநிகழ்ச்சிகளில் சிங்களப் பாடல்கள் இசைக்கக் கூடாதெனவும் புலிகளால் அறிவுறுத்தப்பட்டதாகப் படைவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

உயர்மட்ட ஆலோசனையின் பேரில் புலிகளின் வவுனியா அலுவலகம் ஊடாகவே இந்த உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுவருகின்றன.

திறைசேரியிலுள்ள தங்கத்தை விற்க அரசாங்கம் முடிவு!

ஜே.வி.பி இயக்கத்தின் தலைவர் கைது செய்யப்பட்டபோது அவர் மறைந்திருந்த வலப்பனை சென் மேரீஸ் தோட்டத்தில் புதைத்துவைக்கப்பட்டிருந்து கைப்பற்றப்பட்ட சுமார் 500 கிலோ நிறைகொண்ட தங்கத்தைப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அரசாங்கம் எதிர்நோக்கும் மோசமான நிதிநெருக்கடிக்கு மத்தியில் தற்போது திறைசேரியில் பாதுகாப்பாக இருக்கும் இந்தத் தங்கம் முழுவதையும் விற்பனை செய்வதற்கான அனுமதியைப் பெறும் அமைச்சரவைப் பத்திரம் புதன்கிழமை சமர்ப்பிக்கப்படவிருந்தது.

கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் பந்துல குணவர்தன இந்தப் பிரேரணையை அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்க விருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மண்சரிவில் ஒருவர் பலி!

பதுளை-பண்டாரவளை வீதியிலுள்ள தெமோதர என்ற இடத்தில் செவ்வாய்கிழமை இரவு ஏற்பட்ட மண்சரிவில் குறைந்தபட்சம் ஒருவர் கொல்லப்பட்டதுடன் 30 பேர் வரை காணாமல் போயுள்ளனர். கர்ணாமல் போனோரில் சிலர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.மண்சரிவு ஏற்பட்ட இடத்தைப் பார்வையிட வந்திருந்தவர்கள் நின்றிருந்த திசையை நோக்கிப் பாரியளவில் மண்சரிந்துவந்தபோதே இவர்கள் உயிருடன் முடப்பட்டனர்.

இதேவேளை நாடுமுழுவதிலும் மாலைவேளையில் தொடரும் கடுமையான மழையினால் மின்னல்தாக்கிக் கடந்த இரு மாதங்களில் 35 பேர் வரை உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது. ■

கரிகாலன் வீட்டுக்காவலில்...?

புலிகள் இயக்கத்தின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டப் பொறுப்பாளராக இருந்த கரிகாலன் பிரபாகரனின் உத்தரவின் பேரில் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரபாகரனின் உத்தரவுக்குக் கீழ்படியாது கிழக்கில் தன்னிச்சையான நடவடிக்கைகளில் கரிகாலன் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே அவர் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கிழக்கில் முஸ்லிம்கள் தொடர்பாக அண்மைக்காலத்தில் கரிகாலன் வெளியிட்டிருந்த கருத்துக்கள் பலத்த சர்ச்சைகளுக்கு உள்ளாகியிருந்ததுடன், முஸ்லிம்களிடமிருந்து வரி அறவிடுவது கரிகாலனின் உத்தரவின் பேரிலேயே நடைபெற்றதாகவும் கூறப்பட்டு வந்தது.

இதுவிடயமாக புலிகளின் தலைமைப் பீடததிற்கும் கரிகாலனுக்கும் ஏற்பட்ட முரண்பாட்டையடுத்து அவர் வன்னிக்கு அழைக்கப்பட்டு, கிழக்கு மாகாணப் பொறுப்பாளராக விசு நியமிக்கப்பட்டிருந்தார். தற்போது கரிகாலன் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருப்பதாக வன்னித்தகவல்கள் தெரிவிக்கின்றன. ■

விசேட அதிரடிப்படையைக் கலைக்கும் பிரேரணை!

பொலிஸ் தலைமையகம் மறுப்பு!

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் விசேட அதிரடிப்படையினரின் சேவை தேவையில்லை எனவும், விசேட அதிரடிப்படையைக் கலைக்குமாறும் பதில் பொலிஸ்மா அதிபர் பி.ஈ. ஆனந்தராஜா பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளார்.

பாதுகாப்பு ஏற்பாடுகள் இனிமேலும் இறுக்கமாகத் தேவையில்லை என்பதால் விசேட அதிரடிப்படையினரைக் கலைத்து அவர்களைச் சாதாரண பொலீஸ் கடமைகளுக்கு மாற்றலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த திங்களன்று நடந்த வைபவமொன்றில் பதில் பொலீஸ் மா அதிபர் விசேட அதிரடிப்படையினரைக் கலைக்க வேண்டும் என்று வெளியிட்ட கருத்துக்கு உடனடியாகக் கண்டனங்கள் எழுந்துள்ளன. விசேட அதிரடிப்படையின் டீ.ஐ.ஜி. இத்தீர்மானத்தை கண்டித்துள்ளதோடு நாட்டின் எந்தச் சூழ்நிலையிலும் இவர்களின் சேவை அவசியம் எனவும் கூறியுள்ளார்.

இதேவேளை பதில் பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜாவின் கூற்று ஊடகங்களினால் திரிபு படுத்தப் படத்தப்பட்டுள்ளதாகவும் விசேட அதிரடிப்படையினரை தற்போதைய சமாதனா சூழ்நிலையில் சாதாரண பொலிஸ் சேவைக்குப் பயன்படுத்த முடியும் என்று மாத்திரமே அவர் தெரிவித்ததாகவும் பொலிஸ் தலைமையகம் கூறியுள்ளது. ■

அன்ரன் பாலசிங்கத்தின் கருத்து!

அரசாங்கம் நிராகரிப்பு!

புலிகளின் தலைவர் பிரபாகரனே தமது ஜனாதிபதியும், பிரதமரும் ஆவார் எனப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கூறியதை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

சமீபத்தில் வன்னியில் பிரபாகரன் நடாத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அன்ரன் பாலசிங்கம் மேற்படி கருத்தை வெளியிட்டிருந்தார். இந்தக் கருத்துத் தொடர்பாக ஜே.வி.பி அரசிடம் கேள்வியெழுப்பியிருந்தது. இதற்கு அரசாங்கத்தின் ஊடகப் பேச்சாளர் கைரிக ரூபசிங்க பதிலளித்துள்ளார்.

பிரபாகரனே தமது ஜனாதிபதியும்,பிரதமரும் என்று அன்ரன் பாலசிங்கம் கருதுவாரெனில் அவர் ஏன் தனது விசா அனுமதியை நீடிக்குமாறு குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்திடம் கோரிக்கை விடுக்கவேண்டும். அன்ரன் பாலசிங்கம் இலங்கை வருவதற்கு விசா அனுமதி வழங்கியதும், அத்துடன் அவரது விசாவை மேலும் நீடிக்கக் கூடியதும் குடிவரவு குடியகல்வுத் திணைக்களமேயாகும் என்றும் அந்தத் திணைக்களம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கீழேயே இயங்கிவருவதாகவும் அவர் தெரிவித்தார். ■

முரசம்

யாழ். தரைப்பாதைப் பயணத்தின் சிரமங்கள் தீர வேண்டும்

அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.

புதிய ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்ததும் சமாதானத்துக்கான வாசற் கதவு அகலத் திறக்கப்பட்டுவிடுமென மக்கள் மகிழ்ச்சி கொண்டது உண்மையே.

ஒரு பாரிய இராணுவ நடவடிக்கையால்கூடத் திறக்க முடியாது போய்விட்ட யாழ்ப்பாணப் பாதையை சமாதானத்தால் திறந்ததானது யுத்தத்தை விடச் சமாதானத்தால் சாதிக்கக் கூடியது அதிகம் என்பதை இது விளம்பி நிற்கின்றது.

இதை நாம் மெச்சுகின்ற அதேவேளை திறக்கப்பட்ட யாழ்ப் பாதையில் பொதுமக்களுக்கான போக்குவரத்து சிரமமின்றி நடக்க ஆவன செய்ய வேண்டியதும் அவசியமானதாகும்.

பல சோதனைச் சாவடிகளில் கெடுபிடிகளுக்குள்ளாகிப் பயணம் செய்ததில் பெரும் துன்பங்களுக்கும் உபாதைகளுக்கும் மக்கள் உள்ளானதை எமது தமிழ் அரசியல்வாதிகள் அடிக்கடி சுட்டிக்காட்டி விசனம் தெரிவித்து வந்திருந்தனர்.

அவை நீக்கப்படவேண்டுமென்பதே இவர்கள் யாவரதும் நிர்ப்பந்தமாகத் தொடர்ந்தும் இருந்து வந்தது.

அதேவேளை இப்போது யாழ். மக்களுக்கு தென்பகுதிக்கு வந்து செல்ல வசதியாக ஒரு தரைப்பாதை திறக்கப்பட்டிருக்கின்ற தருணத்தில் அதைத் திறப்பதற்கு ஒத்துழைத்த சகல தரப்பினர்களுக்கும் நன்றி தெரிவிக்கும் அதே வேளையில் இப் பயணத்தை நிம்மதியானதும் சௌகரியமானதுமான பயணமாக அமைத்துக் கொடுப்பதில் இதே தமிழ் அரசியல்வாதிகள் தமது செல்வாக்கைச் முறையாகப் பிரயோகிக்க வேண்டும்.

இரு தரப்பினருடனும் நல்லுறவு கொண்டுள்ள, இவர்கள், தம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கடப்பாடு கொண்டுள்ளவர்கள் என்ற வகையிலாவது இத் தடங்கலை நீக்கத் தங்கள் குரலை உயர்த்த வேண்டும்.

இத் தரைப்பாதை மூடப் பட்டிருந்ததால் யாழ். பொருளாதாரமும் முடமாக்கப் பட்டிருந்தது. உற்பத்திப் பொருட்கள் சந்தையின்றித் தேங்கின. அத்தோடு தென்பகுதிப் பொருட்களின் விலை பன்மடங்கு உயர்ந்து கள்ளச் சந்தை வியாபாரம் தலைதூக்கியது.

இப்போது திறக்கப்பட்ட தரைப்பாதை இந் நிலைமைகளை மாற்றியமைக்க வழிகோல வேண்டும்.

யாழ். பயணிகள் தமது பயணத்தின்போது மூன்று இடங்களில் பஸ்ஸில் ஏறி இறங்கி தமது கனதியான பொதிகளைச் சுமந்துகொண்டும் மறுபுறம் தமது ஆவணங்களைக் காண்பித்துக்கொண்டும் நீண்ட வரிசைகளில் வெய்யிலில் நின்று சோதனைச் சாவடிகளுக்கூடாக கடந்து செல்லவும் வேண்டியிருக்கிறது.

இன்னும் பொருட்களைக் கொண்டு செல்ல வியாபாரிகளுக்கும் வாகனங்களுக்கும் அனுமதி கிடைக்கவில்லை.

இந்தச் சிரமமான நடைமுறையை மாற்றி தற்போது கிடைத்திருக்கின்ற வரப்பிரசாதமான இத் தரைவழிப் பாதையின் பயணங்களை மக்களுக்கு இடையூறற்றதாக ஆக்குவதுதான் சமாதான முயற்சியின் பயன்மிக்க இச் சாதனையை அர்த்தமுள்ளதாக்கும்.

■■

மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

பேச்சுவார்த்தை மேசையில் அரசாங்கத்தின் வியூகம்!

புதிய அரசாங்கம் பதவிக்கு வந்து இந் நாட்டில் சமாதானத்தை நிலைநாட்டும் முயற்சியில் முதற் கட்டம் மிக விமரிசையாக நிறைவேறிவிட்டது.

புலிகளுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஈட்டியுத்த நிறுத்தம் ஒன்றுக்கு வழிகண்டு விட்டாயிற்று.

அதேவேளை நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளாக அப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் பலவும் நடந்தேறி வருகின்றன.

கட்டுப்பாடற்ற பிரதேசங்களுக்கான பொருளாதாரத் தடைகளை நீக்குதல், பாஸ் நடைமுறைகளை நீக்குதல், ஏனைய இயக்கங்களிடமிருந்து ஆயுதங்களை மீளப் பெறல், யாழ்ப்பாணத்துக்கான ஏ9 வீதியைத் திறத்தல், புலிகளின் அரசியல் வேலைகளுக்காக அவர்களை கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குப் படிப்படியாக அனுமதித்தல் கண்காணிப்புக் குழுக்களை நடவடிக்கைகளில் ஈடுபடுத்தல்... என்றவாறு இவையாவும் அச்சொட்டாக ஒப்பந்தத்தில் கூறப்பட்ட கால அட்டவணைப்படி இல்லாவிட்டாலும் பருமட்டாக அவற்றை அனுசரித்தவாறே நடந்தேறி வருகின்றன.

இந் நிலையில்தான் புலிகள் தலைவர் பிரபாகரன் ஒரு தசாப்த காலத்துக்குப் பின்னர் வெளிப்படையாகத் தோன்றி, பத்திரிகையாளர் மாநாடொன்றை நடத்தி, தமது நிலைப்பாடுகளைப் பற்றிக் கருத்து வெளியிட்டிருந்தார்.

அவர் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் தனக்கிருக்கும் நம்பிக்கையை வெளிப்படுத்தியிருந்த அதேவேளை தான் தமிழீழக் கோரிக்கையையும் ஆயுதப் போராட்டத்தையும் இன்னும் கைவிடவில்லையென்பதையும் தெளிவு படுத்தியிருந்தார்.

மக்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு ஒன்றை அரசாங்கம் முன்வைக்கும்போதுதான் தாம் தமிழீழக் கோரிக்கையைக் கைவிடுவது பற்றிச் சிந்திக்க முடியுமென்றும் அதற்கான காலம் இன்னும் வரவில்லையென்றும் கூறியிருந்தார்.

அத்தோடு அத்தீர்வானது தமிழர் தாயகம், தேசிய இனத்துக்கான அங்கீகாரம், சுயநிர்ணய உரிமை ஆகிய அடிப்படை அம்சங்களைக் கொண்டிருப்பது அத்தியாவசியம் என்பதையும் சுட்டிக் காட்டியிருந்தார்.

அதேவேளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சமாதானத்துக்கான முன்னெடுப்புகளை வரவேற்று அவர்மீது பிரபாகரன் நம்பிக்கை தெரிவித்திருந்த அதேவேளை ரணில் தம்மைத் தெரிவு செய்த மக்களுக்கே பிரதமரென்றும் இங்கு தமிழீழத்தில் பிரதமரும் ஜனாதிபதியும் பிரபாகரன்தான் என்றும் அன்ரன் பாலசிங்கம் அப் பத்திரிகையாளர் மாநாட்டில் பிரகடனம் செய்திருந்தார்.

இக் கருத்துக்கள் அரசாங்கத்தைச் சற்றுச் சங்கடத்தில் ஆழ்த்தியிருந்தாலும் ரணில் அவற்றை வெளிக்காட்டாமல் இதில் பிரபாகரன் சமாதானப் பேச்சுக்களில் வெளியிட்ட நம்பிக்கையை வரவேற்றுப் பாராட்டியிருந்தார்.

எனினும் பிரபாகரனின் இந்தப் பத்திரிகையாளர் மாநாட்டுப் பேட்டியையிட்டு ரணில் கருத்துக் கூறுகையில் தடாகத்தின் ஆழமான பகுதியில் இறங்கி நீந்தப் பழக முற்பட்டதைப் போன்ற முயற்சி இது எனத் தெரிவித்திருந்தார்.

தமிழீழத்தில் பிரபாகரனே ஜனாதிபதியும் பிரதமரும் என்று அங்கு கூறப்பட்டதையிட்டு ரணில் நேரடியாக மறுப்போ அதிருப்தியோ தெரிவிக்காவிட்டாலும் அவரது பிரதமர் காரியாலயத்திலிருந்து அதற்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை இவ்வார முற்பகுதியில் கதிர்காமத்திலிருந்து யாழ்ப்பாணம் புறப்பட்ட சமாதான யாத்திரையை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய ரணில், பிரிக்கப் படாத ஐக்கிய இலங்கைக்குள்தான் தீர்வு காணப்படுமென்பதை வலியுறுத்திப் பேசியுள்ளதானது பிரபாகரனின் பத்திரிகையாளார் மாநாட்டை அடுத்து தெற்கில் எழுந்த ஐயப்பாடுகளை ஈடு செய்ய வேண்டிய அழுத்தத்தினாலேயே என்று புலப்படுகிறது.

எவ்வாறெனினும் இப்போது கேள்வி என்னவென்றால் அடுத்த கட்டம் என்ன என்பதே.

அடுத்த கட்டத்துக்கான நுழைவாயிலில் புலிகளால் முன்வைக்கப்பட்ட இரு முக்கிய முட்டுக் கட்டைகள் உள்ளன.

இதில் முதலாவதும் பிரதானமானதும் புலிகள் மீது இலங்கை அரசாங்கம் விதித்துள்ள தடையை நீக்குவதாகும்.

இரண்டாவது புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அரசாங்கம் இன்னும் நிறைவேற்றாதுள்ள முக்கிய விடயங்களை நிறைவேற்றிய பின்னர்தான் பேச்சுவார்த்தைக்குச் செல்ல முடியுமென நோர்வே ஏற்பாட்டாளர்களுக்கு பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

இதில் பாடசாலைகள், கோயில்கள், பொது மக்களின் கட்டடங்களில் முகாமிட்டுள்ள அரச படையினர் ஒப்பந்தத்தில் உறுதியளித்தபடி அவற்றை விட்டு வெளியேற வேண்டுமென்பதைப் புலிகள் வலியுறுத்தி நிற்கின்றனர்.

இவற்றை நிறைவு செய்தாலே பேச்சுவார்த்தையென்ற அடுத்த கட்டத்தில் கால் பதிக்க முடியும் என்ற நிலை அரசாங்கத்துக்குத் தோன்றியுள்ளது.

அரசாங்கமும் தனது தரப்பில் சில முறைப்பாடுகளைச் செய்துள்ளது.

ஏ9 வீதியில் தங்குதடையற்ற போக்குவரத்துக்கு புலிகள் அனுமதிக்கவேண்டுமென்றும், தனியார், மற்றும் அரசாங்க போக்குவரத்து வாகனங்களை அனுமதிக்க வேண்டுமென்றும், ஆயுதந் தாங்காத இராணுவத்தினர் அப்பாதையைத் தமது தென்பகுதிக்கான போக்குவரத்துக்குப் பயன்படுத்த அனுமதிக்க வேண்டுமென்றும் ஒப்பந்தத்தில் உடன்பட்டுள்ளதை வலியுறுத்தி முறைப்பாடு செய்துள்ளனர்.



புலிகள் தடை செய்யப்பட்டிருக்கும் நிலையில் தாம் பேச்சுவார்த்தையில், கௌரவமான, சரிசமமான பங்காளிகளாகக் கலந்துகொள்ள முடியாதென்பதை அன்ரன் பாலசிங்கமும் அங்கு தெளிவாக்கியிருந்தார்.

எனினும், அதற்குச் சாதகமாகவே அரசாங்கமும், புலிகளின் இக் கோரிக்கையைத் தாம் சாதகமாக ஆராய்வதாகத் தெரிவித்திருந்தது.

எனினும் சர்வதேச நாடுகள் புலிகள்மீது விதித்துள்ள தடையைப் பாதிக்காத வகையில் இலங்கையில் புலிகள் மீதான தடையை இடை நிறுத்தி வைப்பது பற்றியே அரசாங்கம் சிந்திப்பதாக அரச தரப்பால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடை நிறுத்தமென்பதற்கும் தடையை நீக்குவது என்பதற்கும் பாரிய வேறுபாடு உள்ளது.

இடை நிறுத்தமென்பது தடை என்பதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைத் தற்காலிகமாக நிறுத்தி வைப்பதே.

இதன் அர்த்தம் தடை நீக்கப்பட்டு விட்டதென்பதல்ல.

தடை என்பதன்மூலம் புலிகள் பேச்சுவார்த்தைகளில் பங்கு கொள்வதற்கு இருக்கும் நடைமுறை இடையூறுகளைக் களைவது மட்டுமே இதில் சாத்தியமாகும்.

இது கிட்டத்தட்ட குற்றவாளி ஒருவருக்கு பிணை வழங்குவதற்கு மட்டுமே ஒப்பானது, குற்றவாளியை விடுவிப்பதற்கு ஒப்பானதல்ல.

பிணைமூலம் அவரது செயற்பாடுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதேயன்றி குற்றவாளியல்ல என்ற கருத்தை ஒருபோதும் கொடுக்காது.

எனவே உலக நாடுகள் இலங்கையில் தடை நீக்கப்பட்டுவிட்டதென்ற பொருளில் அதற்கமைய தமது நாடுகளில் மாற்றங்களைச் செய்யவேண்டிய அவசியமில்லை.

இடைநிறுத்தத்தை எப்போதும் அரசாங்கம் மீளப் பெற்றுக் கொள்ளலாம்.

அப்படி மீளப் பெற்றுக் கொள்ளப்படும்போது தடை மீண்டும் முழு அளவில் அமுலுக்கு வரும்.

இத்தகைய விதத்தில்தான் தடை நீக்கத்தை அரசாங்கம் அணுகுமாக இருந்தால் அதற்கு புலிகள் ஒத்துவருவார்களா என்பதே அடுத்த கேள்வி.

அதே பத்திரிகையாளர் மாநாட்டில் இதுபற்றி எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்கு, “ இல்லையில்லை தடை முறையாக நீக்கப்பட வேண்டும்” என பாலசிங்கம் திட்டவட்டமாகக் கூறியிருந்தார்.

அத்தோடு, இலங்கையில் தடை நீக்கப்படுவதன் மூலம் தாம் தம்மைத் தடை செய்துள்ள ஏனைய நாடுகளிடமும் தடையை நீக்கும்படியான அழுத்தத்தை மேற்கொள்வார்களென்றும் அதுவே தமது முலோபாயமென்றும் பாலசிங்கம் வெளிப்படையாகத் தெரிவித்திருந்தார்.

ஆனால் அவர்களது இத்தகைய நோக்கத்துக்குப் பயன்படாத வகையில், மாறாக அதனைத் தடுக்கும் வகையில் இவ் இடைநிறுத்தல் ஏற்பாட்டை ஒழுங்கு செய்வதானது புலிகளுக்கு விசனத்தை ஏற்படுத்தும் ஒன்றாகவே அமையும்.

ஆயினும், புலித் தடையை நீக்குவதென்பதும் அரசாங்கத்துக்குச் சற்றுச் சிரமமான காரியமே.

ஏனெனில் புலித் தடையை விதித்தது ஜனாதிபதியே.

ஜனாதிபதி விதித்த தடையை நீக்குவதானால் அத் தடை நீக்க அறிவிப்பில் கையொப்பமிடவேண்டியதும் ஜனாதிபதியே.

எனவே பிரதமர் ரணிலால் அதனை நேரடியாகச் செய்ய முடியாத நிலைமை ஒன்று உள்ளது.

ஆனாலும் அதற்கு மாற்று வழிவகையொன்றும் உள்ளது.

அதாவது புலிகள் மீதான தடை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ்தான் தற்போது அமைந்துள்ளது.

அவசரகாலச் சட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட இத் தடையானது, சென்ற வருடம் கடந்த அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தைக் கைவிட்டபோது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டது.

இப் பயங்கரவாதத் தடைச் சட்டம் பாராளுமன்றத்தின் அதிகாரத்தின் கீழ் வருகிறது.

எனவே பாராளுமன்றம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக ரத்துச் செய்யுமானால் அத்துடன் சேர்ந்து இப் புலித்தடையும் ரத்தாகிவிடும்.

இத் தீர்மானத்தை பாராளுமன்றம் சாதாரண பெரும்பான்மையுடனேயே நிறைவேற்ற முடியும்.

ஆனால் கேள்வி என்னவென்றால் இவ் அரசாங்கம் அதைச் செய்ய முன்வருமா என்பதே.

அவ்வாறு இச் சட்டத்தை ரத்துச் செய்ய விளையும்போது தென்பகுதியில் தற்போது மெதுவாகச் சூடுபிடித்துவரும் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு அவல் கிடைத்ததாகிவிடுமென அரசாங்கம் ஒருபுறம் அஞ்சுகிறது.

மறுபுறம் இன்னும் தீர்வுகள் பற்றி இணக்கத்துக்கான ஆரம்பமே ஏற்படாத நிலையில் இச் சட்டத்தை முற்றாக வாபஸ் பெறுவதென்பது ஆபத்தானதாகிவிடுமோ எனவும் அரச படைகளின் மனோநிலையைப் பாதித்து விடுமோ எனவும் அரசாங்கம் தயங்குகிறது.

இதேவேளை பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் நீண்டநாள் வழக்கு விசாரணையின்றி இருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் விவகாரத்திலும் இப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் சில சரத்துக்களை நீக்குவது பற்றி அழுத்தங்கள் ஏற்பட்டு வருகின்றன.

இதேவேளை புலிகளும் இப் பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படவேண்டுமென்பதை வலியுறுத்தியுள்ளனர்.

பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்தால் அங்கும் இதுபற்றிய நிர்ப்பந்தத்தை புலிகள் அரசாங்கத்துக்கு வழங்குவரென்பதை அன்ரன் பாலசிங்கம் கோடிகாட்டியிருந்தார்.

இப்போது இவற்றுக்கு மத்தியில் சிக்கியிருக்கும் அரசாங்கத்தின் முடிவுகளிலேயே அடுத்த கட்ட நகர்வுக்கான வழிவகைகள் தங்கியிருக்கின்றன.

இதற்கு குறைந்த பட்சம் புலிகளின் தடையை நீக்குவது அவசியமான விடயமாகிறது.

உலகில் பல்வேறு நாடுகளில் போராட்ட இயக்கங்களோடு தடையை நீக்காது பேச்சுவார்த்தைகள் நடத்திய உதாரணங்கள் உள்ளன.

பாலஸ்தீன விடுதலை இயக்கத்துடனான பேச்சுவார்த்தை, பிருத்தானியாவில் ஐ.ஆர்.ஏ. இயக்கத்துடனான பேச்சுவார்த்தை என்பன போன்ற உதாரணங்களைச் சொல்லலாம்.

ஆனாலும் இதில் உள்ள பிரதான விடயமென்னவென்றால் புலிகள் அதனை ஏற்றுக் கொள்வார்களா என்பதே.

புலிகள் தம்மீதான தடையை நீக்காவிடில் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள முடியாதென மறுக்கும்போது அரசாங்கம் அதனை எவ்வாறு சமாளிக்கப் போகிறது என்பதே.

எனவே அடுத்த கட்டத்துக்கான வியூகம் பற்றி அரசாங்கம் இப்போது தீவிரமாகச் சிந்திக்க வேண்டியுள்ளது.

முதற் கட்டத்தைப் பொறுத்தவரை அரசாங்கம் சோதனையில் தேறியுள்ளதென்றே எடைபோடக் கூடும்.

ஆனால் அடுத்த கட்டமென்பதுவும் உடனடித் தீர்வைப் பற்றியதாக இருக்கப் போவதில்லை என்பதையே தற்போதைய நிலைவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

அது தீர்வு ஒன்றை ஈட்டும் வரையிலான ஒரு இடைக்கால முன்னேற்பாடு குறித்ததாகவே அமையுமெனத் தெரிகிறது.

பேச்சுவார்த்தைகளில் ஏற்பாட்டாளர்களாக செயற்படும் நோர்வே அரசாங்கம் சார்பில் அண்மையில் இலங்கை வந்து இருதரப்புடனும் பேச்சுவார்த்தை நடத்திவிட்டுத் திரும்பிய நோர்வே நாட்டு பிரதி வெளிநாட்டு அமைச்சர் விடார் ஹெல்கிசன் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான செயற்பாடுகள் எதிர்பார்த்ததை விடத் துரித கதியில் முன்னேறுகின்றதென பெருமைப்பட்டிருந்தார்.

அது உண்மையானால் இப்போது அடுத்த கட்ட நகர்வுக்குத் தடையாக விழுந்திருக்கும் இந்தப் பூட்டு உடைபடவேண்டும்.

பொறுத்திருந்து பார்க்கலாம்! ■

முஸ்லிம்களின் அரசியல் எதிர்காலம்?

சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கை வரலாற்றில் அரசியல் ரீதியில் மிகவும் முக்கியத்துவம் மிக்க ஒரு காலப்பகுதியில் இன்று முஸ்லிம் சமூகம் காணப்படுகின்றது. சகலஇன மக்களையும் கணிசமாகத் துன்புறுத்திய இனப்பிரச்சனை நிரந்தர முடிவுக்கும் ஆபத்தான தொடர்ச்சிக்கும் இடைப்பட்ட ஓர் அந்தரமான நிலையில் இன்றிருக்கின்றது.

இனநெருக்கடி அரசியல் ரீதியில் சுமுகமாகத் தீர்க்கப்படுமாயின் அந்த அரசியலுக்குள் முஸ்லிம்களின் எதிர்காலம் என்ன? என்ற கேள்வி ஒருபுறமும் துரதிஷ்டவசமாக யுத்தம் தொடருமாயின் அடுத்த கட்டப் போர் நிலைவரத்தில் இஸ்லாமிய சமூகம் எத்திசைநோக்கித் தமது ஆதரவுக் கரங்களை நீட்டப்போகிறது? என்ற கேள்வியும் இன்று அவர்கள் முன் நிற்கிறது.

தேசியப் பிரச்சனையின் ஒரு பக்க சம பங்குதாரரான புலிகள் இயக்கம் முன்னொரு போதுமில்லாத அளவு முஸ்லிம்கள் தொடர்பில் ஆர்வம் காட்டத் தொடங்கியுள்ளது. வடக்கிலிருந்து முஸ்லிம்களை வெளியேற்றிய வரலாற்றுத்தவறை ஒப்புக்கொள்ளும் புலிகள் இயக்கமும் அதன் தலைவரும் இஸ்லாமிய சமூகத்தின் உரிமைகளை மதிப்பதாகத் திரும்பத் திரும்பக் கூறிவருகின்றார்கள்.

ஆனால், முஸ்லிம்கள் கேட்பது போன்ற ஒரு காத்திரமான தீர்வுக்கு அல்லது நிர்வாக அலகுக்குப் புலிகள் உடன்படுவார்களா என்பதற்குப் புலிகள் சார்பிலோ, முஸ்லிம்களின் அரசியல் தலைமைகளாலோ இதுவரையில் தெளிவான பதிலேதும் தெரிவிக்கப்படவில்லை.

அரசியல் அபிலாஷை என்ற விடயத்தில் முஸ்லிம்களின் கோரிக்கைக்கும் "உரிமைகள் மதிக்கப்படும்" என்ற புலிகளின் ஒப்புதலுக்கும் இடையில் கணிசமான இடைவெளி காணப்படுகின்றது. எதிர்காலத்தில் நிரந்தரத் தீர்வொன்றுக்கான அதிகாரப் பரவலாக்கம் குறித்த பேச்சுக்கள் இடம்பெறும் பட்சத்தில் புலிகள் தரப்பும், முஸ்லிம் பிரதிநிதிகளும் இந்த இடைவெளியை எவ்வாறு நிவர்த்தி செய்துகொள்வார்கள் என்பது முக்கியமான விடயம்.

முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் கோரிக்கைகள் காலத்துக்குக் காலம் கனதியில் மாறுபட்டதாகவும் அரசியல் நிலைவரங்களுக்கு ஏற்ற வகையில் வளைந்து கொடுக்கும் விதத்திலும் அமைந்திருந்ததை அவதானிக்கலாம். மறைந்த தலைவர் அஷ்ரப் தன்னையொரு உறுதியான அரசியல் சக்தியாக வளர்த்துக்கொள்வதற்கு முந்திய காலப்பகுதியில் கிழக்கு மாகாண முஸ்லிம்களை வெகுவாக ஈர்க்கும் விதத்திலான கோரிக்கைகளை முன்வைத்தார்.

முஸ்லிம்களை மாத்திரம் உள்ளடக்கிய தனியான பிராந்திய அலகு அஷ்ரப்பின் அரசியலில் பிரதான இடம் பிடித்திருந்தது. "தென்கிழக்குப் பிராந்தியம்" என அஷ்ரப்பினால் வரையறை செய்யப்பட்ட இந்த நிர்வாக அலகு படிப்படியாகக் கனதியில் குறைந்துகொண்டு வந்து பின்னர் கல்முனை தனி மாவட்டம் என்று சுருங்கியது. தென்னிலங்கையின் அரசியல் நிலைவரங்கள், இரண்டு பிரதான கட்சிகளுக்குமிடையிலான முரண்பாடுகள், தமிழர் தரப்பில் எழுந்த எதிர்ப்பு என்பவற்றிற்கு மத்தியில் கல்முனை மாவட்டமும் காணாமல் போனது. பின்னர் அம்பாறை மாவட்டத்தில் சில பிரதேசச் செயலகப் பிரிவுகளை அமைப்பது குறித்து விவாதம் நடாத்தி அதுவும் பூரணமாகக் கைகூடாத நிலையில் மாறுபட்ட அன்றாடப் பிரச்சனைகளில் மட்டுமே முஸ்லிம் பிரதிநிதிகள் கவனம் செலுத்தினர்.

உண்மையில் ஒரு சமூகம் என்ற ரீதியில் அரசியல் அதிகார உரிமைகள் குறித்துத் தமிழ் மக்கள் காட்டிய ஆர்வத்தின் அளவுக்கு முஸ்லிம்கள் அக்கறைகொள்ளவில்லை. இதன் காரணமாகவே அவர்கள் இன்று வரை அரசாங்கங்களுடன் நேரடி மோதலில் ஈடுபடும் கட்டாயம் தவிர்க்கப்பட்டு வந்துள்ளது. ஆனால், இதே நிலைமை எதிர்காலத்திலும் தொடரும் என எதிர்பார்க்க முடியாது.

ஏனெனில், தற்போதைய இனநெருக்கடிக்கான தீர்வு வரும்போது முஸ்லிம்கள் அதிகமாக வாழும் நாட்டின் கிழக்குப் பகுதி தமிழ் மக்களின் அதிகாரஅலகுக்கு அடங்கும். அதன் பின்னர் தமிழர் பிரதிநிதிகளாக அந்தப் பகுதிகளை நிர்வகிப்போர் முஸ்லிம்களின் அரசியல் உரிமைகளை எவ்வாறு வரையறை செய்வார்கள்? என்ற கேள்வி வரும்போது முஸ்லிம் சமூகம் அதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய பதிலை அல்லது தீர்வை எதிர்பார்க்கும். இந்த இடத்தில் முஸ்லிம்கள் தங்களது உரிமைகளை யாரிடமிருந்து பெறுவது என்ற பிரச்சனையே பிரதானமானதாக இருக்கப்போகிறது.

வடக்கு கிழக்கினை நிர்வகிக்கும் ஏக பிரதிநிதிகளாகப் புலிகளை ஏற்று அரசாங்கம் அந்தப் பிராந்தியம் தொடர்பான சகல அதிகாரங்களையும் புலிகளிடம் ஒப்படைத்த பின்னர் அவர்களிடமிருந்து முஸ்லிம்கள் "ஏதேனும் சிலவற்றை" கேட்டுப் பெறுவதாக அல்லது புலிகளுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படும் போது அந்தப் பாகப்பிரிவினையில் முஸ்லிம்களையும் ஒரு பங்குதாராக அரசாங்கம் சேர்த்துக்கொள்ளுமா? என்பது இன்றுவரை தெளிவில்லாமல் இருக்கிறது.

அமைச்சர் ரவூப் ஹகீம் புலிகளின் தலைவருடன் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொண்டுள்ளார். இதில் ஆழமான அரசியல் உரிமைகள் குறித்து எதுவும் தெரிவிக்கப்படாத போதிலும் தற்போதைய நிலையில் இதனை ஒரு ஆரம்பகட்ட நடவடிக்கையாகக் கருத முடியும். புலிகளின் தலைவருடன் முஸ்லிம்களின் பிரச்சனைகள், உரிமைகள் குறித்த ஒப்பந்தம் செய்துகொண்டதன் மூலம் எதிர்காலத்திலும் முஸ்லிம்களின் அரசியல் உரிமைகளைப் புலிகள்தான் பெற்றுத்தரவேண்டும் என்று ஹகீம் கோரிக்கை விடுப்பதாகக் கருத முடியும். முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகள் சிலர் இந்தக் கருத்தை வெளிப்படையாகக் கூறிய சந்தர்ப்பங்களும் உண்டு.

எவ்வாறெனினும் கிழக்கில் வாழும் முஸ்லிம்கள் பல்வேறு தரப்புகளினதும் வெறுப்புட்டும் நடவடிக்கைகளாலும், அரசியல்வாதிகளின் தூண்டுதலாலும் தங்களுக்கென பிராந்திய அரசியல் அதிகாரங்களை இன்று கோரி நிற்கின்றனர். ஆரம்பத்தில் கூறியது போன்று அதிகார வர்க்கத்தினருடன் மோதலுக்குச் செல்லாது தமது அன்றாட வாழ்வில் மாத்திரமே கவனம் செலுத்தி வந்த முஸ்லிம் சமூகம் தொடர்ந்தும் அவ்வாறு வாழ முடியாது என்பதை உணரத் தொடங்கியுள்ளது.

இந்நிலையில் புலிகள், அரசாங்கம், ஏனைய தரப்புக்கள், தென்னிலங்கையின் பேரினவாத அமைப்புக்கள் என்று சகல பிரிவினருடனும் நேரடி மோதலை விரும்பாத முஸ்லிம்கள் இந்தத் தரப்புக்களுடன் ஏதேனும் ஒரு வகை கருத்தொரு மைப்பாட்டின் மூலம் தமக்கான அதிகாரங்களைப் பெற்றுக்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். அது எவ்வாறு நடைபெறப் போகிறது? என்பதுதான் முஸ்லிம் சமூகத்தின் முன்னிலையில் இன்றிருக்கும் பிரதான அரசியல் கேள்வி. கட்சி அரசியலில் ஏற்கனவே பல பிரிவுகளாக உடைந்து கிடக்கும் முஸ்லிம்கள் இதனை எவ்வாறு சாதிக்கப்போகிறார்கள்? அத்துடன் முஸ்லிம்கள் எனும்போது வடக்கு கிழக்கிற்கு வெளியே வாழும் முஸ்லிம்களின் நிலை என்ன? அவர்களின் அரசியல் தலைவிதியை யார் நிர்ணயிப்பார்கள்?

இன்றைய அரசியல் சமூக சூழ்நிலைகளுக்கு மத்தியில் கிழக்கில் பெருமளவிலும் நாட்டின் ஏனைய பகுதிகளில் சிதறுண்டும் வாழும் முஸ்லிம்களின் அரசியல் எதிர்காலம் எவ்வாறு அமையும், அது எவ்வாறு அமைய வேண்டும். ஆர்வங்கள், அச்சங்கள் போன்றவற்றை அலசும் ஆய்வுகள் கல்விமான்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. அனுப்ப வேண்டிய முகவரி:-

ஆசிரியர்,
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 1772, கொழும்பு.

பிரபாகரனைப் பிடியுங்கள்! ஜெயலலிதா ஆணை!!

விடுதலைப் புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் பத்திரிகையாளர்களைக் கிளிநொச்சியில் சந்தித்தாலும் சந்தித்தார் தமிழகம் அல்லோலகல்லோலப் பட்டுக் கொண்டிருக்கிறது.

பிரபாகரன் சற்றும் மாறவில்லை, ராஜீவ் கொலைக்கு வருத்தம் தெரிவிக்கவில்லை, இலங்கை அரசின் அனுமதியுடன், இந்திய ராணுவத்தை அனுப்பி அவரைப் பிடித்துவந்து இந்திய நீதிமன்றத்தின்முன் நிறுத்த வேண்டும் என்று முதல்வர் ஜெயலலிதா அதற்கான தீர்மானத்தையே சட்டமன்றத்தில் கொண்டு வந்து தனது புலி எதிர்ப்பு நிலைப் பாட்டினை மீண்டும் வலியுறுத்தினார்.

அதிலே அவருக்கு போனஸ் என்னவென்றால் திமுகவின் மெல்லவும் முடியாது விழுங்கவும் முடியாது தவிக்கும் இருதலைக் கொள்ளி எறும்புநிலை பகிரங்கமானது தான். இந்தக் கட்டுரை பிரசுரமாகும் நேரத்தில் பிரபாகரனின் பேட்டியைப் பற்றித் தமிழ்நாட்டில் எல்லோரும் மறந்திருப்பார்கள். அன்றாடம் சென்னையில் நடைபெறும் கொள்ளைகள் பற்றித்தான் சட்டமன்றத்திலும் வெளியிலும் பரபரப்பாகப் பேசிக்கொண்டிருப்பார்கள். ஆனாலும், விடுதலைப் புலிகளுக்குத் தமிழ் நாட்டில் எந்த அளவுக்குச் செல்வாக்கு அனுதாபம், ஆதரவு இருக்கிறது என்பதைத் தெளிவாக்கியிருக்கிறது என்பதைத்தான் இங்கு நோக்க வேண்டும்.

புலிகள் மீது தமிழக மக்கள் கொண்டிருந்த அனுதாபமும், ஆதரவும் ராஜீவ் கொலைக்குப் பின் முற்றிலும் மாறிவிட்டன. அவர்கள் மீது ஓர் அச்சம் கலந்த வெறுப்பைத்தான் மக்கள் காட்டத் தொடங்கினர் என்றது சட்டமன்றத்தில் ஏப்ரல் 16ம் நாள் நிறைவேற்றப்பட்ட தீர்மானம். தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள மாறுபட்ட சூழ்நிலையினால் யாழ்ப்பாணப் பகுதியில் அமைதி திரும்பும் என்றால், அதில் அரசுக்கும் தமிழக மக்களுக்கும் மகிழ்ச்சிதான். அச்சூழ்நிலை உருவாகுமேயானால் ஆயிரக்கணக்கான இலங்கைத் தமிழ் அகதிகள் தங்கள் தாயகத்திற்குத் திரும்பவும், இலங்கையில் உள்ள தத்தம் உறவினர்களுடன் சேர்ந்து வாழவும் வாய்ப்பு உருவாகும் என்பது சரிதான்.

ஆனால், அதற்காக இந்தியாவின் பாதுகாப்புக்கும் ஒருமைப்பாட்டுக்கும் இறையாண்மைக்கும் குந்தகம் விளைவிக்கும் புலிகள் இயக்கமும், அதன் தலைவர் பிரபாகரனும் இந்திய மண்ணில் காலூன்றுவது ஒரு போதும் ஏற்கப்படமாட்டாது, அனுமதிக்கப்படமாட்டாது என்று தீர்மானம் மேலும் கூறியது.

விடுதலைப் புலிகளை எதிர்க்கும் கம்யூனிஸ்ட் கட்சிகள் கூடத் தீர்மானத்தை ஆதரிக்கவில்லை. அவ்வியக்கத்தின் மீது தடை நீடிக்கவேண்டும்தான். ஆனால், இந்திய ராணுவத்தை அனுப்பவேண்டும் எனக் கோருவது அண்டை நாட்டின் உள்நாட்டுப் பிரச்சனையில் தலையிடுவதாகும், எனவே நாங்கள் தீர்மானத்தை எதிர்க்கிறோம் எனக் கூறிவிட்டு வெளிநடப்புச் செய்தன அக் கட்சிகள்.

ஏறத்தாழ அதே நிலைப்பாட்டினைத் தான் பாரதீய ஜனதாவும் எடுத்தது. தங்கள் எதிர்ப்பைக் காண்பிக்கும் வகையில் கறுப்புச் சட்டையணிந்து சட்டமன்றத்திற்கு வந்திருந்த பாட்டாளி மக்கள் கட்சியினர் தீர்மானம் தமிழர்களுக்கு எதிரானது என்று வலியுறுத்தினர்.

பிரபாகரனின் முதல் ஆதரவாளன் தான் என்று பறைசாற்றிக்கொள்ளும் வைகோவின் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு சட்டமன்றத்தில் ஒருஉறுப்பினர் கூடக் கிடையாது. ஆனால், அவர் கடுமையாக ஓர் அறிக்கை வெளியிட்டு மகிழ்ந்து கொண்டார்.

பாலசிங்கத்தை இந்தியாவுக்கு வர அனுமதிக்காவிடில் மனிதாபிமானம் அரைக் கம்பத்தில் பறப்பதாகப் பொருள், அமைதி வரும் இந் நேரத்தில் இப்படித் தீர்மானம் இயற்றுவது ஈழத்தமிழர்களுக்கு இழைக்கப்படும் துரோகமாகும். தீர்மானத்தை மத்திய அரசு நிராகரிக்க வேண்டும் என்று முழங்கினார் அவர்.

திமுகதான் இறுதிவரை குழம்பிப்போய், அப்புறம் காமாசோமா என்று ஒரு நிலை எடுத்தது. ராஜீவ் காந்தியின் உயிரைப் பறித்தவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்வது சட்டப்படி ஆற்ற வேண்டிய கடமை என்பதில் கருத்து வேறுபாடில்லை. எனினும், ஈழத்தமிழர் அமைதி வாழ்வுபெற தற்போது நடைபெறும் பேச்சுவார்த்தை ஒரு வாய்ப்பாக அமையக்கூடும் என்னும் எதிர்பார்ப்புக்கு, இத் தீர்மானம் இடையூறாகிவிடுமோ என்ற ஐயம் ஏற்பட்டுள்ளது.

எனவே தீர்மானத்தை எதிர்க்கவுமில்லை, ஆதரிக்கவுமில்லை, நடுநிலை வகிக்கிறோம் என்று சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் பேராசிரியர் அன்பழகன் கூறினார்.

பிரபாகரனின் அதிகாரபூர்வமற்ற செய்தித் தொடர்பாளராகக் கருதப்படும் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன், தீர்மானம் தமிழர்களுக்குத் தலைகுனிவை ஏற்படுத்திவிட்டது எனச்சாடி, திமுக நடுநிலை வகித்ததை, வரலாற்றில் படிந்துவிட்ட கறை என்கிறார் நெடுமாறன். அதற்குத் தலைவர் கலைஞர் அளிக்கும் விளக்கம் என்ற பெயரில் ஒருவரி அறிக்கை(பதில் என்றுகூட இல்லை!)

சட்டமன்ற தீர்மானம் வரலாற்றில் படிந்திடும் கறைதான். அதேபோல 1991ல் தமிழ் நாட்டில் நடைபெற்ற ராஜீவ் காந்தி படுகொலையையும் ஒரு கறையாகவே கருதுகிறோம். அதற்கு மேல் எதுவுமில்லை. அவ்வளவு வீரம்.

கலைஞருக்கு வயதாகிவிட்டது. எஞ்சிய வாழ்நாளை அமைதியாகக் கழித்துவிட்டால் சரி என்ற நிலையிலேயே இப்படி எதிலுமே மாட்டிக்கொள்ளாது அறிக்கை விடுவது அவருக்கு வாடிக்கையாகிவிட்டது என்பது பொதுவான கணிப்பாகும்.

ஆனால் இப்பிரச்சனையில் இன்னொரு பரிமாணமும் இருக்கிறது. ஜெயலலிதா அத்தகையதொரு தீர்மானத்தைக் கொண்டு வந்ததன் பின்னணியில் ஒரு பெரும் அரசியல் சதியே இருப்பதாகப் புலம்பகின்றனர் திமுகவினர்.

சமீபகாலமாகவே திமுகவிற்கும், பாரதீய ஜனதாவிற்கும் இடையே உறவு நன்றாக இல்லை. கருணாநிதியும் வாஜ்பாயும் பேசிக் கொள்வது கூடக் கிடையாதாம். தமிழக பாஜகவிற்கும் தனக்கும் இடையிலான உறவு முறிந்துவிட்டதாகவே கலைஞர் ஒருமுறை அறிக்கை விட்டார். (ஆனால் மத்திய அமைச்சரவையிலிருந்து மட்டும் அது வெளியேறாது என்பது வேறுகதை.)

கோவில்களில் அன்னதானம் அளிக்கும் அமைதிப் பேச்சுவார்த்தையைச் சீர்குலைக்க அதிபர் சந்திரிகா மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு, ஜெயலலிதா துணைபோயிருப்பதாகக் குற்றம்சாட்டினார். தீர்மானத்தை எதிர்த்த கட்சிகளுக்கு தனது பாராட்டினை வழங்கிய அவர் நெருக்கடியான கால கட்டத்தில் நடுநிலை என்ற பெயரால் திமுக நழுவிச்சென்றது வரலாற்றில் படிந்துவிட்ட கறை என்றும் கூறினார்.

தேர்தலில் நின்றால் ஒரு முனிசிபல் வார்டில் கூட ஜெயிக்க முடியாத ஒரு லெட்டர்பேட் அமைப்புத் தலைவர் பெரும் மக்களாதரவு பெற்ற ஒரு கட்சியினை தமிழர் விரோதக்கட்சி என்கிறார், அதன் தலைவருக்குக் கோபம் பொங்கி வந்திருக்க வேண்டுமே! ஊஹூம், ஒரே வழிசல்தான்.

இந்நிலையில்தான் மத்திய அமைச்சர் முரசொலிமாறன் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியைச் சந்தித்துப் பேசியிருப்பதாக ஜெயலலிதா ஒரு புதுத்தகவலை வெளியிட்டார். இதுவரை அப்படியொரு சந்திப்பு நிகழவில்லை என்பதை திமுகவினர் மறுக்கவில்லை. சோனியா, மாறன் மீது வேவு பார்ப்பதா? என்றெல்லாம் பிரச்சனையைத் திசை திருப்புகின்றனர். விரைவில் பாஜகவும், அஇஅதிமுகவும் கைகோர்க்கக்கூடும். எனவே காங்கிரஸ் கூட்டணிக்கு இப்போதே அடித்தளம் அமைப்போம் என்ற முயற்சியில் திமுக இறங்கியிருப்பதாகவே செய்திகள். எனவேதான் சோனியாவுடன் சந்திப்பு.

இந்த முயற்சிகளுக்கு வேட்டு வைக்கும் வகையிலேயே தமிழக சட்டமன்ற தீர்மானம் என்று குமுறுகிறார்கள் திமுக வினர். ராணுவத்தை அனுப்பி பிரபாகரனைப் பிடிக்க முடியாதென்பது ஜெய லலிதாவிற்கு நன்றாகவே தெரியும். இன்னும் சொல்லப் போனால் வாஜ்பாய் அரசு ராணுவத்தை அனுப்பாது என்பதும் அவருக்குத் தெரியும்.

ஆனால், தீர்மானத்தை ஆதரித்தால் பேச்சுவார்த்தைகளுக்கு, அமைதிக்கு, தமிழினவாதத்திற்கு எதிராக வாக்களித்துவிட்டதாக திமுக மீது ஒரு தரப்பார் மத்தியில் அவப்பெயர்.

மாறாக எதிர்த்துவிட்டால் ராஜீவ் கொலையாளிகள் மீது கலைஞர் கருணை காண்பிக்கிறார், அவர்களைப் பிடிக்கச் சொல்லுவதில் அவருக்கு நாட்டமில்லை என்றவொரு கருத்து காங்கிரஸ் தலைமை மத்தியில் வலுப்படும். ஏற்கனவே சோனியாவின் ஆதரவாளர்கள் பலர் திமுக எதிர்ப்புரட்சித்தலைவியுடன் பாலமேற்படுத்திக் கொண்டிருக்கும் பாஜகவினர் உறவுதுண்டிப்பு அறிக்கையினை கண்டுகொள்ளவேயில்லை. அப்படியே இருக்கட்டுமே என்று விட்டனர்.

குஜராத் படுகொலைகளுக்குப் பிறகு திமுகவிற்குப் பெரும் தர்மசங்கடம். முற்றிலுமாக முஸ்லிம்களின் ஆதரவை இழந்துவிடுவோமோ என்ற அச்சம். பெரும்பான்மையினர் தயவில்தான் சிறுபான்மையினர் வாழவேண்டும் என்று பெங்களூரில் ஆர்.எஸ்.எஸ். தீர்மானமியற்ற, மனுசாஸ்திரத்தின் மறுபதிப்பு என கருணாநிதி கொதித் தெழ நிலைமை மேலும் மோசமாகியது.

திமுக நடுநிலை வகிக்கவில்லை என்றால் பாஜகவினர் ஆதரவு தெரிவிக்கப்படாத போதிலும் தற்போதைய நிலையில் இதனை ஒரு ஆரம்பகட்ட நடவடிக்கையாகக் கருத முடியும். புலிகளின் தலைவருடன் முஸ்லிம்களின் பிரச்சனைகள், உரிமைகள் குறித்த ஒப்பந்தம் செய்துகொண்டதன் மூலம் எதிர்காலத்திலும் முஸ்லிம்களின் அரசியல் உரிமைகளைப் புலிகள்தான் பெற்றுத்தரவேண்டும் என்று ஹகீம் கோரிக்கை விடுப்பதாகக் கருத முடியும். முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகள் சிலர் இந்தக் கருத்தை வெளிப்படையாகக் கூறிய சந்தர்ப்பங்களும் உண்டு.

எவ்வாறெனினும் கிழக்கில் வாழும் முஸ்லிம்கள் பல்வேறு தரப்புகளினதும் வெறுப்புட்டும் நடவடிக்கைகளாலும், அரசியல்வாதிகளின் தூண்டுதலாலும் தங்களுக்கென பிராந்திய அரசியல் அதிகாரங்களை இன்று கோரி நிற்கின்றனர். ஆரம்பத்தில் கூறியது போன்று அதிகார வர்க்கத்தினருடன் மோதலுக்குச் செல்லாது தமது அன்றாட வாழ்வில் மாத்திரமே கவனம் செலுத்தி வந்த முஸ்லிம் சமூகம் தொடர்ந்தும் அவ்வாறு வாழ முடியாது என்பதை உணரத் தொடங்கியுள்ளது.

இந்நிலையில் புலிகள், அரசாங்கம், ஏனைய தரப்புக்கள், தென்னிலங்கையின் பேரினவாத அமைப்புக்கள் என்று சகல பிரிவினருடனும் நேரடி மோதலை விரும்பாத முஸ்லிம்கள் இந்தத் தரப்புக்களுடன் ஏதேனும் ஒரு வகை கருத்தொரு மைப்பாட்டின் மூலம் தமக்கான அதிகாரங்களைப் பெற்றுக்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். அது எவ்வாறு நடைபெறப் போகிறது? என்பதுதான் முஸ்லிம் சமூகத்தின் முன்னிலையில் இன்றிருக்கும் பிரதான அரசியல் கேள்வி. கட்சி அரசியலில் ஏற்கனவே பல பிரிவுகளாக உடைந்து கிடக்கும் முஸ்லிம்கள் இதனை எவ்வாறு சாதிக்கப்போகிறார்கள்? அத்துடன் முஸ்லிம்கள் எனும்போது வடக்கு கிழக்கிற்கு வெளியே வாழும் முஸ்லிம்களின் நிலை என்ன? அவர்களின் அரசியல் தலைவிதியை யார் நிர்ணயிப்பார்கள்?

இன்றைய அரசியல் சமூக சூழ்நிலைகளுக்கு மத்தியில் கிழக்கில் பெருமளவிலும் நாட்டின் ஏனைய பகுதிகளில் சிதறுண்டும் வாழும் முஸ்லிம்களின் அரசியல் எதிர்காலம் எவ்வாறு அமையும், அது எவ்வாறு அமைய வேண்டும். ஆர்வங்கள், அச்சங்கள் போன்றவற்றை அலசும் ஆய்வுகள் கல்விமான்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. அனுப்ப வேண்டிய முகவரி:-

ஆசிரியர்,
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 1772, கொழும்பு.

பாளர்கள். ஜெயின் கமிஷனின் முதல் அறிக்கையில் கண்டனத்திற்குள்ளான திமுக ஐக்கிய முன்னணி அமைச்சரவையில் அங்கம் வகித்தது என்ற காரணத்தினால்தான், 1998ல் அவ்வரசிற்கு காங்கிரஸ் தனது ஆதரவினை வாபஸ் பெற்றது என்பதை இங்கே நினைவில் கொள்ளலாம்.

இந்நிலையில் தீர்மானத்தை எதிர்த்தால் திமுக மீது சோனியாவின் கோபம் அதிகமாகும், இரு கட்சிகளுக்குமிடையே கூட்டணி ஏற்படும் வாய்ப்புக்கள் குறையும் என்பதுதான் புரட்சித் தலைவியின் ராஜதந்திரம். அதில் சிக்கிக்கொள்ளாமல் கருணாநிதி நடுநிலைவகித்து தப்பிவிட்டார் என்பது திமுக வாதம்.

எப்படியோ போகட்டும் திராவிடர்களுக்காக உலகளாவிய தமிழர் நலனுக்காக அல்லும் பகலும் அயராது பாடுபடுவதாகக் கூறிக்கொள்ளும் ஒரு கட்சி இப்படி ஓர் அவல நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது என்று நினைத்தால்தான் வேதனையாக இருக்கிறது. தமிழர் என்றோர் இனமுண்டு, தனியே அவர்க்கோர் குணமுண்டு என்ற பாரதிதாசனின் வரிகளை மேடைக்குமேடை முழங்கும் திமுக இன்று சோனியா என்ன நினைப்பார், நாளை தேர்தல்களை எப்படிச் சந்திப்பது என்பதைப் பொறுத்தே தனது நிலைப்பாட்டினை உருவாக்கிக்கொள்கிறது என்பது மீண்டும் வெட்டவெளிச்சமாகியிருக்கிறது.

நெஞ்சில் உரமுமின்றி, நேர்மைத் திறனுமின்றி என்ற பாரதியின் சொற்கள்தான் நினைவுக்கு வருகிறது.

பொங்கு தமிழ் பேரணிகளை நடத்துங்கள் என அழைப்புவிடுக்கப்படலாம். ஆனால், சாத்தியமாகவேண்டுமே. பேரணிகளுக்குச் செல்லுங்கள் என்று விரட்டுவதற்கு போராளிகளா இருக்கிறார்கள்?

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவென்பது அரங்குக் கூட்டங்கள், கனல் கக்கும் கட்டுரைகள், சொற்பொழிவுகள், நந்தன் போன்று சில ஆயிரம் விற்பனையாகும் பத்திரிகைகள்; இவற்றைத் தாண்டுவதில்லை.

பாலசிங்கம் இந்தியாவில் தங்கிச் சிகிச்சை பெற அனுமதிக்கப்படலாம் என பிரதமர் வாஜ்பாய் சூசகமாக அறிக்கை விட, ஜெயலலிதா அப்படி அனுமதியளிக்கக் கூடாது என காட்டமாகப் பதிலளிக்க, அதுவும் அப்படியே அடங்கிப் போயிற்று.

புலம்புகிறார் வைகோ. யார் கேட்கிறார்கள்? யாரை நொந்து என்ன பயன்?

தீர்மானத்தில் கூறப்பட்டிருப்பது போன்று ராஜீவ் கொலைக்குப் பிறகு முற்றிலுமாகவே புலி ஆதரவென்பது மறைந்துவிட்டது என்பதுதானே உண்மை.

இலங்கையில் அமைதி வரட்டும். அனைத்து உரிமைகளுடன் அவர்கள் வாழட்டும். இங்கே வந்து ஏதும் பிரச்சனை செய்ய வேண்டாம் என்பதே பொதுவான மக்கள் கருத்தாக இருக்கிறது.

श्रीविष्णुसहस्रनामस्तोत्रम्

MEDITATION YOGA POWER

ஆயுர்வேதத்தில் சோதிடம் கூறும் மாந்திரீக மருத்துவம்
தூரதேச மந்திர உட்சாடன வசிய ஆஹர்ஸ்ண பிராண தியானயோக
ஆண்மீக அலைகள் (Cosmic Vibration) மருத்துவம்

MY GURU

ஹிமயமலை மஹாரிஷிகளின் குருசிஷ்ய மஹாமாந்திரீக மருத்துவ நிபுணர் ஜேர்மன் ஹோமியோபதி சீன அக்குப்பங்சர் இந்திய சித்த ஆயுர்வேத மருத்துவ மனோதத்துவ யோகசிகிச்சையாளர்
(டாக்டர் "மந்திரயோகி")
YOGI.DR. T. MYLVAGANAM
R.H.M.D.- D Acu-(இலங்கை) P.I.S.M (இந்தியா)
Registered by Ministry of Health S.L.M.C. NO.061

உறவை போதைவஸ்தை மறப்பிக்க, தீயசக்திகளினால் ஏற்பட்ட தீராத உடல் நோய் மனநோய் பிரச்சனைகளைத் தீர்த்து. எத்துன்பங்களும் அணுகாமல் உடல், வீடு வளவு, வியாபார நிலையங்கள்,வாகனங்களை காவல் செய்ய காதல் திருமணம் பெற்றோர்கள்தடையாக இருப்பவர்களின் சம்மதங்களுடன் நிறைவேற கல்வி, தொழில், வியாபாரம் வெளிநாட்டுப் பிரயாணம் வேறுகாரியத்தடைகள் ஏற்படாமல் நினைத்த செய்கின்ற போகின்ற காரியங்கள் வெற்றிபெற,வேறு நன்மையான காரியங்களுக்கு தீங்கில்லாத தெய்வீக மஹா மந்திர யந்திர வசிக வைத்தியங்கள் செய்து கொள்ள வரமுடியாதவர்கள் கடல் கடந்த வெளிநாட்டவர்கள் பதிவுத் தபால் பக்ஸ்,தொலை பேசி மூலம் தொடர்புகொண்டு மனோதத்துவ மாந்திரீக ஆண்மீக மருத்துவ அறிவுரை களோடு எல்லா மதத்தினர்களுக்கும் ஏற்ற இஸ்ட்ட தெய்வ அனுக்கிரஹ மந்திர சித்தியோடும் யோகசக்தியோடும் செய்யப்படும் புனித பரிகார பொருட்களை தூரித விசேட தபாலில் பெற்றும் தூரதேச ஆகாய அஹர்ஸ்ண மந்திர உட்சாடன பிராண தியானயோக ஆண்மீக அலைகள் மருத்துவ முறைப்படியும் உடன் நிறைவேற்றிக் கொள்கிறார்கள்.இதுவரையில் இப்புனித சேவையை அறியாத அவசியம் தேவைப்படும் வெளிநாட்டில் இருப்பவர்களின் நன்மைக்காக குருசக்தி நிலயத்தின் பிரதம குரு யோகி டாக்டரிடம் பலன்கள் பெற்ற பல்லாயிரக்கணக்கான அன்பர்களில் சுவிஸ் நாட்டில் இருக்கும் ஓர் அன்பரின் அனுசரணையுடன் இந்த உண்மைகள் வெளியிடப்படுகின்றன.

GURUSACKTHY CENTER
KALLADY – BATTICALOA(P.O)
(SRI LANKA)

குரு சக்தி நிலையம்
இராமகிருஷ்ணபுரம் றோட்
கல்லடி மட்டக்களப்புP.O
ஸ்ரீலங்கா

ரெலிபோன் - பக்ஸ்
உள்நாட்டவர்களுக்கு 065–24872 காலை 8 இருந்து இரவு 9 மணி வரை
வெளிநாட்டவர்களுக்கு 00946524872 காலை 8 இருந்து இரவு11 மணி வரை
கடல் கடந்த வெளிநாட்டவர்களுக்கான விஷேட சேவை
Registered by Ministry of Hindu Religious & Cultural Afairs.

மேடைகளில் முழங்கும் ஆபத்தான ஆசாமிகள்

-கிழக்கான்-

ஊர்ப்பக்கம் இப்ப ஒரே கொண்டாட்டமாத் தான் இருக்குது. பார்க்கவும், கேட்கவும் சந்தோஷம் பொங்குது. இந்த நிலைமை எண்டெண்டைக்கும் இருக்க வேண்டுமெண்றதுதான் எல்லாச் சனத்தின்ர விருப்பமும்.

கனகாலத்துக்குப் புறகு நாவலடிக் கடற்கரையோரம் சனம் நெளிசல் புளிசலாக நிரப்பிக் கிடந்தது. நாலைஞ்சி நாள் நடந்த கலை நிகழ்ச்சிகளைப் பார்க்க வந்த சனங்களுக்கு இரவு நேரத்தில பஸ் சேவையும் இருந்தது. "தீர்த்தக்கர" ஞாபகம்தான் மனசுக்குள்ளால திடீனெக் கிளம்பியது.

மாமாங்கப்பிள்ளையார் கோயில் தீர்த்தக்கரைக்குத் தான் வருஷத்தில ஒருக்கா இப்படிச்சனம் கூடி நிரம்பி வழிந்த காலம் ஒண்டு இருந்தது.

அதேயளவுக்கு சனம் நாவலடிக் கடற்கரையில அன்னை பூபதி கடசி நாள் வைபவத்தில கலந்து கொண்டிருக்குதுகள்.

இதைவிட, இதில இன்னொரு விசயமெண்டால் அன்னை பூபதி நினைவு தூபியை குருநாகலிலிருந்து வந்த பௌத்த பிக்கு ஒருவர் திறந்து வைச்சதோட சமாதானம், இன ஐக்கியம் தொடர்பாகவும் பேசின பேச்சைக் கேட்டு கூடிநிண்ட சனங்கள் மெய் சிலிர்ச்சிப் போயித்துகள். ஐ.சி காட்டி அலுப்பான சனங்களுக்கு அமைதி வார்த்தைகள் ஆறுதலளிக்கும் தானே!

உண்மையும் தானே! இன்னும் எத்தின காலத்துக்கு இப்படியே அடிபட்டுக் கொண்டிருக்கிறது. "ஒண்டுபட்டால் உண்டு வாழ்வு" எண்ட அந்த விசயத்தை இனியும் மறக்காமல் இருந்தால் எவ்வளவு நல்லது பாருங்கோ. இந்த பிக்கு மாதிரி எல்லார்ர மனசும் மாறவேண்டும்.

இதைவிட விளையாட்டுப் போட்டி அது, இதெண்டு ஊரெல்லாம் நிறைய நிறைய நல்ல விசயங்கள் நடக்குது. முந்தியெண்டால் கொழும்புக்குள்ளேயே கூடக்காலத்தைக் கடத்திக்கொண்டு தங்கட விசயத்தில கண்ணும் கருத்துமா இருந்த எம்.பி.மாரெல்லாம் ஊரோடையே கூடக்காலத்தக் கழிக்கிறாங்க. தெரியும் தானே! பழையபடி இப்ப நினைச்ச மாதிரியெல்லாம் நடக்க முடியாதெண்டு.

இது சில எம்.பி. ஐயாமாருக்கு உள்ளுக்குள்ள எரிச்சலக் கிளப்பியிருந்தாலும், இனியும் ஏமாத்த முடியாதெண்ட நிலையை உருவாக்கியிருக்கிறது சனத்துக்குச் சந்தோசம் தான்.

அடிபாடு நடந்த காலங்களில யெல்லாம் அப்பப்ப எலக்சன் நேரத்தில தமிழ்வீராவேசம் பேசி எம்.பி.யான கையோட கொழும்புக்குப் போய் "குடியிருந்த கோயில்கள்" எல்லாத்துக்கும் இப்பத்தான்... என்று ஒரு இழுவ இழுத்து நம்மடகாக்காச்சிவட்டம் போடியார் கொடுப்புக்குள்ள ஒரு சிரிப்ப சிரிச்சதின்ர அர்த்தம் இப்பத்தான் எல்லாருக்கும் விளங்குமெண்டு நினைக்கிறேன்.

இந்த எம்.பிமார் மாதிரி இன்னும் கொஞ்சப்பேர் இருக்கிறாங்க. பொடியன்மார் ஊருக்குள்ள வரமுந்தி ரவுணுக்குள்ள இருந்துகொண்டு எல்லாத் தரப்போடயும் சிரிச்சிப்பேசி குடிச்சிகும்மாள மடிச்சி ஆட்டம் போட்ட நிறையப் பேர் "நான் முந்தி, நீ முந்தி" எண்டு அடிபட்டுக் கொண் டல்லவா முகம் காட்டுறாங்க.

அதவிட, இவங்க மேடைகளில முழங்கிற முழக்கம் எல்லாம் அடிமனசில இருந்து வருகுதா இல்லாட்டி நுனி நாக்கில இருந்து பறக்குதா? ஒண்டுமே விளங்குதில்ல. எல்லாக் காலத்திலயும் எல்லோரையும் வளைச்சிப் புடிக்கத்தெரிந்த கூட்டம். உண்மையிலேயே ஆபத்தான வங்க இவங்க தான் எண்டத சம்பந்தப்பட்டவங்க சகலரும் விளங்கிக் கொள்வாங்க எண்டு நினைக்கிறன்.

கனகாலத்துக்குப் புறகு, சித்திரை வருசக்களையும் கொடிகட்டிப் பறக்குது. ஒரு சண்டசச்சரவும் இல்லாத நிலைமை தொடர்ந்தும்இருக்க வேணும். இதுக்குள்ள என்னடாவெண்டால் வெக்கையும், புழுக்கமும்தான் கடுமையாக இருக்குது.

மனோதத்துவ வைத்தியம்

GENARAL PSYCHO THERAPHY

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr.P. ஆறுமுகம் அவர்களை.

கொழும்பில் ஏப்ரல் 21 முதல் 27 வரை
DR.P.ARUMUGAM (S.A.M.P) REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street,
No. 10, Reclamation Road, Colombo 11. T.P. 074-715547, 074-715546 செல்டெல் - 072 664867.
கண்டியிலும் சந்திக்கலாம்

கண்டியில் ஏப்ரல் 28 - 29 திகதிகளில்
ஆசிரி மெடிக்கல் ஹோல் 45, பேராதெனிய ரோட், கண்டிT.P.074-474156

கல்முனையில் மே 04, 05 திகதிகள்.
T.M.M. பாமசி கல்முனை T.P. 067 29329

வவுனியாவில் மே 11, 12 திகதிகள்.
(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)
VANNI INN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, வவுனியா.T.P. 024 22074, 21406.

கடிதத்தொடர்பு : RESIDANT T.P 065 24019
DR.P.ARUMUGAM NO.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA. SRI LANKA.

மரண அறிவித்தலும் நன்றி நவிலலும்

அரசரெட்ணம் சிறீகரன்

மலர்வு: 02.08.1966
உதிர்வு: 15.04.2002

கரம்பன் கிழக்கு, ஊர்காவற்றுறையைச் சேர்ந்த அரசரெட்ணம் சிறீகரன் 15.04.2002 அன்று ஜேர்மனியில் காலமானார். இவர் காலஞ்சென்ற இளைப்பாறிய பொலிஸ் அத்தியட்சகர் திரு. சுப்பிரமணியம் அரசரெட்ணம் திருமதி சரஸ்வதி அரசரெட்ணம்அவர்களின் சிரேஷ்ட புத்திரனும், திருமதி தேவிகா பேரின்பநாதன் (சுவிஸ்லாந்து), திருமதி மல்லிகா ஜெயராஜ்(ஜேர்மனி), விஜய கரன் (லண்டன்) ஆகியோரின் அன்பச்சகோதரரும், பேரின்பநாதன் (சுவிஸ்லாந்து), ஜெயராஜ் (ஜேர்மனி), திருமதி நளினி விஜயகரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், நிரேஷ், நிஜந்தன் (சுவிஸ்லாந்து), தயானி, அபினாஸ், ஆதீஸ் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் கார்த்திகா, அனோஷன் (லண்டன்) ஆகியோரின் அன்பு பெரியப்பாவும் ஆவார்.அன்னாரின் ஈமைக்கிரியைகள் சனிக்கிழமை 20.04.2002 அன்று ஜேர்மனியில் Venloer Str 685, 50827 Koln-Bickendorf, West Germyn இல் நடைபெற்றது. அன்னாரின் இறுதிச் சடங்கில் நேரில் கலந்துகொண்டவர்களுக்கும், தந்தி, தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இதனை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: சகோதரன் விஜயன் (லண்டன்)
தொலைபேசி இல: 01923-220480
மைத்துனன் ஜெயராஜ்
தொலைபேசி இல: 0049-2431981938
மைத்துனன் பேரின்பநாதன்
தொலைபேசி இல: 0041-8175648334

மலையாள மாந்திரீகம்



பரம்பரை பரம்பரையாக 39 வருடகால தன்னிகரற்ற சேவையாற்றும் மலையாள மாந்திரீக தெய்வீக சக்தியால் எண்ணியது எண்ணியவாறு மின்சார வேகம் போல நடைபெறுவது திண்ணம். அதற்கெடுத்துக்காட்டாக, மக்களின் வெற்றியின் பலனாக எமக்களித்த சான்றிதழ்களை நேரில் கண்டறிய வாருங்கள்!

சுவிஸ் அன்பரின் "கணவன்/மனைவி பிணக்கு தீரல் மடல்"

"மனித தெய்வமாகிய ஐயாவுக்கு, ஸ்ரீ துர்க்கையம்மனின் கிருபையாலும் தங்களது ஆசீர்வாதத்தாலும் சின்னாபின்னமான எமது குடும்பத்தை 7000 KM. க்கு அப்பால் இருந்த வண்ணம் ஒற்றுமையாக்கிய மனித தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்."

சுவிஸ் அன்பரின் மடல் "ஸ்ரீ துர்க்கையம்மனின் சக்தியால் பேசும் மழலை"

"மனித தெய்வமே! உங்கள் தெய்வீக சக்தியால் பேசாத எம் 3 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்த வெள்ளத்தில் மூழ்கவைத்த உங்களுக்கு எமது கோடான கோடி நன்றிகள்."

ஜெர்மன் அன்பரின் மடல், "மகளின் திக்குவாய் குணமாகியது"

"அன்புத் தெய்வமாகிய ஐயாவுக்கு, பிறவியிலிருந்து திக்குவாயாக இருந்த எனது 9 வயது மகளை திக்குவாயிலிருந்து குணமாக்கிய உங்களுக்கு ஆனந்தக் கண்ணீரால் நன்றி கூறுகிறோம்!"

லண்டன் அன்பரின் மடல், "எண்ணியவளை என்னிடமே வந்து சேர்ந்தாள்"

"பெருமதிப்புக்குரிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து என்னை பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை, மீண்டும் என்னிடத்தில் வந்து சேரவைத்து எனை சந்தோஷத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்!"

கொழும்பு அன்பரின் மடல், "39 வயதில் அதிசயத் திருமணம்"

"பெருமதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, எமது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணமே நடக்காது என்று எண்ணிய நாம், உங்களிடம் மகளுக்கு பரிகாரம் செய்ததால் அதிசயிக்கத்தக்க வகையில் வெளியூரிலிருந்து வரன் கிடைக்கச் செய்து மகளின் திருமணத்தை இனிதே நடந்தேறச் செய்தமைக்கு கோடானகோடி நன்றிகள்!"

குருணாகல் அன்பரின் மடல், "நெடுநாளாக தடைப்பட்ட திருமணம் 16 நாளில் வெற்றி"

"தெய்வகடாட்சம் பொருந்திய ஐயா, எனது சகோதரிக்கு திருமணம் தடைப்பட்ட வண்ணம் இருந்ததால், உங்களிடம் பரிகார நிவர்த்தி பெற்ற பின் ஆச்சரியப்படத்தக்கவகையில் சகோதரியின் திருமண நடைபெற உதவிய உங்களை என்றுமே மறக்கமாட்டோம்."

பிரான்ஸ் அன்பரின் மடல், "குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயணம் வெற்றி"

"அன்புக்கும் மதிப்பிற்குமுரிய ஐயா, வெளிநாடு செல்லமுடியாமல் மிகவும் கஷ்டப்பட்ட எனக்கு பிரயாணத்தடை நீக்கி பரிகாரம் செய்து குறித்த நாளில் பிரயாணத்தை கைகூட வைத்து என்னைப் பிரான்ஸிலிருந்து இக்கடிதத்தை நன்றியாக எழுதுகிறேன். என்றுமே உங்களை மறவேன்."

ஹட்டன் அன்பரின் மடல், "தீராத் தலைவலி தீர்ந்துவிட்டது"

"மதிப்பிற்குரிய ஐயாவுக்கு, நெடுநாளாக எனக்கிருந்த தீராத் தலைவலியைக் குணமாக்கி என்னை பெரும் கஷ்டத்திலிருந்து விடுவித்தமைக்கு கண்ணீரால் நன்றிகள்."

இத்தாலி அன்பரின் மடல், "சந்தேகத்தால் பிரிவுபட்ட காதல் வெற்றி"

"வளக்கத்துக்குரிய டாக்டர் ஐயா, வீண் சந்தேகத்தால் பிரிய நேர்ந்த நாம் மீண்டும் சந்தோஷமாக சேர்ந்தது உங்களால் தான். என்றென்றும் உங்களுக்கு நன்றிகள்."

பதுளை அன்பரின் மடல், "போதை அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டவர்"

"அன்புக்குரிய ஐயாவுக்கு, எனது கணவரை நீண்ட நாள் போதைப்பொருள் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எமது குடும்பத்துக்கு புது ஒளியேற்றினீர்கள். நாலும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் கண்ணீரால் நன்றியாக இருப்போம்"

கனடா அன்பரின் மடல், "ஜாதகத்தில் கூறியது பலிதம்"

"மரியாதைக்குரிய ஐயா, உங்களிடம் ஜாதகம் பார்க்க வந்தபோது வெளிநாடு செல்வதைப் பற்றியே அறியாதிருந்த எனக்கு, இத்தனையாம் திகதி வெளிநாடு செல்வாய் எனக்கூறியது பலித்ததுகண்டு ஆச் சரியமும் சந்தோசமும் அடைந்தேன். என்றும் உங்களை மறவேன் என்றும் உங்கள் சேவை தொடரட்டும்."

நீர்கொழும்பு அன்பரின் மடல், "புத்தி பேதலித்திருந்தவர் என்ன கூறுகிறார்"

"மாட்சிமை பொருந்திய ஐயா, குளியத்தின் பிடியில் சிக்குண்டு புத்திபேதலித்து பலரது ஏளனத்துக்கும் அவமரியாதைக்கும் உள்ளான என்னை பரிபூரண குணமாக்கி மீண்டும் மனிதனாக இயல்பாக வாழச் செய்தமைக்கு கண்ணீரால் என்றும் நன்றி கூறுகிறேன் ஐயா!"

யாழ்ப்பாண அன்பரின் மடல், "அதிசய அக்னி குண்டல பூஜை"

"மதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, என்னையும் எனது குடும்பத்தாரையும் மறவாது மாதந்தோறும் விசேஷமாக நடைபெறும் அக்னிகுண்டல பூஜையின் சக்தி பெற்ற விபூதியை அனுப்பி எம்மை துன பத்திலிருந்து காத்து வருவதற்கு என்றுமே நன்றி கூறுகிறோம் ஐயா,"

கொழும்பு அன்பரின் மடல், "அச்சொட்டான கைரேகை பலன்"

"மதிப்பிற்குரிய சாமிகங்காதுரலுக்கு, எனது கைரேகையின் பலனைக் கொண்டு தெளிவான முறையில் கடந்த கால, நிகழ் கால, எதிர் கால பலன்களை கூறி எனை ஆச்சரியப்பட வைத்ததுக்கு நன்றி. உங்களது சேவை தொடரட்டும்."

டென்மார்க் அன்பரின் மடல், "அதிசயிக்கத்தக்க முடி வளர்ச்சி"

"அன்புள்ளம் கொண்ட ஐயா! தலையில் முடியுதிர்வதைத் தடுத்து நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நலமுடன் வாழ எனக்கு வழிகாட்டியமைக்கு என்றென்றும் தங்களுக்கும் துர்க்கையம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்."

இனியென்ன உங்கள் குறை?, திருமணம் நடக்கவில்லையென்ற அங்கலாய்ப்பா?
வெளிநாட்டு பிரயாணத்தடையா?, காதலில் தோல்விகண்டு விட்டீர்களா?
இன்னும் சகலவற்றுக்கும் உள்நாட்டவர்களும் வெளிநாட்டவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

குறிப்பு : இங்கு தீமையான வேலைக்கு இடமில்லை.

39 வருட மாந்திரீக துறையில் நிலையான சேவை புரியும் உலக மாந்திரீக சக்கரவர்த்தி கௌரவ பேராசிரியர் கருணாகர பூசணம் சொல்லின் செல்வன் டாக்டர் பீ.கே. சாமி (J.D.G.A.N)JP

உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி
Dr.P.K.Saamy J.D.G.A. NL JP
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirika
Uchchada Peedam.

கொழும்பில்
No.162,
Kotahena Street,
Mayfield Road,
Colombo 13,
Sri Lanka.

நுவரெலியாவில்
33, Daily Fair Complex,
Kandy Road,
Nuwara-Eliya.
052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL : 00941 342463
FAX : 00941 344831

உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-342463, 431137,47065- Fax: 344831
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.

தினமுரசு சந்தா விபரம்

நாடுகள்	ஒரு வருடம்	6 மாதம்	3 மாதம்
ஐரோப்பிய நாடுகள்	ரூ. 2600	ரூ.1350	ரூ.700
அமெரிக்கா, கனடா	ரூ. 3100	ரூ.1550	ரூ.800
மத்திய கிழக்கு நாடுகள்	ரூ. 2075	ரூ.1050	ரூ.600
உள்ளூர்	ரூ. 740	ரூ.375	ரூ.200

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரை பெறவிரும்புவோர் D.D. Enterprises எனும் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளை முகாமையாளர் தினமுரசு 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற்சுந்தோரில் மாற்றும் வண்ணம் 'Manager Thinamurasu' என்னும் பெயருக்கு கட்டளையிட்டு பதிவுத்தபாலில் Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

"உங்களது பெரிய பிரச்சனை, நடுத்தர பிரச்சனை, சின்னப் பிரச்சனை. நம்பிக்கையாக உங்களுக்கு செய்து தரப்படும் 100% உத்தரவாதம். உங்கள் பிரச்சனைக்குரிய விடை உடனடியாக. உங்கள் பிரச்சனை எதுவாகினும் என்னுடன் தொடர்பு கொள்ளவும். துரிதகதியில் செய்து தரப்படும். பெண் பிரச்சனை, பாலியல் பிரச்சனை, வாழ்க்கையில் வெற்றி, பணக்காரனாக வேண்டுமா? தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்புகொள்ளும் இடம்:
விலாசம் : PR. DANSOKHO ALI,
55. Rue des Poissonniers, 75018 Paris, France.
தொலைபேசி-0142552036

Vella Maxi Credit

சுவிஸில் உங்கள் பணத்தேவைகளை பூர்த்தி செய்ய இலகுவான கடன் வசதிகளை விரைவாக செய்து கொடுக்கின்றோம்

- 100,000 SFR வரை கடன் வழங்கப்படும்
- 10,000 SFRற்கு வருட வட்டி 525 SFR
- ஒரு மாதத்திற்கான கட்டுப் பணம் 877 SFR
- வட்டி வீதம் 9.99%
- ஏற்கனவே கடன் பெற்றவர்களுக்கும் வழங்கப்படும்
- B/C கார் உள்ளவர்களுக்கு மட்டும்

மேலதிக தொடர்புகளுக்கு
கந்தராஜா பிரபு

Vella Credit
Spltalgasse 16 (4ம் மாடி)
3011 Bern
Tel: 031/3122426 Fax: 031/3119351
Natel: 079/7139509

அலசுவது-இராஜதந்திரி

முத்தரப்புச் சந்திப்பில் விடார் ஹெல்கெசன்

இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வு முயற்சிகள் பற்றிய எதிர்கால நடவடிக்கைகளை ஆராயும் விதத்தில் நோர்வேயின் பிரதிவெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கெசன் கடந்த வாரம் கொழும்பு வந்திருந்தார்.

எல்.ரீ.ரீ.ஈ இயக்கத் தலைவர் பிரபாகரன் வடக்கே வட்டக்கச்சிப் பகுதியில் நடாத்திய பத்திரிகையாளர் மாநாட்டையடுத்து இனப்பிரச்சனைத் தீர்வு முயற்சிகள் சம்பந்தப்பட்ட எதிர்பார்ப்பு அனைத்துத்தரப்பிலும் அதிகரித்துள்ளது.

மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி), சிஹல உறுமய போன்ற கட்சிகள் பிரபாகரனின் செய்தியாளர் மாநாடு குறித்துத் முரணான கருத்துக்களை வெளியிட்டுள்ளன. ஆயினும், எல்.ரீ.ரீ.ஈ அமைப்பின் அரசியல் பிரவேசம் குறுக்கீடுகளைச் சந்தித்து சமரச முயற்சிகள் குழம்பிப்போய்விடலாகாது என்பதிலேயே பெரும்பாலான அரசியல் தலைவர்களும், மற்றும் பல்வேறு துறைகள் சார்ந்தோரும் ஆர்வங்காட்டுகின்றனர்.

கடந்தவாரம் இலங்கை வந்திருந்த நோர்வே பிரதிவெளிவிவகார அமைச்சர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி சந்திரிகா, எல்.ரீ.ரீ.ஈ தலைவர் பிரபாகரன் ஆகியோரைச் சந்தித்தார்.

இந்த மூன்று சந்திப்புக்களும் இனப்பிரச்சனைத் தீர்வு முயற்சிகளைப் பொறுத்தவரை மிக முக்கியமானவையாகும்.

பிரபா, ரணில், சந்திரிகா ஆகிய மூவருமே தற்போதைய இனப்பிரச்சனைத் தீர்வு நடவடிக்கைகளில் மூன்று முக்கிய பாத்திரங்களாக இருக்கின்றனர்.

இந்த மூவருக்குமிடையே ஏற்படக்கூடிய புரிந்துணர்வின் அடிப்படையிலேயே சமரச முயற்சிகளை ஆக்கபூர்வமான முறையில் கட்டியெழுப்பமுடியும்.

இதன் காரணமாகவே இலங்கைப் பிரச்சனை தீர்வு விடயத்தில் ஜனாதிபதி, பிரதமர், மற்றும் பிரபாகரனுக்கு இடையிலான புரிந்துணர்வை நல்ல முறையில் வைத்திருப்பதில் நோர்வே அக்கறை காட்டி வருகின்றது. நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கெசன் கருத்து வெளியிடுகையில், "தமக்குத் திருப்தியும், உற்சாகமும் தரும் விதத்தில் பிரதமர், ஜனாதிபதி, பிரபா ஆகியோருடன் தாம் நடாத்திய சந்திப்புக்கள் அமைந்திருந்தன" எனக் குறிப்பிட்டுள்ளார்.

இடைக்கால நிர்வாகமொன்றை வடக்கு - கிழக்கில் ஏற்படுத்துதல், எல்.ரீ.ரீ.ஈ அமைப்பின் மீதான தடையை நீக்குதல், தாய்லாந்தில் நடாத்த உத்தேசிக்கப்பட்டுள்ள பேச்சுவார்த்தை என்பவை பற்றியே விடார் ஹெல்கெசனின் கடந்தவார இலங்கை விஜயத்தின் போது பெரிதும் ஆராயப்பட்டிருந்தது.

இந்த விடயங்களில் எல்.ரீ.ரீ.ஈ அமைப்பின் மீதான தடை நீக்கம் மற்றும் வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகம் என்பவை குறித்தே ஹெல்கெசன் தமது முத்தரப்புச் சந்திப்புக்களின் போது முக்கியமாகப் பேசியிருந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தாய்லாந்துப் பேச்சு வார்த்தைகளுக்கு முன்பதாகத் தம்மீதான தடை நீக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி வருகின்றது.

1998ம் ஆண்டு கண்டி ஸ்ரீதலதா மாளிகை மீதான தாக்குதலை அடுத்தே எல்.ரீ.ரீ.ஈ அமைப்பின் மீது தடை கொண்டுவரப்பட்டிருந்தது.

ஜனாதிபதி சந்திரிகாவின் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட இத்தடையை நீக்கும் பட்சத்திலேயே தாய்லாந்தில் இடம்பெறும் பேச்சுக்களில் தமது அமைப்பினால் பங்குபற்ற முடியும் என எல்.ரீ.ரீ.ஈ தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த டிசம்பர் மாதம் எல்.ரீ.ரீ.ஈ அமைப்பு யத்தநிறுத்தத்தை அறிவித்து, சமரசப் பேச்சு வார்த்தைகளில் ஈடுபடும் தனது எண்ணத்தை வெளியிட்டிருந்தது. இதனையடுத்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்ட நடவடிக்கைகள் வரவேற்கத் தக்கவையாகவும், முன்னேற்றகரமானவையாகவும் அமைந்திருந்தன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அணுகுமுறைகளுக்கு நாட்டு மக்கள் அனைவரும் ஆதரவளிப்பதையே நடந்து முடிந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் முடிவுகளும் வெளிப்படுத்தியிருந்தன.

எல்.ரீ.ரீ.ஈ அமைப்பு பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற ஆட்சிக்காலத்தில் கூடப் பலதடவைகள் யுத்தநிறுத்தத்தை அறிவித்தது.

ஆனால், இந்த யுத்தநிறுத்த அறிவிப்பை பொ.ஐ.மு அரசு உரிய விதத்தில் ஏற்றுக்கொள்ளவில்லை. கூடவே, எல்.ரீ.ரீ.ஈ அமைப்புக்கு அரசியல் பிரவேசம் செய்வதற்கான வாய்ப்பையும் வழங்கியிருக்கவில்லை.

ஒரு பயங்கரவாத அமைப்பு என்ற வரையறைக்குள் எல்.ரீ.ரீ.ஈ அமைப்பை வைத்திருந்ததோடு சர்வதேச சமூகமும் அதன் மீது தடைகளைக் கொண்டுவர வேண்டுமென்பதிலேயே சந்திரிகா அரசு ஆர்வம் காட்டியிருந்தது.

ஆனால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அணுகுமுறை எல்.ரீ.ரீ.ஈ அமைப்பை முழுஅளவில் அரசியலில் ஈடுபடச்செய்து வடக்கு - கிழக்குப் பிரச்சனைக்கு ஒரு நிரந்தரத் தீர்வைக் கொண்டு வரச்செய்வதாகவே இருக்கிறது.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த தென்னாசியப் பிராந்தியத்துக்கான அமெரிக்க இராஜாங்கப் பிரதிநிதி கிறிஸ்டினா ரொக்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் சமரச நடவடிக்கைகள் தொடர்பாகப் பேசினார். அத்துடன் யாழ்ப்பாணத்துக்கும் சென்றதோடு, அங்குள்ள நிலைமைகளையும் நேரடியாகவே பார்வையிட்டிருந்தார்.

இதன் பின்னர் கொழும்பு திரும்பி நடாத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் ரணில்-பிரபா ஆகியோருக்கிடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தை வரவேற்றுள்ளதுடன், எல்.ரீ.ரீ.ஈ அமைப்பு முழுஅளவில் ஜனநாயக அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட முன்வரும் பட்சத்தில், அதனை அமெரிக்கா அறிவித்துள்ள சர்வதேச பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலிலிருந்து நீக்கிவிடுவது பற்றி ஆராய முடியுமெனவும் கிறிஸ்டினா ரொக்கா கூறியிருந்தார்.

இதுதவிர கடந்தவாரம் அமெரிக்காவுக்கு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் பயணம் செய்திருந்தார். அப்போது ஜோர்ஜ் புஷ் நிர்வாகத்தின் முக்கியஸ்தர்கள் சிலரையும் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் சந்தித்ததுடன், இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வு முயற்சிகள் பற்றியும் அவர்களுக்குக் கூறியிருந்தார்.

பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கூறியவற்றுக்குப் பதிலளித்த அமெரிக்கப் பிரதிநிதிகள் இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்படுவதைத் தாம் ஆட்சேபிக்கப்போவதில்லை எனக் கூறியிருந்தனர். அத்துடன், இலங்கையில் அத்தடை நீக்கம் அமெரிக்காவுக்கு எத்தகைய பிரச்சனையையும் ஏற்படுத்தப்போவதில்லை எனவும் தெரிவித்திருந்தனர்.



எல்.ரீ.ரீ.ஈ அமைப்பு ஒரு களங்கமற்ற நிலையிலேயே முழுஅளவில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டுமென எதிர்பார்ப்பதை அறியமுடிகின்றது. அத்துடன் வடக்கு - கிழக்குப் பிரச்சனைத் தீர்வுக்கான சமரச முயற்சிகளில் எல்.ரீ.ரீ.ஈ அமைப்புடன் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்படவேண்டுமென்ற நிலைப்பாடும் முன்னொருபோதுமில்லாதவாறு தற்போது வலுப்பெற்றதாகவே இருக்கின்றது.

கடந்த பெப்ரவரி மாதம் இறுதிப்பகுதியில் ரணில் - பிரபா புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தானது முதல் இதுவரை எல்.ரீ.ரீ.ஈ அமைப்பு மேற்கொண்டு வருகின்ற நடவடிக்கைகள் அதன் விரிவான அரசியல் பிரவேசத்தையே புலப்படுத்துகின்றது.

ஒரு தீவிரவாதத் தலைவர், அத்துடன் இலகுவில் எவராலும் அணுகமுடியாதவர் என்ற நிலையில் இருந்தும் விலகி ஓர் அரசியல் முக்கியஸ்தர் என்ற ரீதியிலேயே எல்.ரீ.ரீ.ஈ தலைவர் பிரபாகரன் தம்மை மாற்றிவருவதை அவதானிக்க முடிகின்றது.

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கெசன் கடந்த வாரம் எல்.ரீ.ரீ.ஈ தலைவர் பிரபாகரனைச் சந்தித்த பின்னர் கருத்து வெளியிடுகையில், "அரசியல் ரீதியாக பிரபாகரனிடம் காணப்படும் மாற்றம் மிகவும் வரவேற்கத்தக்கதாகவே இருக்கின்றது. அரசியல் நடவடிக்கைகளில் பயன்தரக் கூடிய விதத்தில் தாம் நடந்துகொள்ள வேண்டுமென அவர் எதிர்பார்க்கின்றார்" எனக் கூறியிருந்தார்.

இந்நிலையில் பிரபாகரன் மீளவும் தீவிரவாத நடவடிக்கைகளில் இறங்காத விதத்தில் அவருக்கு முழுஅளவில் அரசியலில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்களை வழங்குவது பற்றியே அரச தரப்புச் சிந்திக்க வேண்டியிருக்கின்றது. இது விடயத்திலேயே எல்.ரீ.ரீ.ஈ அமைப்பு மீதான தடையை நீக்குவது பற்றியும் கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கின்றது.

இது இவ்வாறிருக்க தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா ஜெயராம் அண்மைக் காலங்களில் எல்.ரீ.ரீ.ஈ தலைவரை இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டுமெனக் கோரிவருவது விசனத்துக்குரியதாகவே இருக்கின்றது.

முதலமைச்சர் ஜெயலலிதா தமிழகத்தில் தமது அரசியல் எதிரிகளைப் பழிவாங்கும் விதத்திலும், மத்திய அரசுக்கு சங்கடத்தை ஏற்படுத்தும் விதத்திலுமே பிரபாகரன் பற்றிய சமாச்சாரத்தை ஆரம்பித்துள்ளார்.

அவர் எதைக் கூறினாலும், அல்லது கோரினாலும் இலங்கையின் இன்றைய அரசியல் சூழ்நிலையில் எல்.ரீ.ரீ.ஈ தலைவர் பிரபாகரன் ஒரு முக்கிய சக்தியாகவே இருக்கிறார்.

எனவே பிரபாகரனைப் புறக்கணித்து முதல்வர் ஜெயலலிதா கூறுவது போல் இலங்கையின் ஆட்சியாளர்கள் நடந்து கொள்வார்கள் என எதிர்பார்ப்பது மடைமையாகவே இருக்க முடியும்.

அதிரடி அய்யாத்துரை

காரியம் கைகூடமுந்தி பாய்ஞ்சு விழுந்து பள்ளாகிப்போறவையை "முந்திரிக் கொட்டை" எண்டு சொல்லுவினமே, அந்தப் பெயருக்கு அச்சொட்டாப் பொருந்திறபேர்வழி எங்கட அமைச்சர் மகேஸ்வரன்தானெண்டால் மிகையாகாது கண்டியளோ! பெரிய ஆரவாரத்தோட இந்து கலாசார அமைச்சு ஏ 9 ரோட்டால பஸ் ஓடப் போகுதெண்டு சொல்லி பஸ் ஒண்டுக்கு மாலையும் போட்டு சனத்தையும் ஏத்தி யாழ்ப்பாணத்தில இருந்து கொழும்பக்கு அனுப்பி வைச்சார் பாருங்கோ. ஆனால், முகமாலையிலயே வைச்சு புலிகள் சனத்தை இறக்கிப்போட்டு பஸ்ஸைத் திருப்பி அனுப்பிப் போட்டினம். அவற்றை கொழும்பு பஸ்தான் எக்கணம் வந்து சேந்திட்டுதோவெண்டு சனம் ஓடிப்போய்ப் பாத்தால் "போன மச்சான் திரும்பி வந்தான் பூமணத்தோட" எண்டது தெரிஞ்சுதாம். முதலும் மே மாதத்தோட புலித்தடை எடுபடுமெண்டு முந்தி விழுந்து சொல்லி, ரணிலிட்டப் பேச்சு வாங்கிக் கட்டினவரெல்லே, இந்தாள் திருந்தாதெண்டு சலிப்பக்கொட்டிப் போட்டு திரும்பிப் போச்சுதாம் சனம்.

அமைச்சர் ரவூப் ஹக்கீம், தொண்டமான், சந்திரசேகரன் எல்லாரோடயும் சந்திப்பு நடத்தக்க அவையள வாசலில போய் நிண்டு வரவேற்ற புலிகள் தலைவர் பிரபா, எங்கட சீட்டுக் கட்சிமாரைச் சந்திக்கேக்க மட்டும் அவையள் வந்து காத்துக்கிடந்து ஒருமணிநேரத்துக்குப் பிறகு தான் வந்து கண்டாராம். எவையெவையை எந்தக் கணக்கில வைச்சிருக்கிறாரெண்டதை அவையவை புரிஞ்சுகொள்ளத்தான் இந்த ட்ரீட்மெண்ட் போல. அதாலதான் வழக்கமா ஒரு சின்ன விஷயத்துக்கும் பெரிசாக் கொக்கரிக்கிறவை இப்ப புலிகள் தலைவரை நேர சந்திச்சுப் போட்டே ஒரு அறிக்கையும் விடாமல் கப்சிப்பெண்டு இருக்கினம். "பேச்சுப் பேச்சென்னுமாம், பெரும் பூனையைக் கண்டாற்கால் கீச்சுக் கீச்சென்னுமாம் கிளி!"

எங்கட வினாயகத்தாருக்கு காது கேக்கிறதில்லையோ? இல்லை கேக்காதது மாதிரி நிக்கிறாராவெண்டு தெரியேல்லைப் பாருங்கோ. உண்ணாவிரதமிருக்கிற தமிழ் அரசியல்கைதிகள் விஷயத்தில எல்லாத் தமிழ் எம்பிமாரும் ஏன் ஒண்டுபட்டு நடவடிக்கை எடுக்கக்கூடாதெண்டு பி.பி.சி. க்காறன் தெளிவாக் கேக்கிறான். இவரோ, தான் எவ்வளவோ காலமா அவையள விடுவிக்கச் சொல்லிக் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறாரெண்டு தன்னைப் பற்றித்தான் திரும்பத்திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறார். ஐயாவால ஏலாதெண்டு தெரிஞ்சுதான் எல்லோரும் சேந்து ஒண்டா நடவடிக்கை எடுக்கச் சொல்லிக் கேக்கினமெண்டது இன்னும் ஆளுக்குப் புரியேல்லை. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கெண்டு சின்ன வயசில படிக்கேல்லைப் போலக் கிடக்குது.

புலிகள் தலைவரோட பேசினதுக்கு அமைச்சர்கள் ஹக்கீம், ஆறுமுகன், சந்திரசேகரன் எண்டவைக்கெதிரா நம்பிக்கை இல்லாத் தீர்மானமொண்டு கொண்டுவர வெளிக்கிடுகிற எதிர்க்கட்சிதான், தங்கட ஆட்சியில அவையள அமைச்சர்கள், பிரதியமைச்சர்களா நம்பி வைச்சிருந்தவை. உப்பிடிக் குதிக்கிறவை முந்தி எஸ்.எல்.எப்.பியில இருந்து அநுரா போய்ப் புலிகளைக் காட்டுக்க சந்திச்சதையும், அதுக்கு முதல் விஜயகுமாரதுங்கவுடன் சந்திரிகாவும் சேந்து யாழ்ப்பாணத்துக்கும் இந்தியாவுக்கும் போய் புலிகளைச் சந்திச்சதையும் மறந்து போச்சினமோ என்னவோ?

பெற்றோலும், டீசலும் திரும்பவும் விலையேறிட்டுது. ஸ்டாம்ப்பும் விலை கூடிட்டுது. தொலைபேசிக்கட்டணம் அடுத்த மாசம் கூடுது. மின்சாரக் கட்டணமும் உயரப்போகுது. என்னமோ சண்டையாலதான் சாமான் விலை ஏறிட்டுதெண்டு நியாயம் சொல்லிச்சினம். இப்ப பாத்தால் சண்டை நிண்டாலும் விலையேற்றம் நிண்டபாடில்லையெண்டால் எங்க போய் முட்டுறதாம் சனம். சமாதானச் செய்திகளை பத்திரிகைத் தலைப்பில பாக்கேக்க உச்சி குளிருது. கீழ விலையேற்றங்கள வரிசையா வாசிக்கேக்கையெல்லோ வயிறு பகீரெண்டுது. நிலாவைக் காட்டிச் சோறு ஊட்டினால் நல்லதுக்கெண்டு சொல்லலாம். இங்க பறாவைக் காட்டி விலையேத்திறத என்னெண்டு சொல்ல?

கால்பந்தாட்டப் போட்டிக்கான நுழைவுச் சீட்டுக்கள்

10 மடங்கு விலைக்கு இணையத்தில் விற்பனை!

உலகக் கால்பந்தாட்டப் போட்டி தென்கொரியாவின் தலைநகரான சியோலில் ஆரம்பமாவதற்கு இன்னும் ஒரு மாத காலம் மாத்திரமே இருக்கும் நிலையில் எவ்விதக் குழறுபடிகளுமின்றி இந்தப் போட்டிகளை எவ்வாறு நடாத்தி முடிப்பது என்று அந்த நாட்டின் பாதுகாப்பு அதிகாரிகள் இரவு பகலாகச் சிந்தித்து வருகின்றார்கள்.

பயங்கரவாத அமைப்புக்களின் வன்முறைகள், போலி நுழைவுச்சீட்டு விற்பனைகள், எதிரிநாட்டு உளவாளிகள் தென்கொரியாவுக்குள் பிரவேசிப்பதைத் தடுத்தல் என்று பல்வேறுவகையான பிரச்சனைகள் எதிர்நோக்கப்படுகின்றன.

போட்டி இடம்பெறும் காலப் பகுதியில் பாதுகாப்பு விடயங்களில் அசிரத்தையாக இருந்தால் அதனைப் பயன்படுத்தி சியோலில் உள்ள அமெரிக்க ஆதரவு மையங்களை இஸ்லாமியத் தீவிரவாதிகள் தாக்கலாம் என்ற அச்சம் வெகுவாகக் காணப்படுகிறது. இதனைத் தடுப்பதற்காக கால்பந்தாட்டப் போட்டிகளைக் காணவெனக் கூறித் தென்கொரியாவுக்குள் பிரவேசிக்க இருக்கும் அனைவரையும் தீவிர சோதனைக்கு உட்படுத்தத்திட்டமிடப்பட்டுள்ளது.

போலி நுழைவுச்சீட்டுக்கள் விற்பனை வருமானத்தில் மண்ணள்ளிப் போட்டுவிடுமோ என்ற பயம் போட்டி ஏற்பாட்டாளர்களைப் பிடித்துள்ளது. பலகோடி டொலர் செலவில் மைதானம் அமைத்துப் போட்டிக்கான ஏற்பாடுகளைத் தென்கொரிய அரசு மேற்கொண்டுள்ளது. நுழைவுச் சீட்டு விற்பனை மூலம் இந்தச் செலவுகளை ஈட்டலாம் என்பதே ஏற்பாட்டாளர்களின் நம்பிக்கை. ஆனால், போலியாக அச்சிடப்பட்ட நுழைவுச் சீட்டுக்கள் ஏற்கனவே விற்பனைக்கு வந்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.



ஜப்பான், தென்கொரியா ஆகிய நாடுகள் பங்குகொள்ளும் போட்டிகளுக்கான நுழைவுச் சீட்டுக்கள் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட 100 மடங்கு அதிகரித்த விலைக்கு இணையத்தில் விற்பனையாகின்றது. நுழைவுச்சீட்டுக்கள் விற்றுத் தீர்ந்த பின்பும் கறுப்புச் சந்தையில் உற்சாகமான நுழைவுச் சீட்டு வியாபாரம் நடைபெற்று வருகின்றது.

மறுபுறத்தில் உளவாளிகள் குறித்த பயம். வடகொரியாவும், தென்கொரியாவும் கடும் பகைமை பாராட்டும் இரு அயல் நாடுகள். கால்பந்தாட்டப் போட்டிகளைப் பார்ப்பது என்ற போர்வையில் வடகொரிய உளவாளிகள் தென்கொரியாவுக்குள் நுழையலாம் என்ற பயந்தான் அந்நாட்டு பாதுகாப்பு அதிகாரிகளைச் சிந்திக்க வைத்துள்ளது. உலகக்கிண்ண கால்பந் தாட்டத்தின் போட்டிகள் சில ஜப்பானிலும் நடைபெறவுள்ளன.ஜப்பான் ஏற்கனவே விசேட படையணியொன்றை நிறுவிப் பாதுகாப்பைப் பலப்படுத்தியிருக்கிறது.

ஜப்பானின் டோக்கியோ நகருக்குத் தெற்காக உள்ள யொகஹமாவில் தான் இறுதியாட்டம் நடைபெறவிருக்கிறது. அந்த நகரில் இப் பொழுதிலிருந்தே அதிகப்படியான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஒருமுடிவருந்து

கடிதங்களை ஆவலோடு பிரிக்கும் காலங்கள் போய், திகிலோடு பிரிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளிய பின்லேடன் தொடக்கி வைத்த அந்திரக்ஸ்ஸின் கொட்டத்தை அடக்க, இப்போது மேலைநாடுகளில் மருந்து கண்டு பிடித்துவிட்டார்கள்.

ஆட்டம்காணும் அந்திரக்ஸ்

இனி அமெரிக்காவின் சாதாரண பிரஜையிலிருந்து ஜனாதிபதி புஷ்வரை அச்சமின்றி கடித உறையைப் பிரிக்கலாம். உலகை அச்சுறுத்திய நோயை உண்டுபண்ணும் அந்திரக்ஸ் கிருமிகளை அழித்தொழிக்கும் மருந்து அப்படி ஒன்றும் புதியதல்ல.

நாம் நாளாந்தம் வாழ்வில் பயன்படுத்தும் பற்பசை மற்றும் தலைக்கு உபயோகிக்கும் கண்டிஷனர் ஷம்பூக்களில் அடங்கியுள்ள "டொக்கன் ∴போம்" என்ற பொருள்தான். இதனை நேரடியாக அந்திரக்ஸ் கிருமிகள் மீது தெளிக்கும் போது அவை காணாமல் போய்விடும். தொடர்ந்தும் கருமூலம் இனப்பெருக்கம் செய்யமுடியாமல் அவை அழிந்துவிடுவதால் அந்திரக்ஸ்ஸின் கதை அத்தோடு முடிகிறது. அழிவிற்குப் பயன்பட்டது ஒரு மூளை என்றால் ஆக்கத்திற்குப் பயன்பட்டது ஆயிரம் மூளைகள் என்பதை இனியாவது மனித உயிர் மீது மதிப்பளிப்பவர்கள் புரிந்து கொள்வார்களாக! ■

இதம்தரும் காலணிகள்

நீரிழிவு, முன்புதான் இதனைப் பணக்காரர்களின் நோய் என்றெல்லாம் கூறுவார்கள். இப்போதோ முப்பது வயது கடந்த பின் எல்லோர் கண்முன்னும் பயம் காட்டும் மந்திர வார்த்தை. உலகிலேயே அதிகமானவர்களைத் தாக்கி வருவது நீரிழிவுதான் என்று அண்மையில் நடாத்திய ஆய்வுப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இந்நோயுள்ளவர்களுக்கு இரத்தோட்டம் சீராக இருக்க வேண்டியது மிக முக்கியம். அப்படிச் சீராக இல்லையெனில் தாங்கமுடியாத வலியும், வீக்கமும் ஏற்படும். கால் வீங்கும் போது சாதாரண செருப்புக்கள் அணிந்திருந்தால் அவை இறுக்கமாகி உபாதையை இன்னும் அதிகமாக்கும். இந்த உபாதையிலிருந்து நீங்குவதற்காகவே இப்போது அமெரிக்காவில் நீரிழிவுக் காலணிகள் பிரத்தியேகமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. அவை அகலம் கூடியதாக காலின் வீக்கத்துக்கு ஏற்றாற்போல் உருமாறும் துணியிலே தைக்கப்படுகின்றன. ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியாக உருவாக்கப்படும் இக் காலணிகள் கால்களை மிருதுவாகவும் கதகதப்பாகவும் வைத்துக்கொள்ள உதவுகின்றன.



இக் காலணிகளின் வெளிப்பகுதி காற்றுப் புகக்கூடிய பஞ்சு மெத்தையாலும், உட்பகுதி ஈரத்தை உறிஞ்சும் பஞ்சுத்துவாலையாலும் செய்யப்பட்டவை. தேவைக்கேற்றாற்போல் அளவை மாற்றிக்கொள்ளக்கூடிய விதத்தில் அமைக்கப்பட்டுள்ளன. அடிப்பகுதி வழுக்காத விதத்தில் விசேடமாகச் செய்யப்பட்டிருக்கும்.

நீரிழிவு என்றில்லை, பொதுவாகவே கணுக்கால் வலி, கால்வீக்கம், கட்டைவிரல் உபாதை, கால்களில் இரத்த ஓட்டக் குறைவு உள்ளவர்கள் என யாவருக்கும் இது ஒரு வரப்பிரசாதம்தான்.

இனியென்ன அமெரிக்காவிலிருந்து நாடு திரும்பும் அனேகமானோரின் பைகளில் இருக்கப்போகிறது இந்த நீரிழிவுக் காலணிகள், ஓர் பரிசுப் பொருளாக!

இணையத்தினூடாக ஒப்பந்தம் செய்துகொண்ட மூவர் ஒரே நேரத்தில் தற்கொலை!

இணையத்தளத்தினூடாக ஒப்பந்தம் செய்து கொண்ட மூவர் தமது ஒப்பந்தப்படி தற்கொலை செய்துள்ளார்கள். தென்கொரியத் தலைநகரான சியோலில் கடந்த வெள்ளிக்கிழமை இந்த அதிர்ச்சியூட்டும் சம்பவம் நிகழ்ந்தது.

தற்கொலைக்கெனப் பிரத்தியேகமாக இணையத் தளங்கள் இயங்குகின்றன. இத்தகைய தளமொன்றில் அறிமுகமான இரண்டு பெண்களும், ஒரு ஆணும் குறித்த தினத்தில் இந்த மானுட வாழ்வை முடித்துக்கொள்வதென ஒப்பந்தம் செய்து கொண்டனர். அதன் பிரகாரம் உயரமான அடுக்குமாடிக் கட்டடமொன்றிலிருந்து கீழே குதித்துத் தற்கொலை செய்துகொண்டனர். இவர்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்ட இன்னொரு நபர் கடைசி நேரத்தில் மனம் மாறியதால் உயிர் தப்பினார். இவர் மூலமாகவே இந்தத் தற்கொலை விபரங்கள் வெளியாகின.

முதலில் 34 வயதான ஒரு ஆண் இணையத்தில் அறிமுகமானதாகவும், அதே வலையமைப்பில் மேலும் இரண்டு பெண்களின் தொடர்பு கிடைத்ததாகவும், அவர்களில் ஒருவருக்கு 15 வயது, மற்றவருக்கு 16வயது. "நாங்கள் நால்வரும் அடிக்கடி இணையத் தளத்தில் தொடர்பு கொள்வோம். ஒருநாள் மாத்திரம் நான் அவர்களைச் சந்தித்திருக்கிறேன்.

நாங்கள் நால்வரும்ஒரு ஹொட்டலில் தங்கினோம். இணையத்தில் பார்த்தது போன்று வித்தியாசமான முறைகளில் செக்ஸில் ஈடுபட்டோம். எங்கள் எல்லோருக்கும் அந்த அனுபவங்கள் புதுமையாகவும், இனிமையாகவும் இருந்தன. விரைவில் நாம் சொர்க்கத்தில் சந்தித்துக்கொள்வதாக் கூறி விடை பெற்றோம். ஆனாலும், இணையத் தளத்தில் எமது சம்பாஷணைகள் தொடர்ந்தன.

சொர்க்கம் செல்ல வேண்டிய திகதியையும், சியோலில் உள்ள 28 மாடிக் கட்டடமொன்றில் இருந்து குதிப்பதெனவும் தீர்மானித்துக்கொண்டோம். அதன்படியே வெள்ளிக்கிழமை இரவு 2 மணிக்கு நாம் ஒன்று சேர்ந்தோம். எனக்குத் தற்கொலை செய்துகொள்ள மனம் இடம்தரவில்லை. எனது பயத்தை அவர்களிடம் கூறினேன். எவரும் என்னை வற்புறுத்தவில்லை. கட்டடத்தின் மேல்மாடியில் நான் பார்த்திருக்கும் போதே தமது ஆடைகளை மூவரும் களைந்தார்கள். இறப்பதற்கு முன் அந்த ஆண் இரு பெண்களுடனும் உடலுறவு கொண்டார். பின்னர் களைப்பு நீங்கு முன்னரே நிர்வாணமாக மூவரும் ஒருவரை ஒருவர் தழுவியவாறு மாடியிலிருந்து குதித்தார்கள்" எனத் தற்கொலை செய்யவிருந்த நான்காவது நபர் தனது வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார்.

உலகத்திலேயே அதிகளவில் இணையத் தளத்தைப் பாவிப்பவர்கள் தென்கொரிய மக்கள் தான். அதனால், அந்த நாட்டில் தற்கொலை இணையத்தளங்களும், காளான்கள் போல முளைத்துள்ளன. இம் மூவரினதும் தற்கொலை சியோலில் பலத்த பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. இவ்வாறான தற்கொலை இணையத் தளங்களை இயக்குபவர்களைக் கண்டுபிடித்து இல்லாதொழிக்குமாறு பத்திரிகைகள் அழுத்தம் கொடுத்து எழுதத் தொடங்கியுள்ளன.



இணையத்தளங்களில் ஒப்பந்தம் செய்து தற்கொலை செய்துகொள்ளும் முட்டாள்தனமான வழிமுறை உலகெங்கிலும் வியாபித்து வருவதாக சியோல் பல்கலைக்கழக சமூகவியல் பேராசிரியர் ஒருவர் கூறுகிறார். கடந்த 18 மாத காலத்தில் 20 பேர் இவ்வாறு இணையத் தள ஒப்பந்தங்களில் தற்கொலை செய்துள்ளார்கள்.



பட உதவி: நெட் பிரியன்



பின் லேடன் ஸ்டைல்

இந்தக் கட்டடத்தை பார்த்ததும் ஒசாமா பின்லேடன்தான் ஞாபகத்தில் வருவார். இதுவும் அப்படியான ஒரு சமாச்சாரம்தான். இத்தாலியின் மிலான் நகரில் உள்ள இந்த 30 மாடிக் கட்டடத்தில் கடந்த 19ம் திகதி சிறிய ரக விமானம் ஒன்று வந்து மோதுண்டது. ஐந்துபேர் கொல்லப்பட்டனர். அமெரிக்காவில் இடம்பெற்ற தாக்குதல் போன்று மற்றொரு விமானத் தாக்குதல் இடம்பெற்று விட்டதோ என்ற அச்சம் ஒரே நிமிடத்தில் இத்தாலி முழுவதும் பற்றிக் கொண்டது. அந்த நாட்டின் பங்குச் சந்தை உடனடியாக மூடப்பட்டது. ஆனால் விசாரணை நடத்திய பொலிஸார் இது பயங்கரவாத தாக்குதல் அல்ல பயப்படத் தேவையில்லை என்று கூறிவிட்டனர். 67 வயதான சுவிஸ் நாட்டுப் பிரஜை ஒருவர் தவறுதலாக விமானத்தைக் கட்டடத்தின் மீது மோதவிட்டுள்ளார்.

நடுக்காட்டில்

அமெரிக்காவின் ஃபுளோரிடா மாநிலத்தில் 427 பயணிகளுடன் சென்ற தன்னியக்க ரயில், தண்டவாளத்தை விட்டு விலகி பெட்டிகள் அங்கும் இங்குமாக சிதறிக் காணப்படுகின்றது. நீண்டதூர சேவையில் ஈடுபட்டிருந்த இந்த ரயில் செவில் என்ற அடர்ந்த காட்டுப்பகுதிக்கு மத்தியில்தான் விபத்துக்குள்ளானது. ரயில் வீதிக்கு சமாந்தரமாக தரைப்பாதையில் வாகனப் போக்குவரத்து இடம்பெறுகின்ற போதிலும் ரயில் விபத்து நடந்து பல மணிநேரம் ஸ்தலத்திற்கு எவரும் செல்லவில்லை. காயமடைந்த பயணிகள் பலர் வெளியே வரமுடியாமல் பெட்டிகளுக்குள் அடைபட்டுக்கிடந்தனர். கடந்த 18ம் திகதி இடம்பெற்ற இந்த விபத்தில் குறைந்த பட்சம் 10 பேர்வரை கொல்லப்பட்டதுடன் நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

அக்கிரமம்



குகைக் கூட்டு

இஸ்ரேலியர்களின் கண்மூடித்தனமான தாக்குதல்களால் தரை மட்டமாக்கப்பட்ட மேற்குக் கரையின் ஜெனின் அகதிமுகாமில் தமது பிள்ளைகளையும் உறவினர்களையும் தேடியலையும் பாலஸ்தீனப் பெண்களைத்தான் இங்கு காண்கிறீர்கள். கடந்த ஒரு மாதகாலமாக இஸ்ரேலிய இராணுவத்தின் முற்றுகைக் குள்ளாகியிருக்கும் ஜெனின் முகாமில் சுமார் 500 பாலஸ்தீனர்கள் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப் படுகின்றது. கவச வாகனங்களுடன் முற்றுகையிட்டிருக்கும் இஸ்ரேல் படைகளுக்குப் பயந்து வீட்டை விட்டு வெளியில் வரத்தயங்கிய பெண்கள் சிறுவர்கள் உள்ளிட்ட அப்பாவிப் பொதுமக்களே இவ்வாறு கட்டடங்களுடன் சேர்த்து சமாதியாக்கப்பட்டார்கள். ஆங்காங்கே மறைந்து உயிர்தப்பிய பலர் தமது உறவினர்கள் எவரேனும் இடிபாடுகளுக்குள் சிக்கி உயிருடன் இருக்கிறார்களோ என தேடித்திரியும் காட்சி நெஞ்சை உருக வைக்கிறது எனக் கூறும் ராய்ட்டர் செய்தியாளர் ஒருவர், இந்தக் காட்சி கடந்த ஆண்டு குஜராத்தில் இடம்பெற்ற பூகம்பத்தின்போது உயிர் தப்பியவர்களைத் தேடும் காட்சியை ஞாபக மூட்டுவதாகக் கூறியுள்ளார். இந்த அக்கிரமத்தின் முன்னால் மேற்குலக சமூகம் மட்டுமல்ல இஸ்லாமிய உலகும் கண்ணை மூடிக் கொண்டு தான் இருக்கிறது.

சினி விசிறி

பெயரில்லாப் படத்தில் முரளி

ஃபென்டாஸ்டிக் கிரியேஷன்ஸ் என்ற புதியபட நிறுவனம் முரளியின் படத்தைத் தயாரிக்கிறது.

இந்தப் படத்திற்குத் தலைப்பென்ன? இயக்குநர் உட்பட யாருக்கும் தெரியாது. அப்படி ஒரு வித்தியாசமாக தலைப்பேயில்லாமல் படமாக்கி வருகிறார்கள். கன்னடத்தில் வெற்றிப்படங்களைத் தந்த அர்ஜுன்தான் இப்படத்தின் கதை, திரைக்கதை, வசனமெழுதி இயக்குகிறார். இதுவே இவரது முதல் தமிழ் திரைப்படமும் கூட. மஹதி பிரியா இசையமைக்க, சுரேந்திரநாத் பேகூர் ஒளிப்பதிவு செய்கிறார். எடிட்டிங் விருபாக் ஷா, கலை ரகு.

முரளிக்கு இந்தப் படத்தின் புதிய அனுபவம் முதன் முறையாக வெளிநாட்டில் நடித்துப் படமாகிவருவது தான். மற்றும் மணிவண்ணன், வடிவேலு, சுமித்ரா நடிக்கிறார்கள். இது முழுக்கமுழுக்க காதல் கதையாம். அது சரி, அதற்காகத் தலைப்பே இல்லாத கதையா? அல்லது தலைப்பிற்குத் தட்டுப்பாடா? நல்லவேளை தலைப்புத்தான் இன்னும் முடிவாகவில்லை. கதையே முடிவாகாமல் படம் எடுக்கத் தொடங்கியிருந்தால் ரசிகப் பெருமக்களின் கதி என்னவாகியிருக்கும் என்று யோசித்துப் பாருங்கள்!

பிரபுதேவா - ஆமிஷா
படம்: அலாவுதீன்

மோனல் ரசிகர்கள் தற்கொலை

ஊத்தங்கரையில் தற்கொலை செய்துகொண்ட நடிகை மோனல் ரசிகர்களின் 3 பேரினது சடலங்களை பொலீஸுக்குத் தெரியாமல் எரித்ததாக 6 பேர் கைது செய்யப்பட்டனர்.

ஊத்தங்கரை அருகேயுள்ள கல்லாவி போயர் தெருவைச் சேர்ந்த நண்பர்கள் மாதேஸ்(19), ரமேஷ்(20), வேலுமணி(20) ஆகியோர்.

நடிகை மோனல் தற்கொலை செய்து கொண்டதை அடுத்து கடந்த திங்கட்கிழமை மதுவில் பூச்சிகொல்லி மருந்தைக் கலந்து குடித்துத் தற்கொலை செய்துகொண்டனர் இவர்களது சடலங்களை உறவினர்கள் பொலீஸுக்குத் தெரியாமல் எரித்துவிட்டனர்.

நான்கு படங்களில் மாத்திரமே நடித்துள்ள மோனல் கடந்தவாரம் தனது வீட்டில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டமை குறித்த செய்தி வெளியானதும் கவலை தாங்க முடியாத இம்மூவரும் விஷம் உட்கொண்டு தமது உயிரை மாய்த்துக் கொண்டனர்.

மாதேஸ் என்பவர் அவரது வீட்டில் தனியாகவும், ஏனைய இருவரும் வேறோர் இடத்திலும் வைத்து விஷம் உட்கொண்டிருக்கிறார்கள்.

"சார்லி சாப்ளின்" படத்தில் மோனல் தற்கொலை செய்து கொள்வது போன்ற ஒரு காட்சி வருகிறது. இந்தக் காட்சியைப் பார்த்துவிட்டு வந்து இவர்கள் மூவரும் மிகுந்த வேதனையுடன் காணப்பட்டதாகவும், மோனல் உண்மையாகவே தற்கொலை செய்துகொண்டார் என்று தெரிந்ததும் மோனல் சென்ற இடத்திற்கே நாங்களும் போகிறோம் எனக்கூறி விஷத்தைக் குடித்ததாகவும் உறவினர்கள் தெரிவித்துள்ளார்கள்.

அவமானம் காரணமாக இந்தச் சம்பவத்தை வெளிவிடாது, சடலங்களை பொலீஸாருக்குத் தெரியப்படுத்தாமல் எரித்தது தொடர்பாக, உறவினர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மினி சினி

★ நடிகர் சூர்யா 'நந்தா' படத்தைத் தொடர்ந்து பந்தாவாகச் சினிமா வட்டாரத்தில் உலா வரவேண்டும் என்று நினைத்தார். இருப்பினும் அவரது மார்க்கெட் இன்னும் உயரவில்லை. அதற்குக் காரணம் படத்தின் வெற்றி முழுவதும் இயக்குநர் பாலாவுக்கே சென்றுவிட்டதால் இவரது ஆசை ஓசையின்றிப் போனது. அடுத்து, தான் நடிக்கும் விக்கிரமன் இயக்கும் 'உன்னை நினைத்து' படத்திலாவது நினைத்தகாரியத்தைச் சாதித்துவிட வேண்டும் என்று செயல்படுகிறார் சூர்யா. சூர்யா உதயமாவாரா?

★ 'பாரதி கண்ணம்மா', 'பொற்காலம்', 'வெற்றிக்கொடிகட்டி', 'பாண்டவர் பூமி' போன்ற பல படங்களை இயக்கி வெற்றிக் கொடிகட்டிப் பறந்துகொண்டிருப்பவர் இயக்குநர் சேரன். இவர் கதாநாயகனாக அறிமுகமாகிறார். படம் 'சொல்ல மறந்த கதை'. இப்படத்தில் பல முன்னணி நடிகர், நடிகைகளும் நடிக்கிறார்கள். இப் படத்தின் படத் தொடக்கவிழாவும் நடந்தேறிவிட்டது. படத்தை இயக்கப்போவது யார் தெரியுமோ? அழகியை படத்தை இயக்கிய தங்கர்பச்சன்தான்.

★ சண்டைக்காட்சிகளில் புதுமை ஏற்படுத்துவதென்றாலே தமிழ் சினிமாவுக்குப் பிடித்த விஷயம். நாளுக்குநாள் இது வளர்ந்துகொண்டே இருக்கிறது. அதற்கு ஒரு உதாரணமாக 'திருடா', இப்படத்தின் படப்பிடிப்பு நடந்துவருகிறது. இதில், சண்டைக்காட்சியில் ஏதாவது வித்தியாசத்தைக் காட்ட வேண்டும் என்று முடிவு செய்தார் இயக்குநர். இதற்காக 300 பழையகார்கள் இருக்கும் இடத்தில் சண்டை செய்யவேண்டும் என்று முடிவு செய்தனர். கார்களுக்கு எங்கே போவது? அதுவும் பழைய கார்களுக்கு? இந்த விஷயத்தில் யுனிட்டில் சண்டையே வந்ததாம்!

★ 'ஸ்ரீ' படத்தின் படப்பிடிப்பு ஜரூராக நடந்தது. படத்தின் நாயகி ஸ்ருதிகா பிளஸ் டு தேர்வு எழுதுவதில் பிஸியானதால் தடைபட்டு நிற்கிறது 'ஸ்ரீ' படப்பிடிப்பு!

★ 'என்ன விலை அழகே' படத்தில் பிரசாந்துக்கு ஜோடியாக நடிக்கும் அமிஷா பட்டேல் இந்தியில் படு பிஸியாகிவிட்டார். ஆக... 'என்ன விலை அழகே' இப்போதைக்கு ரிலீஸாகாது.

★ 'சாமுராய்' படத்தில் முக்கிய வேடத்தில் நடிக்கிறார் தயாரிப்பாளரான அன்பாலயா பிரபாகரன்.

மூலம் ராதிகாவைத் தான்தான் திரையுலகி மா கூறுகிறார். மருமகனின் போட்டோவை கடைசியில் டைரக்டர் ராஜ் கிஷோ வேடம் அளித்தார். படம் வெளிவருவதற்கு அதனால் மகேந்தரின் இயக்கத்தில் "நீ திடைத்த 30 ஆயிரம் ரூபா அட்வான்ஸை டார்.

அவர் பணக்கஷ்டத்தில் இருந்தார். அ தாலும் கோவிலுக்குச் செல்லும் தன் பெண் பெங்களூருக்குக் கடத்திச்சென்றுவிட்டார். த படத்தின் மீதிப்பணத்தையும் பலவந்தமாக ராதிகாவைத் தேடி பெங்களூருக்குப் இயலவில்லை. இதையடுத்து நீதிமன்றத்தில் ளூரில் "மிரேமகைதி" என்ற பட ஷூட் விரைந்துள்ளது.

முகப்

விக்ர
கிர

கமல்-சிம்ரன்
படம்: பம்பல் கே சம்பந்தம்

துணை நடிகைகளை வைத்து தொழில் நடாத்திய நடிகருக்கு நேர்ந்த கதி!

சிறிய பாத்திரங்களில் நடிக்கும் நடிகைகள் பலருக்குக் கிடைக்கும் வருமானம் சிலவேளைகளில் சென்னையில் வாழும் போதுமானதாக இருப்பதில்லை அதனால் இவர்களில் பெரும்பாலானவர்கள் இரவு நேரத்தில் "சைட் பிஸினஸ்" செய்துதான் தங்கள் காலத்தைக் கடத்த வேண்டியிருக்கிறது.

இத்தகைய துணை நடிகைகளை வைத்துத் தொழில் நடாத்துபவர்களில், மார்க்கெட் அவுட்டாகிப்போன நடிகர் தியாகு மிகப்பிரபலமானவர். "பணம் தருகிறேன் எனக்கு வேண்டும் ஒரு இரவுக்குக் கம்பனி கொடு" என்று முதலில் வலை வீசும் இவர், பணத்தின் சுவையை ஊட்டித் தொடர்ந்து பல பெரும் புள்ளிகளுக்குக் கம்பனிகொடுக்கச் செய்துவிடுவார். பிறகு தனது நிறுவனத்தில் நிரந்தர உறுப்பினராக்கித் துணைநடிகைகளால் பெருமளவு சம்பாதித்து வருகிறார்.

பிரபலமான ஆங்கில நகைச்சுவை நடிகரின் பெயரில் வெளிவந்த திரைப்படத்தில் குழுநடனமொன்றில் வரும் இளம் பெண்ணொருவரைத் தன்னுடன் ஹொட்டலுக்கு அழைத்துப் போனார் தியாகு. அந்த யுவதிக்கு 18 வயதுதான் இருக்கும். கதாநாயகிபோல் இல்லாவிட்டாலும் சுமாரான அழகு. கட்டிலில் அந்த இளம் பெண்ணின் வித்தையை ரசித்த தியாகு, அவளை வைத்து எப்படியெல்லாம் வியாபாரம் நடாத்தலாம் என்று கற்பனை செய்து வைத்திருந்தார்.

இதற்கிடையில் இத்தத் துணை நடிகையைப் பிரபல தயாரிப்பாளரின் மகன் தனது ஆசைநாயகியாகச் சில இரவுகள் வைத்திருந்த செய்தி தியாகுவின் காதுக்கு எட்டியது. எங்கே நடிகை தன்னைவிட்டுவிட்டு ஓடிவிடுவாளோ என்று பயந்த தியாகு குறிப்பிட்ட தயாரிப்பாளருக்குப் போன் செய்து மகனின் கெட்டித்தனத்தைக் கூறிவிட்டார். எப்பொழுதும் மகன் விஷயத்தில் கவனமாக இருக்கும் தயாரிப்பாளர் துணைநடிகையையும் மகனையும் ஹொட்டல் அறையில் பார்க்கக்கூடாத கோலத்தில் வைத்துக் கையும் மெய்யுமாகப் பிடித்துவிட்டார். இந்தக் கைங்கரியத்தைச் செய்தவர் தியாகுதான் என்ற சங்கதி எப்படியோ தயாரிப்பாளரின் மகனின் காதுகளுக்குப் போக, பழிவாங்கும் படலம் ஆரம்பமானது.

அதே ஹொட்டலில் வேறொரு பெண்ணுடன் நடிகர் தியாகு இருக்கும்போது பொலீஸுக்கு அறிவித்து, பிடித்துக்கொடுத்தார். பொலீஸில் மட்டும் சிக்கவைத்தால் தியாகு எப்படியும் வெளியில் வந்து விடுவார் என்று தெரிந்துகொண்ட தயாரிப்பாளரின் மகன் பொலீஸுடன் நடிகர் தியாகுவின் மனைவியையும் ஹொட்டலுக்கு வரும்படி பார்த்துக் கொண்டார்.

ஸ்ரீகாந்த்-பூமிகா
படம்: தராஜக்கூட்டம்

விரல் வீங்கிய விக்ரம்

ஏ.வி.எம். பட நிறுவனம் சினிமாப் படங்களைக் குறைத்துக்கொண்டு தொலைக்காட்சி சீரியல்களில் அவை மெகா சீரியல்கள் என்று சொல்ல வேண்டியதில்லை. சீரியலாக இறங்கியிருந்தாலும் அது தயாரித்து வெளியிட இருக்கும் "ஜெமினி" படம் மக்களிடம் ஏகப்பட்ட வரவேற்பைப் பெற்று விடவேண்டும் என்று தீர்மானித்துவிட்டது.

அதன்முதல் படியாக "ஜெமினி" படப்பாடல் கேசட்டை வெளியிட்டு கையோடு, அப்படத்தின் கதாநாயகன் விக்ரமை வைத்து சுமார் 8 ஆயிரம் கேசட்டுக்கும் மேல் விற்பனை செய்துவிட்டது.

எப்படித் தெரியுமா? கேசட் வாங்கும் ஒவ்வொருவருக்கும் நடிகர் விக்ரம் தன் கைப்பட கையெழுத்துப் போட்டுக் கொடுத்ததுதான். ரசிகர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்ற இந்த 'இந்தி' யுக்தி வெற்றி பெற்றுவிட்டதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

வியாபாரத் தந்திரம் ஏவிஎம்முக்கு யாரும் சொல்லிக்கொடுக்கவா வேண்டும்? திரையுலகில் நீண்டகாலம் கொட்டை போட்டவர்களாயிற்றே ஆனால், தனது கைவிரல் வீங்கிவிட்டதாக விக்ரம் விம்மி விழி பிதுங்குகிறார்.

வியாபாரம் ஏவிஎம்முக்கு, விரல் வீக்கம் விக்ரமுக்கு!

சுகன்யாவுக்கு அமெரிக்க மாப்பிள்ளை

அமெரிக்க கம்ப்யூட்டர் என்ஜினியர் ஒருவரை நடிகை சுகன்யா திருமணம் செய்துகொண்டார். சிலவாரங்களுக்கு முன்னர்தான் இவர்கள் இருவருக்குமிடையில் நிச்சயதார்த்தம் அமெரிக்காவில் நடைபெற்றது. மேமாதம்தான் திருமணம் என்று இருவரும் அறிவித்திருந்தனர். அதுவரை பொறுமைகாக்க முடியாதென்று மாப்பிள்ளை கூறினாரோ என்னவோ? திடீரென்று கடந்தவாரம் திருமணம் நடைபெற்றது. நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேறப்போவதாகக் கூறும் சுகன்யா அங்கு பரதநாட்டியப் பள்ளியொன்றை நிறுவப்போவதாகக் கூறுகின்றார்.

நடிகைகளின் அவலம் தமிழில் மட்டுமல்ல!

திரையுலக நட்சத்திரங்களின் வாழ்வில் மர்மமும், சோகமும் தொடர்கதை. புதிதாக இதில் சேர்ந்திருப்பவர் கன்னட நடிகை ராதிகா. கன்னடத் திரையுலகின் வளர்ந்துவரும் நட்சத்திரமான ராதிகா, அவரின் தந்தையால் கடத்தப்பட்டுள்ளதாக ராதிகாவின் கணவர் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். கர்நாடகத்தின் கன்கண்டியில் திரிநிறுவனம் நடத்திவந்தவர் ரத்தன்குமார்.

அவரைக் காதலித்துக் கைப்பிடித்தார் ராதிகா. பெற்றோரிடமிருந்து எழுந்த பலத்த எதிர்ப்புக்கிடையில் நண்பர்களின் உதவியுடன் இவர்கள் திருமணம் நடந்தது. "சன்டல் வுட்" அறிமுகப்படுத்தியதாக ரத்தனின் தாயார் பிரேமா டைரக்டர்களிடம் காண்பித்தேன்.

தனது "நீலமேக ஷ்யாம்" படத்தில் முக்கிய வேடம் திரையுலகில் பிரபலமாகிவிட்டார் ராதிகா. படத்திற்கும் ஒப்பந்தமானார். ராதிகாவுக்குக் கணவரின் அப்பா தேவராஜ் ஷெட்டி பறித்துக்கொண்டார்.

ரத்தன் தாங்கள் அதை ஆட்சேபிக்கவில்லை. இருந்தும் பாதுகாப்பாகப் போவதாகச் சொல்லி அவளை தன்னுடைய காவலில் மகனை வைத்துக்கொண்டு அந்தப் பெண்ணை கடத்துவிட்டார் தேவராஜ் என்கிறார்பிரேமா.

இதனால் ரத்தன் சென்னையும் ராதிகாவைச் சந்திக்க முயற்சித்துத் தாக்கல் செய்தார். இதற்கிடையே, பெங்களூரில் உள்ள ராதிகாவைத் தேடி பொலீஸ்குழு

அஜித்தின் 'அச்சமில்லை'

அஜித்குமாரின் நெருங்கிய நண்பராக பி.கார்த்திக், விஜயம் சினிகம்பைன்ஸ் சார்பில் தயாரித்து வெளியிட்ட படம் "தீனா" அஜித், லைலா நடித்த இப்படம் பெரிய வெற்றி பெற்றது. வசூலிலும் சாதனை படைத்தது.

இதைத் தொடர்ந்து மீண்டும் விஜயம் சினி கம்பைன்ஸ் நிறுவனத்திற்காக அஜித் மாறுபட்ட ஒரு சுதாபாத்திரத்தில் கதாநாயகனாக நடிக்கும் "அச்சமில்லை" படத்தை பி.கார்த்திக் அதிக பொருட்செலவில் மிகப் பிரமாண்டமாகத் தயாரிக்கிறார்.

இப்படத்தின் கதாநாயகித் தேர்வு மற்றும் முன்னணி நடிகர்-நடிகையர் தேர்வு தீவிரமாக நடந்துவருகிறது. இயக்குநர்கள் ராஜகபூர், பிரவீன் காந்த், உதயசங்கர், ஏ.ஆர்.முருகதாஸ் ஆகியோரிடம் பல படங்களில் இணை இயக்குநராகப் பணியாற்றிய அன்பு இப்படத்தின் கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்குநராக அறிமுகமாகிறார். இந்தப் படத்திற்கு இசையமைப்பாளராக யுவன்சங்கர் ராஜா இசையமைக்கிறார்.

காதோடு சொல்லுகிறோம்

"பீல்டுல இருக்கிற நடிகைகளிலேயே நான் ஒருத்தி தான் தமிழ்ச்சி. மத்தவங்களெல்லாம் மலையாளத்துக்காரிங்க, தெலுங்குக்காரிங்க, பம்பாய்க்காரிங்க என்னோட அழகு முத்திப் போச்சுன்னு இளவட்ட பசங்களெல்லாம் துணைக்குப் போட மாட்டேனுங்கிறானுவ. நானும் எத்தனை நாளைக்குத்தான் வயசான கிழவனுவலோட நடிக்கிறது?" என்று தெரிந்தவர்களிடம் புலம்பி வருகிறராம் 'சரக்கு' நடிகை.

அறிமுகப்படுத்திய தயாரிப்பாளருடன் ப்ரியமாக இருந்த அந்த நடிகை அவர் கடன்காரனாக ஆனதும் தனது கூட்டை மாற்றிக் கொண்டுவிட்டார். நடிகையை நம்பி மனைவியை புறக்கணித்தவர் இப்போது கோடியை இழந்து கடன்காரனாகியப் பிறகு 'மின்னுவதெல்லாம் பொன் அல்ல' என்று மனைவியிடம் வருத்தப்பட்டாராம். மனைவிக்கோ 'தாலி' மீட்டுவிட்டதில் ஏகப்பட்ட சந்தோஷமாம்.

சுரேஷ்குமார்-மீனா
படம்: ரவி

15 வில்லன்களுடன் பார்த்திபன்

நடிகர் பார்த்திபனின் பயான் கோப் பிலிம் பிரேமரன் நிறுவனம் தயாரிக்கும் படம் "இவன்"

படத்தின் கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்குனரோடு மட்டுமில்லாமல் கதாநாயகனாகவும் நடிக்கிறார் பார்த்திபன். அவருக்கு ஜோடியாக சௌந்தர்யா, மீனா நடிக்கிறார்கள். இப்படத்தில் வேடிக்கை என்னவென்றால்: 15 வில்லன்கள் நடிப்பது தான். அதற்காக ஆனந்தராஜ் மற்றும் வில்லன்களாக நடித்தவர்கள் அனைவரையும் நிறுவனம் தேடியலைகிறது. இளையராஜா இசையமைக்கிறார்.

எம்.ஜி.ஆர் படத்தில் எப்போதும் ஒரு வில்லன் மட்டும் இருக்கமாட்டார். பல வில்லன்கள் இருப்பார்கள். இந்த பார்முலாவை மனதில் கொண்டு 15 வில்லன்கள் என்று முடி வெடுத்துவிட்டார்கள் போலும். 'இவன்' ஒரு நகைச்சுவைப் பொழுது போக்குப் படமாம்.

ஆமாம்! யார் இவன்?

இவனை யார் எப்படிப் பார்க்கிறார்களோ அவர்களுக்கு அப்படியே தெரிவதுதான் இவனின் தனித்துவமாம்!

விவேக்கின் வீழ்ச்சி

கலைவாணர் தொடங்கி சுருளி ராஜன்வரை இருந்துவந்த தனிக் காமெடி ட்ராக், கவுண்டமணி செந்தில் ஜோடிக்குப் பின்பு கூட்டுக்காமெடி ட்ராக்காக மாறியது. மீண்டும் அதைத் தனிக் காமெடி ட்ராக்காக மாற்றியவர் விவேக்.

ஒகோவென்று ஓடிக் கொண்டிருந்த இந்த விவேக்கின் தனிக் காமெடிக்கு இப்பொழுது மவுசு குறைவாம். எனவே சம்பளம் குறைப்பு மட்டுமல்ல குரூப் காமெடி தான் என்று தயாரிப்பாளர்களும்டைரக்டர்களும் நேரடியாகவே விவேக்கிடம் சொல்லிவிட்டார்களாம். விவரமான விவேக் விவகாரத்தில் மாட்டிக்கொண்டாரோ? ரசிகர்களுக்கே வெளிச்சம்!

'என் பொண்டாட்டி படிச்சவ'

கோஜன் என்டர்பிரைசஸ் தயாரிக்கும் படம் "என் பெண்டாட்டி படிச்சவ"

கவர்ச்சி நடன கவிதாஸ்ரீயின் தங்கை நவீதா இப்படத்தில் கதாநாயகியாக அறிமுகமாகிறார். கதாநாயகன் ஆண்டனியும் புதுமுகம். இதுவரை தங்கை, தோழி என்று இரண்டாம் பாத்திரங்களாக வந்துபோன இந்து இன்னொரு கதாநாயகியாக நடிக்கிறார். இவர்களுடன் ராஜீவ், வாசு விக்ரம், பொன்னம்பலம், செந்தில், ஆர்.சுந்தரராஜன், காந்திமதி, ஷர்மிலி, லாவண்யா ஆகியோரும் நடிக்கின்றனர்.

தண்டிக்கப் படும் அழகு

உலக அழகிகள்
ஒன்றாக கூடியதுபோல்
நீ ஒருவள் வருகிறாய்!
••
உற்றும் பார்க்காதே!
உயிரை ஒருதரம்
சரிசெய்தும்
பார்க்கிறேன்.
••
புன்னகைக்காதே!
ஏற்கனவே!
நான் தொலைந்துபோனேன்!
••
கண்ணாடியில்
முகம்பார்க்காதே!
அதிலும் நான்தான்
உடைந்துபோகிறேன்.
••
இறுக்கமாய் பிடிக்காதே!
உன் கைக்குட்டையை
உள்ளே நான்தான்
எனக்கு மூச்சடைக்கும்!
••
அப்படியே!
நீ வந்த பாதையை
திரும்பிப்பார்
உன்னால்
மூச்சையாகிப்போனவர்களுள்
நானும் ஒருவன்.

இறக்காமம்-எம். நவாஸ்செளபி.

தீக்குச்சி

நீ என்னில்
ஸ்பரிசப்பட்ட
காலங்கள்-உன்
பிரிவுகளா... ஷகி....

இந்த வேதனைகள்
வெந்து போய்...
என்னுள் நெருப்பு மூட்டுகிறது.

நேசிப்பின் எச்ச
சாளங்கள்- உன்னை
கேவலப் படுத்தவில்லையா...?

நிலா இரவை விழுங்கி
வையகத்தை புதைக்க...
வெளிச்சம் வடிகிறது.
நீ நெஞ்சுக் குழிக்குள்
இதயத்தை மறைக்க
என்னுள் சோகங்கள் ஜனனமாகியது.

நட்சத்திரங்கள்கூட
எரிகற்களாய் துப்பறிக்கும்
உன் கைக் குட்டைக்குள்-நீ...
நிரப்பி வழியும் மனசை.
பொத்தி இறுமாப்பு கொள்கிறாய்...

உன் நினைவுகளால்
சில் வண்டுகள் சிலிர்த்த
மெல்லிசையாய்- என்னுள்
கவிதை எழுதும் வாலிபம்.

கருக் குருவிகள்
மண் பொந்துகளில்
வாழ்விடம் தரிக்கும்.

உன் ஞாபகங்களால்
இரையாக்கும் என் இரைப்பை.

பனி வயல்களால்
மீளும் உன் தீக்குச்சி
பார்வைகள்- என்
வயசையல்லவா...? உஸ்ணமாக வருடிக்
கொள்கிறது.

என் காதல்
கடிதங்களுக்கான அஞ்சல்
தலைகளாவது முத்திரைகளல்ல
இதயத்தின் உணர்வின் உயிர்...

சையனட் உயிர்ப்பு
பெற்ற உன் சொந்தங்களின்
ஆலிங்கனம் என்
காது வழியாக சர்ரத்
தொனியில் ராகமாகிறது.

நீபோன பின்
ஆகாரமில்லாமல் உன்
பழக்கத்தினை நான்
ஏணை கட்டி
வாழ்க்கையை பிரவாக மெடுக்கிறேன்.

கவிமொழி கோ.நாதன், பொத்துவில்

மனங்கள் இருளாகி

காலக்குதிரைகளுக்குள்
காணாமல் போயிற்று எமது
வாழ்வின் வசந்தங்கள்!
சடைத்து விரிந்த ஆலமரங்களாய்
பயமுறுத்துகின்றன இன்றைய
ஒவ்வொரு மனிதப்பிறவிகளும்!

எங்குபோய் எதனைத் தேடுவது
என்ற புரிதலற்றுப்போயின மனித
வாழ்வின் நிஜங்கள்.
பாலைவனங்களாயிற்று வாழ்க்கை!
சொந்தங்களைத் தேடுகையில்
பகைவர் உலகமொன்றே எம்முன்
வியாபிக்கிறது...

இருண்ட யுகங்களைப்போலவே
இன்றைய மனித மனங்களும் இருண்டு
போயின...
அறியாமை, அகங்காரம், பொறாமை,
பொய்
என எல்லாவற்றின்
குடியிருப்புக்களுமாகி
மனங்கள்தான் இருளாயின....

புறாக்கள், நாரைகள் என எத்தனைதான்
காணக்கிடைக்கிறது வெண்மைகளாக!
மனித மனங்களைக் காண்பதெப்போ
வெண்மைகளாய்...?

பாலைநகர் ஜி.ஃபரி.

தேன் கிண்ணம்

புரிந்துணர்வு ஒப்பந்தம்

ஒரு வெள்ளிக்கிழமை
சுபவேளை பாராமல்
விளம்பரங்கள் தேடாமல்
வேறு
ஆர்ப்பாட்டம் இல்லாமல்
ஓர் ஒப்பந்தம்!

ஈழத்தின் இதயத்தில
நிகழ்ந்த
கடதாசிக் கிறுக்கல்கள்
ஒத்தடமாகுமா
எம் இதயங்களுக்கு...

கைமாறிய
கடதாசிக்கட்டுகள்
கைக்குட்டையாகுமா
எம் கண்ணீரிற்கு.....

நிம்மதி-
நம்பிக்கைப்பாத்திரம்
நிரம்புமா...

சமாதானம்-
இதை
நிரந்தர தானம்
தரக்கூட
யாராவது...

இன்னும்
ஆதங்கம்
ஆயிரம்... வென்றது
அவர்களா
இலலை இவர்களா
இந்தக் கேள்விதான்
ஒருபுறம்
ஓய்ந்தபாடில்லை.

இருவருக்கும் இடையில்
இருந்த இந்த
இனம்புரியா ஈகோவை
இடம்தெரியாது விரட்டியதில்
இருவருக்கும் வெற்றிதான்
அதுகூட
ஒப்பந்தத்தின்
உயிர் உள்ளவரைதான்!

க.ராகுலன்,
வெள்ளவத்தை.

உன்னைத் தேடி

வேகும் வெயிலில்
குளிரும் பனியில்
கொட்டும் மழையில்
இவைகளிலெல்லாம்
உன்னைத் தேடி வந்திருக்கின்றோம்.
***
பௌர்ணமி நிலவில்
அமாவாசை இருளில்
பேய்கள் உலா வரும்
நடு நிசி வேளையெல்லாம்
உன்னைத் தேடி வந்திருக்கின்றோம்.
***
பூக்கள் சிரிக்கும்
வசந்த காலத்தில்
வானம் சிணுங்கும்
துளி மழை நாட்களில்
கடல் கர்ஜித்து கொந்தளிக்கும்
நாட்களிலெல்லாம்
உன்னைத்தேடி வந்திருக்கின்றோம்.
***
கல்லும் கடும் முள்ளும்
நிறைந்த காட்டுப் பாதையில்
பூவும் அதன் மணமும்
குவிந்த
மலைச் சாரலில்
அருவியும் அதன்
சல சலப்பும் நிறைந்த
கரையினிலெல்லாம்
உன்னைத் தேடி வந்திருக்கின்றோம்.
***
நீ
எங்குமே இல்லையே...?
எப்பொழுது
உன் நினைவுகளுடனே வாழ(டு)ம்
எங்களை நாடி வருவாய்

சமாதானமே...?

ஒலுவிலூர் ஷிபானி.

எண்ணியவனே

ஏய் இளைஞனே!
என்றாவது...
விடியல் காலையில்
கூவும்
சேவலின் உற்சாகத்தை
உன்னில் நீ
பார்த்ததுண்டா!

ஏன்?
தினமும் எழுந்த
வருகிறானே அந்தச் சூரியன்
அவனின்
அந்தரங்க ஆவேசம்
உன்னில் ஒருமுறையாவது
உதித்ததுண்டா!

எப்போது சரி
கூவித்திரியும் குயிலின்
குரலினை
உன் இதய துடிப்புகளுடன்
இணைத்ததுண்டா!

ஏன்?
இந்த கடலலைகள்
குரல் எழுப்பிக்கொண்டு
எழுந்து வருகின்றனவே.
அதுபோல,
ஒரு பொழுதாவது..
உன் மனதில்
எங்கோ ஒரு மூலையில்
உணர்ச்சிப் போராட்டத்தின்
வீர அலை
அடித்ததுண்டா!

அந்தப் பூமியில் ஓடுகிற
ஆறுகள் எல்லாம்
பள்ளத்தைத்தான்
நிரப்புகின்றன.

ஆனால்
நீ இதுவரை
எந்த மனதின்
பள்ளத்தினையாவது
உன் அன்பில்
நிரப்பியதுண்டா!

இது என்ன?
நீ இறந்த பிறகும்
உன்னுடலை-இவ்வுலகம்
புதைக்கிறது.
எரிக்கிறது!
ஆனால்-இதுவரை
உன் 'கழிவுகளை' மட்டுமாவது
புதைத்ததுண்டா!

என் இனியவனே!
உனக்காக இன்னும்
உலகம்
என்னென்னவோ
சொல்லித் தரலாம்.
என்றாலும்
நீ
ஒன்றையாவது
உலகிற்கு இனியதாய்
பிரயோகித்துப் பார்!

உன்
கல்லறையில் பூக்கும்
செடிகள் எல்லாம்
போதி மரங்களாகும்!

வே.கர்ணாநிதி, டயகம கிழக்கு

பேனா நண்பர்கள்

பெயர்:
எம்.எம். நவாஸ்
வயது: 24
முகவரி:
37/20 ஜே.பி. வீதி,
புத்தளம்.
பொழுது போக்கு:
பத்திரிகை.

பெயர்:
எஸ். ராஜாராம்
வயது: 29
முகவரி:
துன்னாலை மேற்கு,
கரவெட்டி.
பொழுது போக்கு:
பேனா நட்பு, கிரிக்கட்.



பெயர்: எம். இர்பான்
வயது: 24
முகவரி:
P.O. Box-31784,
Doha, Qatar.
பொழுது போக்கு:
பத்திரிகை, வானொலி.

கவனிக்கவேண்டிய நேரம்

நேரம் ஒதுக்கிக் கொள்ள வேண்டும்.

நமக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் இருபத்தி நான்கு மணி நேரத்தில் ஒரு மணி நேரத்தையேனும் படிப்பதற்குச் செலவிட முடியும் அல்லவா! வாழ்க்கைக்கு வழிகாட்ட அறிவு நூல்கள் கட்டாயம் நம்மிடம் இருக்க வேண்டும்.

நல்ல நூல்கள் நலம் தரும்!

வாழ்க்கையை எவ்விதம் வாழ வேண்டும் என்பதனைத் தெளிவாகக் கூறுபவைகள் நல்ல நூல்களே. நல்ல விதமாக வாழ்ந்த வாழ்க்கை எப்படி சிறப்பானதோ அதுபோலவே, நல்ல விதமாக எழுதப்பட்ட வாழ்க்கை வரலாறும் உயர்வானதுதான். அது தான் வாழ்க்கைக்கு வழிகாட்டும்.

நல்லோர் சரித்திரத்தைக் கற்பது நல்லவராக நடக்கத் தூண்டும். சான்றோர் சரித்திரம் அன்பு பிறக்க வழி செய்யும். பிறர் எவ்விதம் வாழ்ந்தனர் என்பதனை சுயசரிதையில் காண முடியும். தன் முயற்சியாலேயே சான்றோரானவர்களின் வாழ்க்கை வரலாறு படிப்போரிடத்திலும் உயரிய பண்புகளை உண்டாக்கும்.

வாழ்க்கையில் ஒரு சுவையான நிகழ்ச்சிபோதும், அதனை முழுவதும் அறிவதற்கு குழந்தைகளுக்குப் படம் போட்டுக் கற்பிப்பது போல, நல்ல நூல்கள் உண்மைகளை விளக்கிக் காட்டும். நல்ல நூல் வாழ்க்கையைச் சித்தரிக்கும்.

அறிவோடு படித்தால், அகத்திலிருந்து கொண்டே உலக வாழ்வின் அம்சங்களை எல்லாம்

அறிந்து கொள்ள முடியும். துணிவு பிறக்க, அறிவு பெருக, மகிழ்ச்சி உருவாக நூல்களைப் படிக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் சிறப்பான புத்தகங்களைப் படிக்க

நல்ல புத்தகம் சிறப்பான ஆசிரியருக்கு இணையானவை. நாம் ஒரு நூலைப் படிப்பதன் மூலம் அதனை எழுதிய ஆசிரியருடன் உரையாட, உறவாட முடியும். ஓர் உயர்ந்த நூலானது பலருடைய வாழ்க்கையில் புரட்சியை உண்டு பண்ணியிருக்கிறது.

எத்தனையோ பேர்களை அமைச்சர்களாகவும், ஞானிகளாகவும் ஆக்கியிருக்கிறது. வாழ்நாள் முழுவதும் தொடந்து வருவது நல்ல நூல்களே நல்ல வழியில் நடக்க எப்பொழுதும் வழிகாட்டி கொண்டே இருக்கும். ஹோமருடைய காவியமே அலெக்ஸாண்டரின் வீர வாழ்க்கையை உருவாக்கியது. நெப்போலியன் பள்ளியில் பயிலும் பொழுது வீரர்களின் வரலாறுகளையும், அவர்களின் திறமைகளையும் படித்து அகமகிழ்ந்தார்.

நண்பர்கள் இல்லாதவர்களுக்கு நண்பர்களாகவும், தனித்து இருப்பவர்களுக்கு தோழர்களாகவும், மகிழ்ச்சியற்றவர்களுக்கு மகிழ்ச்சியாகவும், நம்பிக்கை இழந்தவர்களுக்கு நம்பிக்கையாகவும், உற்சாக மற்றவர்களுக்கு, உற்சாகமாகவும், ஆதரவற்றவர்களுக்கு ஆதரவாகவும் விளங்குபவை நல்ல நூல்களே.

இவையே இருட்டில் ஒளியைக் கொண்டு வரும் விளக்குகள் படிப்பதனால் நம்முடைய மனம் பதப்படும்-பாழ்பட்டுப் போகாது.

கவிதை நெஞ்சங்களுக்கு!
இவ்வார சிறப்புக் கவிதைப் பகுதியில் முரசின் வாசகன் 'ராம் கார்த்திகேயன்' என்பவர் படித்துச் சுவைத்தனுப்பிய மூன்று பிறமொழிக் கவிதைகள் இடம்பெறுகின்றன.

ஏனெனில் நானே பிரம்மா!

பிரம்மாவுக்குச் சொந்தமான
அனைத்தையும்
நான் பாதுகாப்பேன்,
பிரம்மாவாக இருக்கும் அனைத்தையும்
காலத்தின் முடிச்சையும் நான்
அவிழ்ப்பேன்.
உலகத்தை என் வாசலுக்குக் கொண்டு
வருவேன்.
அங்கே அது குழந்தையாகத் துள்ளும்.
நான் சூரியனோடு கண்ணாமூச்சி
விளையாடுவேன்;
வீட்டிற்கு வெளியே
பெரிய மேகங்களைப்
பசுக்களாக கட்டி வைப்பேன்.
பானைகளை நிரப்ப அவற்றிலிருந்து
தேவாமிர்தத்தைக் கறப்பேன்.

என் முற்றத்தில் காற்றை அடைத்து
வைப்பேன்.
அது அங்கே பம்பரமாய்ச் சுற்றும்.
வானத்தின் கூரையை உயர்த்துவேன்.
வளைந்த ஆகாயத்தை நேராக்குவேன்.

தன்னந்தனியாக
யார் முதலில் அதை வளைத்தார்களோ
அவர்களைத் தண்டிப்பேன்!
மூஞ்சூறும் மலைதான்
மலையும் மூஞ்சூறுதான்
இரண்டும் என்னுள் அடக்கம்
ஏனெனில் நானே பிரம்மா!

நான் உலகை ஒன்றாகப் பிணைத்து
வைத்திருக்கிறேன்
நான்...
கையாலாகாத நான்,
என்னுடையது என்று
சொல்லிக்கொள்வதற்கு
ஒரு குடில் இல்லாதவன்!

மராத்தி மூலம்:
நாராயன் சூர்வே.

காதல்

இரவின் நட்சத்திரத்தைப்போல்
என்றும் மாறாது என் காதல்!
மரணத்தையும் விட மிகவும்
உறுதியானது என் காதல்!
அதிகாலை வெளிச்சம்போல்
புனிதமானது என் காதல்!
நீயும் காதலிக்கிறாயா என்று
நான் கேட்க மாட்டேன்;
நீ... நீயாக இருப்பதே எனக்குப்
போதுமானது,
மிகப் புனிதமான, மிக நேசமான
உனக்கு
என் இதயத்து திரவியங்கள்
அனைத்தையும்
உரிமையாக்குகிறேன்.

சரோஜினி நாயுடு.

சிறப்புக் கவிதை

வாழ்க்கை

நான் பெயரற்றவன்
மலைகளில் உலாவரும் மென்காற்றுப்போல்
தங்கும் இடமற்றவன்
அலைந்து திரியும் நீர் போன்றவன்.
மாயமான தெய்வங்களுக்கு உள்ளதுபோல்
வழிபாட்டு நிலையமற்றவன்
உயரமான கோவில்களின்
நிழல் படியாதவன்.
புனித நூல்கள் எதுவுமேயற்றவன்
மரபுகளால் பதனிடப்படாதவன்
உயர் பலி பீடங்களிலோ
நறு மணத்தூபத்திலோ
பதட்டாரவாரச் சடங்குகளிலோ
ஆரவாரிக்கும் விழாக்களிலோ
இருப்பு இல்லாதவன்.

செதுக்கி உருவாக்கப்பட்ட
சிலையிலும் இல்லாதவன்
உயர்ந்த தோத்திரப் பாடல்களின்
இன்னிசை, ஓசையிலுமில்லாதவன்
கொள்கைகளில் கட்டுப்படாதவன்
கீழான நம்பிக்கைகளால் சீரழிக்கப்படாதவன்
சமயக் கட்டுப்பாட்டிற்குள் சிறை
பிடிக்கப்படாதவன்
சமய குருமாரைப் பணிந்து
துயரமடையாதவன்.

சமய தத்துவப் பொறியில் சிக்காதவன்
மாறுபட்ட மதப்பிரிவுகளின் மா
ஆற்றல் மிகு
ஆதிக்கத்தில் அகப்படாதவன்
உயர்வு தாழ்வு அற்றவன்
தொழுவோனும்,
தொழப்படுவோனும் யானே
யான் சுதந்திரமானவன்
விரி கடலை நாடிச் செல்லும்
அழகிய ஆற்றின் கீதமே என் கானமாகும்.
பல இடங்களில் தடையற்று
அலைந்து அலைந்து திரியும்
யானே, 'வாழ்க்கை'.

ஆங்கில மூலம் ஜே. கிருஷ்ணமூர்த்தி
தமிழில்: கந்தையா நவரேந்திரன்.

லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

உணவு ஒவ்வாமை, உங்களுக்கும் பிரச்சனையா?

உணவு ஒவ்வாமையுள்ள, ஒவ்வாமை இயல்புடைய ஒருவருக்கு அவர் அன்றாடம் உண்ணும் சைவ, அசைவ உணவுப் பொருட்களில் ஒன்றோ அதற்கு மேற்பட்டோ எது வேண்டுமானாலும் ஒவ்வாப் பொருளாக இருக்கலாம்.

ஒவ்வாமைத் தன்மை கொண்ட வேறொருவருக்கு தாம் பயன்படுத்தும் அல்லது தம்மைச் சுற்றியுள்ள பொருட்களில் வேறு ஏதாவது ஓரிரண்டு பொருட்கள் ஒவ்வாப் பொருட்களாக இருந்தால் அவற்றை ஓரளவு ஊகித்துக்கண்டறிந்துவிடலாம். ஆனால், உணவு ஒவ்வாமை உள்ள ஒருவருக்கு எந்தெந்த உணவுப்பொருட்கள் ஒவ்வாப் பொருட்களாகச் செயற்படுகின்றன என்பதை ஊகித்துக் கண்டறிவது மிகமிகக் கடினம்.

காரணம், வழக்கமாக நாம் தினந்தோறும் நொருக்குத்தீனி முதல் , உணவு விடுதி, வீடு போன்ற பல்வேறு இடங்களில் வயிறு முட்டப் பலவகையான உணவுப் பொருட்களை நமது அன்றாட உணவில் சேர்த்துக் கொள்கிறோம். இவற்றுள் எந்தப் பொருள் உண்மையான ஒவ்வாப் பொருள் என்பதைக் கண்டறிய ஒவ்வாத் தன்மையுடைய ஒருவர் அதிகம் துன்பப்பட வேண்டியிருக்கும்.

உணவு ஒவ்வாப் பொருட்கள் எவையெவை?

ஒருவருக்கு எந்தெந்தவகையான உணவுப் பொருட்கள் ஒத்துக் கொள்ளவில்லை என்பதைச் சோதித்தறிந்து கொள்வதற்கு எளியமுறை உள்ளது. இதற்கு உணவைத் தள்ளிவைக்கும்முறை என்று பெயர். அதாவது, அவருக்கு எந்த உணவுப்பொருள் ஒத்துக்கொள்ளவில்லை என்று சந்தேகப்படுகின்றோமோ அந்தக் குறிப்பிட்ட உணவுப் பொருளைச் சாப்பிடுவதைக் குறைந்தது ஐந்து நாட்களுக்காவது தொடர்ந்து நிறுத்தி வைக்கவேண்டும்.

அதன் பின்னர் அதே குறிப்பிட்ட உணவுப் பொருளை உணவில் அதிகமாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும். இதுபோல் ஒரு உணவுப்பொருளைச் சாப்பிடுவதை நிறுத்தி வைத்திருக்கும் போது சந்தேகப்படும் ஒவ்வாமை பாதிப்புக்கேடுகள் மறைந்து பின்னர் அதே உணவுப் பொருளை மீண்டும் உட்கொள்ள ஆரம்பிக்கும் போது அதே ஒவ்வாமை அறிகுறிகள் திரும்பவும் தோன்றினால், அந்தக் குறிப்பிட்ட உணவுப் பொருட்கள் தான் ஒவ்வாப் பொருட்கள் என்பதை எந்தவித ஐயமுமின்றித் தெரிந்துகொள்ளலாம். இப்படியாக உறுதிப்படுத்திக்கொண்ட பின்னர் அந்த உணவுப்பொருளை முற்றாகத் தவிர்ப்பதன் மூலம் மீண்டும் ஒவ்வாமைப் பாதிப்புக்கள் ஏற்படாமல் கட்டுப்படுத்தி விடலாம்.

பொதுவாக எப்போதுமே இந்தப் பரிசோதனை முறை படிப்படிதற்கும், சொல்வதற்கும், கேட்பதற்கும் இனிமையாகச் சுலபமாக இருக்குமேயன்றி நடைமுறையில் செயல்படுத்திக் கண்டறிவதென்பது மிகவும் கடினமான காரியமே!

காரணம் பொதுவாக ஒருவர் ஒன்றுக்கும் அதிகமான உணவுப்பொருட்களையே அவருடைய அன்றாட உணவில் சேர்த்துக் கொள்கிறார் என்பதும், ஒவ்வாமை இயல்புடைய அவருக்கும் ஒன்றுக்கும் மேற்பட்ட உணவுவகைகள் ஒவ்வாப் பொருட்களாக இருக்கக்கூடும் என்பதும் அதேபோல் ஒருவர் ஒரு சிறிதும் சந்தேகிக்காத அவர் அதிகம் விரும்பி ஆவலுடன் அடிக்கடி உண்ணும் அதே உணவுப் பொருட்களே கூட அவருக்கு ஒவ்வாப் பொருட்களாக இருக்கக் கூடும் என்பதே!

இதேமுறையைப் போல் ஒவ்வாமை இயல்புடைய ஒருவருக்கு உணவு ஒவ்வாமை இருக்கலாம் என்று சந்தேகித்து இப்போது குறிப்பிட்ட பொருள் தவிர்க்கும் முறையைக் கையாண்டும் எந்த உணவுப் பொருள் ஒவ்வாப் பொருள் என்பதைக் கண்டறிய இயலவில்லை எனில் இன்னொருவகையான உணவு நீக்கிப் பரிசோதனையையும் மேற்கொள்ளலாம்.

பலவகை உணவுப்பொருட்களைத் தவிர்க்கும் முறை, இந்த உணவுப் பரிசோதனையின்போது குறைந்தது ஐந்து நாட்களுக்காவது ஒவ்வாப்பொருளாக இருக்கக்கூடிய அல்லது சந்தேகப்படக்கூடிய எந்த உணவுப் பொருட்களையும் கண்டிப்பாக உண்ணுவதை அறவே தவிர்க்க வேண்டும்.

இதன்படி ஒன்றுக்கும் மேற்பட்ட பல உணவுப் பொருட்களை ஒவ்வாமை தன்மையுடைய அவர் அந்த ஐந்து நாட்களுக்கு ஒதுக்கவேண்டியிருக்கும். முழுப்பட்டினியாகவும் இருப்பது நல்லதல்ல. நோயாளி அன்றாட வேலைகளைச் சோர்வின்றி அந்த நாட்களில் மேற்கொள்ளவும், உடல் அதிகமாகப் பாதிக்கப்படாமல் இருக்கவும் எங்களைப் போன்ற ஒவ்வாமை மருத்துவர் ஆலோசனைப்படி ஒவ்வாப்பொருளாக இருக்க அதிக வாய்ப்பில்லாத மற்ற ஏதாவது உணவுப்பொருட்களைத் தயக்கமின்றிச் சாப்பிடலாம்.

செல்வாஸின்

சல்வார் பரிசுப் போட்டி

நவநாகரீக மங்கையர் தரமான சல்வார்களுக்கு தலைநகரில் நாடும் ஒரே இடம்

SELVAS

No. 4, Nelson Place (Near H.N.B)
Wellawatta, Colombo-06. Tel: 552328

மகளிர் மட்டும் : மகளிர் மட்டும்

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே சல்வார் பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்

பெயர்:.....

முகவரி:.....

.....

தொழில்:.....

உண்மை–நேர்மை–வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப்படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி 04-05-2002

அனுப்பவேண்டிய முகவரி:- 'செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு:

இந்த வாரம் யாருக்கு சல்வார்?
கொழும்பு வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் சல்வார் பரிசுபெறும் வாசகி இவர்தான்

எஸ். நஸ்ரினா,
A/2, 2/4, ஸ்டுவர்ட்ஸ் வீதி, கொழும்பு-02.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

"எல்லோரும் பன்னாடைகள்... சரியா விசாரிக்காம, இப்படிக் கழனிப் பானைல கைவிட்டுட்டோமேன்னு மனசு ஆத்துப் போறது சீதா" என்றார் மகாதேவன்.

"பயப்படாதீங்க அத்திம்பேர்... நம்ம அனிதாவுக்கு வேற வழி வச்சிருக்கேன்."

"ஹலோ! ஒட்டல் ஸ்ரீலதா இண்டர் நேஷனல்? அங்க சரோஜாம்மான்னு..." அனிதா போனில் பேசினாள்.

"யார் பேசறது?"

"அனிதா... அவங்க மருமக."

ஒரு நிமிஷம் கழித்து, சரோஜாம்மா போனில் வந்ததுமே, "அனி... நீ நேரா ஓட்டலுக்கு வந்திடு... வைரவன் உன்னைப் பார்க்கணுங்கறான்" என்றாள்.

"அவரை விடுதலை பண்ணியாச்சா?"

"இல்லை உன்னைப் பார்க்க அனுமதி கொடுத்திருக்காங்க! உன்னைப் பார்த்துப் பேசணுமாம். அங்க யாரும் துணைக்கு இருக்காங்களா உனக்கு?"

"இருங்க... சீதா எங்கூட வர்றியா?" என்றாள் அனிதா, ∴போனைப் பொத்திக்கொண்டு.

"எங்கே?" -சீதாராமன் கேட்டான்.

"வைரவனைப் பார்க்க!"

"வைரவனைப் பார்க்க நீ என்ன போறது?அத்திம்பேர்...இத்தனை ஆனப் புறமும் என்ன சொல்றா பாருங்கோ!"

மகாதேவன் கோபத்துடன், "அனி... நீ அங்க போகப்படாது... அந்தக் கடங்காரன் பேச்சே வேண்டாம். அவனைப் பத்திப் பேப்பர்ல என்னவெல்லாம் போட்டிருக்கா பாரு! எத்தனையோ குடும்பங்களை ஓவர்நைட்ல ஏழையாக்கி நடுத்தெருவில நிக்க வைச்ச ராஸ்கல் அவன்! அவனை என் பெண் போய் பார்க்கறதாவது...?"

அனிதா போனில்,"நான் வரலைன்னு சொல்லிடுங்க" என்றாள்.

சரோஜாம்மாவுடன் பேசிவிட்டு ∴போனை வைத்ததும் அனிதா தன் அறைக்குச் சென்று கதவை மூடிக் கொள்ள விரும்பினாள். அவளுக்குச் சற்று நேரம் இந்தக் குழப்பத்திலிருந்து தன்னை முழுவதும் தனிப்படுத்திக் கொள்ள விருப்பமிருந்தது, ஓரிரண்டு மாதங்களில் எத்தனை சம்பவங்கள், எத்தனை மனிதர்களைச் சந்தித்து எத்தனை தூரம் என் வாழ்க்கை சிக்கலாகிவிட்டது.

திரும்ப பழைய அனிதாவாக மதுவுடன் ஹாஸ்டல் அறையில் சல்மான்கான், சஞ்சய் தத் என்று அரட்டை அடித்துக் கொண்டே அழகழகாக பாட்டனி இலைகளை பென்சிலால் வரையும் சந்தோஷங்களை இழந்துவிட்டாள். வைரவன் என்னும் புயல்காற்று அடித்து அவளை நிலை பெயர்த்து எங்கோ தூக்கியெறிந்து ஓய்ந்துவிட்டது.

"ஓய்ந்து விட்டதா? இன்னும் அவன் உன் கணவன் இல்லையா?" -அனிதா தனக்குத் தானே கேட்டுக்கொண்டாள்.

"இல்லை... இனி அவன் வேண்டாம். தன் வாழ்வில் இத்தனை பெரிய பொய்யை மறைத்து வைத்தவன்! அரசாங்கம் அவனை வேட்டையாடி அத்தனை சொத்தையும் பறிக்கும் அளவுக்குச் சமூகக் குற்றம் செய்தவனை எப்படி இன்னமும் நான் கணவனாக அங்கீகரிக்க முடியும்?"

அனிதா ஜன்னல்களையெல்லாம் மூடிவிட்டு புழுக்கத்தையும், தலைவலியையும் பொருட்படுத்தாமல் படுத்துக்கொண்டாள். மண்டைக்குள் கலைக்கப்பட்ட தேன்கூடு போல எண்ணங்கள் உலவின. "இனி என்ன செய்யப்போகிறேன்? என்ன செய்ய வேண்டும்?"

"அனி... உன்னை நான் இன்னும் காதலிக்கிறேன். உன்னை நான் கல்யாணம் பண்ணிக்க இப்பவும் தயாராக இருக்கேன்..."

"சீதாராமன் எத்தனை நாளாகக் காத்திருக்கிறான்... நான் பிறந்ததிலிருந்து, சின்ன வயசு விளையாட்டுக்களில் எல்லாம் சீதாவுக்குத் தான் அனிதா என்று சொல்லிச் சொல்லி நம்பிக்கையும் ஆதரவும் அளித்து விட்டு கடைசியில் பாவம், எத்தனை ஏமாந்திருக்கிறான். சீதா! அதை அவன் துளியும் காட்டிக் கொள்ளாமல் இருந்திருக்கிறான்...."

மேலே புதுசாகப் பொருத்தப்பட்டிருந்த மின்சார விசிறியைச் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தாள். போன் ஓயாமல் அடித்துக் கொண்டிருக்க, யாரோ எடுத்து "அனிதாவுக்கு இப்ப உடம்பு சரியில்லை. சாயங்காலம் ∴போன் பண்ணீங்களா மிஸ்டர் சுரேஷ்?" என்றார்கள்.

"சுரேஷா... யார் அது?"

அனிதா சட்டென்று எழுந்து வெளியே வந்து, "யாரும்மா அது போன்ல?" விசாரித்தாள்.

"அதான் அந்த சுரேஷ்! உன்னை முதல்ல பெண் பார்க்க வந்தானே... அவனா இருக்கும்னு நினைக்கிறேன்..."

அனிதா ∴போனை எடுத்து ஹலோ... அனிதா பேசறேன்..."

"அனிதாவா!" சுரேஷ் குரலில் ஆச்சரியம் தென்பட, "அனிதா எப்படியிருக்கீங்க? ஐம் ஸாரி... நடந்து போன காரியங்களுக்கும் இத்தனை சிக்கல்களுக்கும் நான் தான் காரணம்னு யோசிக்கறப்ப எனக்கு குற்ற உணர்வு அதிகமா இருக்கு."

நவீன எழத்துலக வேந்தன் கஜாதா

"அதனால் என்ன இப்ப?"

"இப்ப கூட லேட் இல்லை. நான் ரெடி..."

"எதுக்கு?"

"உங்களைக் கல்யாணம் செய்துக்கறதுக்கு! அனிதா... நான் உங்களைப் பெண் பார்க்க வந்த அந்தக் கணத்திலேயே உங்களைக் காதலிக்க ஆரம்பிச்சேன். எத்தனையோ பங்குதாரர்களை ஏமாற்றினது போல வைரவன் என்னையும் வார்த்தை சாதுர்யத்தால ஏமாற்றிவிட்டான். அவனைப் போல ஒரு போலியான ஆசாமியை நான் பார்த்ததே இல்லை. அனிதா... இப்பக்கூட ஒண்ணும் கெட்டுப் போகலை... நான் உங்களைக் கல்யாணம் பண்ணிக்கத் தயாரா இருக்கேன். வாங்க... எல்லாத்தையும் உதறித்தள்ளிட்டு அமெரிக்கா போயிரலாம்... அனிதா... நான் உங்களைக் காதலிக்கிறேன்! நான் சொல்றதைக் கேட்டு ஏன் சிரிக்கிறீங்க?"

"அனிதாவுக்கு எத்தனை காதல்கள்னு யோசிச்சுப் பார்த்தப்ப சிரிப்பு வந்தது!"

"மிஸ் அனிதா..."

"சுரேஷ்... இப்ப நான் மிஸ் அனிதா இல்லை... இன்னும் மிஸஸ் வைரவன் தான்!"

"வைரவன் இன்னும் பத்து வருஷத்துக்கு ஜெயில்லருந்தும், கோர்ட்டிலருந்தும் வெளியே வர முடியாது. அவன் செஞ்ச குற்றத்துடைய பரிணாமம் தெரியுமா உங்களுக்கு? அனிதா... என்னைப் போல ஒரு மடையன் இருக்க முடியாது... ஒத்துக்கறேன்! செய்த காரியத்துக்குப் பிராயச்சித்தம் தேடறேன்... அனி... உடனே, என்னைக் கல்யாணம் பண்ணிக்கச் சம்மதமில்லைன்னு மட்டும் சொல்லிடாதீங்க... ப்ளீஸ்..."

அனிதா ∴போனை வைத்ததும், அம்மா "என்னவாம்?" என்றாள்.

"அவன் என்னைக் கல்யாணம் பண்ணிக்கத் தயாரா இருக்கானாம்! அமெரிக்கா போகலாம் வாங்கறான்."

"அனி... அமெரிக்காவும் வேண்டாம், ஆபிரிக்காவும் வேண்டாம்... சீதா உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிறதைப் பத்தி எங்கிட்ட பேசினான்... ஏதோ பணத்தாசைப்பட்டு அப்பாவும் நானும் தப்புப்பண்ணிட்டோம்... பேசாம சொல்றதைக் கேளு..." பேசிக்கொண்டிருந்த கமலம், வாசலில் ஏதோ சத்தம் கேட்க, "வாசல்ல யாரு பாரு சீதா!" என்றாள்.

வாசலில் ஜீப் வந்து நிற்க, போலீஸ் அதிகாரிகள் இறங்கியதும், தொடர்ந்து இறங்கியவனைப் பார்த்த சீதா திகைத்துக் கத்தினான்;

"அக்கா... வைரவன்!"

ஜீப்பை விட்டு வைரவன் இறங்குமுன் அவனை இரண்டு மூன்று போலீஸ் அதிகாரிகள் சூழ்ந்து கொள்ள அவன் மேலே ஜன்னலைப் பார்த்தான். அங்கே அவன் அனிதாவின் முகத்தை எதிர்பார்த்தது போல, அனிதா சட்டென்று மறைந்து கொண்டாள்.

குடும்பத்தில் அத்தனை பேரும் மௌனமாகிவிட்டார்கள். கீழே அப்பாவின் குரல் மட்டும் கேட்டது.

"அவ இப்பல்லாம் வரமாட்டா... பார்க்கல்லாம் முடியாது. என்னது, நான் கேக்கக் கேக்க நீங்க பாட்டுக்கு மேலே மேலே உள்ளே வந்துண்டிருக்கீங்க?"

வைரவன் ஏதும் பேசாமல் மாடிப்படி ஏறி "அனிதா... அனிதா" என்று அழைத்துக் கொண்டே வந்தான்.

அனிதாவுக்கு அந்தக் கணத்தில் மாயமாய் மறைந்து விட வேண்டும் போலிருந்தது. என்ன செய்வது? இந்த மாதிரியான பிரச்சனைக்கு அவள் தயாராகவே இல்லை. [அனிதா வருவாள்...]

உண்மையின் பேர் தெய்வம் என்போம்- அன்றி
ஓதிடும் தெய்வங்கள் பொய்யெனக் கண்டோம்
உண்மைகள் வேதங்கள் என்போம் - பிறிது
உள்ள மறைகள் கதையெனக் கண்டோம்.

–சுப்பிரமணிய பாரதியார்–

பாப்பா முரசு சிறுகதை

அழிந்த தலைக்கனம்

பெரிய மாளிகை ஒன்றின் தோட்டத்தில் ஏராளமான ரோஜாச் செடிகள் இருந்தன. ஒவ்வொன்றும் ஒரு வகை. ஒவ்வொன்றும் ஒரு வர்ணம்.

அந்த ரோஜாச் செடிகளை ஒரு முதியவர் நன்கு பராமரித்து வந்தார்.

அவர் தினமும் ரோஜாச் செடிகளுக்குத் தண்ணீர் விடுவார். காய்ந்த இலைதழைகளை அகற்றிச் சுத்தம் செய்வார். அளவாக உரம் இடுவார். நல்ல பராமரிப்பு!

ஒருநாள் – ஒரு சிவப்பு ரோஜா பூக்கும் செடியிலிருந்து ஒரு மொட்டு, மெல்ல மலர்ந்து இதழ் விரித்தது.

அது அப்பொழுதுதான் இந்த உலகத்தையே பார்த்தது. ஒவ்வொரு இடத்தையும் பார்த்துப் பார்த்து அது ரசித்தது.

சூரியனை ரசித்தது. வானத்தை ரசித்தது. மெல்ல வருடிச் செல்லும் காற்றை ரசித்தது. பூமியை ரசித்தது. குளிர்ந்த நீரை ரசித்தது.

"அப்பா! என்ன சுகம்!" என்று அது அந்த இயற்கைச் சுகத்தை அனுபவித்தது.

அப்போது தன்னருகே வந்த அந்த முதிய தோட்டக்காரரைப் பார்த்தது. பார்த்ததும் முகத்தைச் சுழித்தது.

"இதென்ன? இவ்வளவு அழகான சூழ்நிலையில் இப்படி ஒரு அவலட்சணமான மனிதன்? கறுத்து, தோலெல்லாம் சுருங்கி... விரைவில் இவன் கதை முடியப் போகிறது. அது தெரியாமல் இன்னும் நடமாடிக்கொண்டிருக்கிறான். ஐயோ பாவம்!" என்று அந்தத் தோட்டக்காரரைப் பார்த்து இறுமாப்புடன் பேசிக்கொண்டது.

பிறந்தவுடனேயே, அதற்குத் தலைக்கனம் வந்துவிட்டது. தன்னழகையும் இளமையையும் நினைத்துப் பூரித்தது. தன் இளமையை அந்தத் தோட்டக்கார முதியவரோடு ஒப்பிட்டு எள்ளிநகையாடியது.

நடுப்பகல் வேளை வந்தது.

சூரியன் நேர் உச்சியில் நின்றான்.

அப்போது அந்த இளம் பூ முழுவதுமாக மலர்ந்து முன்பைவிட அழகாகவும், வசீகரமாகவும் இருந்தது. மணம் வேறு தூக்கலாக வீசியது.

இப்போது அந்த ரோஜாவுக்கு இன்னும் தலைக்கனம் கூடியது.

"ஆஹா! இப்போது நான் என்ன அழகு... என்ன வசீகரம்... என்ன மணம்... என்ன இளமைத் துடிப்பு... ஹூம்... அந்தத் தோட்டக்காரனும் இருக்கிறானே, காய்ந்த சுள்ளி போல்... காலையில் பார்த்ததைவிட இப்போது இன்னும் கிழமாகியிருக்கிறானே. இப்படி நிமிடத்துக்கு நிமிடம் இவன் கிழமாகிக்கொண்டே போனால் இன்னும் எத்தனை நிமிடங்கள் உயிர் வாழ்வானோ?" என்று பேசிச் சிரித்தது.

தோட்டக்காரர் அத்தனை ரோஜாச் செடிகளையும் ஒரு பார்வை பார்த்து விட்டு வேறு பக்கம் சென்றார்.

அந்த ரோஜாப்பூ தொடர்ந்து தன்னைப் பற்றிப் புகழ்ந்தும், தோட்டக்காரரை இகழ்ந்தும் பெருமையடித்துக் கொண்டேயிருந்தது.

மாலைவரை அந்தப் பெருமை நீடித்தது. இருள் வரத் தொடங்கிய போது.

அந்த ரோஜாப்பூ சட்டென்று தளர்ந்தது. ஒரு பகல் முழுக்க வசீகரமாக இருந்த அதன் இதழ்கள், பொலிவிழந்து சுருங்கின.

உடனே அது திடுக்கிட்டது.

"ஐயோ! திடீரென்று எனக்கு என்னாகி விட்டது? என்னால் நிற்க்முடிய வில்லையே! என் உடம்பெல்லாம் சுருங்கி விட்டதே. என் இளமை எங்கே? என் அழகு எங்கே? என் மணம் எங்கே? ஐயோ... இதென்ன... என் உடலில் ஒரு சில பகுதிகள் கீழே உதிர்ந்து விழுகின்றனவே... கடவுளே... இதென்ன... எனக்குத் தான் ஆயுள் குறைவோ? விரைவில் இறந்துவிடுவேன் போலிருக்...!"

ரோஜா சொல்லிமுடிக்கவில்லை.

செடியிலிருந்து உதிர்ந்து "சொத்" தென்று கீழே விழுந்தது.

ஆமாம்! உண்மையில் அந்தப் பூவின் ஆயுள் முடிந்துவிட்டது.

மறுநாள் –

ரோஜாச் செடிகளைப் பார்வையிட வந்த அந்த முதிய தோட்டக்காரர் உதிர்ந்து கிடந்த அந்த ரோஜாப்பூவை, குப்பை கூளங்களோடு அள்ளி வேலிக்கு அப்பால் போட்டார்.

தலைக்கனம் பிடித்தவர், தற்பெருமைக்காரர் ஆகியோரது வாழ்க்கை இந்த ரோஜாப்பூவைப் போலத்தான் சொல்லாமல் கொள்ளாமல் உதிர்ந்து போகும்.

சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!

மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **04.05.2002.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **443**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 441

பரிசுக்குரியவர்:
அனுஷானந்தி மாணிக்கவாசகர்
9, 2ம் ஒழுங்கை, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

பாராட்டுக்குரியவர்கள்:

எ.கேஷாயினி புனித சிசிலியா பெ.ம.வி., மட்டக்களப்பு.	**அன்ட்ரூ ஷியாம் லோகநாதன்** அக்குமர வித்தியாலயம், திருக்கோவில்.
எஸ்.கே.நுஸ்ரி சன்ஜீதா வத்த, நுரைச்சோலை, புத்தளம்.	**எஸ்.கே. ருஸ்னி குறைஸ்** சன்ஜீதா வத்த, நுரைச்சோலை, புத்தளம்.
எஸ்.எம். பதுர்த்தீன் பதுரியாவீதி, றில்வி நகர், புதியகாத்தான்குடி-01.	**பாத்திமா நிஷ்மா நஜீம்** 320, இரத்தினபுரி வீதி, பலாங்கொடை.
பி.ருஸாந்தன் 2ஏ, மன்னார் வீதி, வவுனியா.	**எஸ். ரிஸ்னா** அல்அக்ஷா தேசிய பாடசாலை, கல்பிட்டி.
திவ்யா மோகன்ராஜ் தபாற்கந்தோர் வீதி, மன்னார்.	**ஆர்.முல்லைமாறன்** பழுகாமம்-01, பெரியபோரதீவு, மட்டக்களப்பு.

விடுகதைகளும் விடைகளும்

01. இரத்தத்திலே வளர்வது,
இரத்தம் இல்லாதது,
அது என்ன?
02. இருட்டு வீட்டிலே மேயது, குருட்டு எருமை,
அது என்ன?
03. தாவி ஓடி வந்தாலும்,
தாகம் தீர்க்கமாட்டான்,
அவன் யார்?
04. முத்துச் சிப்பிகள்,
முழுவதும் உள்ளரங்கில்,
அது என்ன?
05. அறைகள் அறுநூறு,
அத்தனையும் கைக்குள் அடக்கம், அது என்ன?
06. பச்சை நிறத்தில்
குடை பிடிப்பான்,
அவன் யார்?
07. காலை மாலை நெட்டை,
மற்றநேரம் குட்டை,
அது என்ன?
08. கிட்டத் தெரிபவன்,
நெருங்கநெருங்க எட்டிப்போவான்,
அவன் யார்?
09. திறந்த பெட்டியை,
மூட முடியாது,
அது என்ன?
10. எங்கப்பாவுக்கு
எண்ண முடியாமல் பற்கள்,
அது என்ன?

விடைகள்

01. இரத்தம் 02. மேயாத-மேயாமலிருக்க 03. கிணறு 04. பயிறு 05. தீக்குச்சி 06. பச்சைமிளகாய் 07. பனை 08. கயிறு 09. மூடுபனி 10. கூடு

குரைக்கும் தவளை

தவளை இனத்தில்
குரைக்கும் தவளை, செங்குத்துத்
தவளை என
இரண்டுவகை உள்ளது.
இந்த இனம் அமெரிக்காவில்
உள்ளது. பொதுவாகத்
தவளைகள் முட்டையிட்டுக்
குஞ்சு பொரித்தவுடன்
தவளைக்
குஞ்சு நிலையில் இருந்து
படிப்படியாகத்தான்
தவளை உருவத்திற்கு வரும்.
ஆனால், மேலே சொன்ன இந்த
இரண்டுவகைத் தவளைகளும்
முட்டையிலிருந்து வெளியே
வரும்போதே
தவளையாராகவேதான்
வருவார்.



சின்னச் சின்னத் தகவல்கள்

உலகிலேயே மிகவும்
உயரமான மிருகம்
ஒட்டகச்சிவிங்கி. கழுத்தைத்
திருப்பாமலேயே தன்
பின்புறமுள்ளவற்றைப்
பார்க்கும் திறன்
இதற்குண்டு. நாக்கு இருந்தும்
கூட அதனால்
தெளிவான சத்தத்தை
எழுப்ப முடியாது.
ஒட்டகத்திற்கு நீந்தத்
தெரியாது. தண்ணீரில்
இறங்கினால்
மூழ்கிவிடும்.

அறிவுத்தேடல்

தவிர்க்க முடியாத
காரணத்தினால் கடந்த
இரு வாரங்களாகப்
"பாப்பா முரசு" பகுதியில்
"அறிவுத்தேடல்" பகுதி
இடம்பெறவில்லை.
இதன் பொருட்டு
வாசகர்களுக்கு
ஏற்பட்ட
அசௌகரியங்களுக்கு
வருந்துகிறோம்.
454வது இதழில்
வெளியான
புதிருக்கான விடை,



இந்த வாரப் புதிர்



திறந்த நிலையில்
உள்ள இந்தக் கவரை
ஒரே தரத்தில்
(ஒரே கோட்டால்)
கையை எடுக்காமல்
சென்றவழியே
மீண்டும் செல்லாமல்
வரைய வேண்டும். முயன்று
வென்றவர்களும்,
வெல்ல நினைத்தவர்களும்
வரும் வாரம் வரை
பொறுத்திருங்கள்.

மூச்சு!

மனிதனின் மூச்சு
நின்றுபோனால் அவன்
"குளோஸ்" என்கிறோம்.
உயிருள்ளவரைதான்
சுவாசிக்க முடியும் அல்லவா?
ஒருநாளைக்கு மனிதன்
எத்தனை தடவைகள்
சுவாசிக்கிறான் தெரியுமா?
சுமார் 23 ஆயிரம் தடவைகள்!

முடிவு...

ஆரையம்பதி சி.நாகேந்திரன்

"நம்ம பக்கத்து வீட்டு செல்வியுடன் படித்த கவிதா, லட்சுமி, தயாளினி, சாலினி எல்லோரும் திருமணம் முடித்து விட்டார்கள்.செல்வி மட்டும் தொடர்ந்து படிக்கிறாள். அவளின் நிலைமை எதுவெனத் தெரியவில்லை. அவளிடம் அது பற்றிக் கேட்டுப் பார்க்கத்தான் வேணும்" என நினைத்துக்கொண்டு, வீட்டுச் சுவரில் தொங்கிக்கொண்டிருந்த கடிகாரத்தை நோக்கினேன். நேரம் காலை 7.30 மணியைக் காட்டிக் கொண்டிருந்தது.

"ம்... இப்போ பள்ளிக்குப் போக வருவாள். அவளிடம் முடிவு கேட்டுப் பார்ப்போம்" என எனக்குள் சொல்லிக் கொண்டு அவசர அவசரமாகக் குளித்து, வெளிக்கிட்டுக் கொண்டு செல்வி பாடசாலைக்குப் போகும் வீதிக்குச் சென்றேன்.

அவ் வீதியில் அமைந்திருந்த காளியம்மன் கோவிலுக்குச் சென்று "கடவுளே! நான் செல்வியிடம் கேட்கப் போகும் விடயத்துக்கு நல்ல பதில் கிடைக்க வேண்டும். அப்படிக் கிடைத்தால் உனக்குக் கற்பூரம் வாங்கிக் கொழுத்து வேன். செல்வி கஷ்டப்பட்ட பிள்ளை என்பது உனக்கும் தெரியும்தானே தாயே..." எனப் பிரார்த்தித்துவிட்டு அங்கிருந்த குளக்கட்டில் அமர்ந்தேன்.

சிறிது நேரத்தின் பின் செல்வி அவ் வீதியால் வந்துகொண்டிருந்தாள். அவள் கையில் ஐந்தாறு சீ.ஆர் கொப்பிகள். அவள் புதுவெள்ளை யூனிபோம் அணிந்திருந்தாள். அவள் அருகில் சென்ற நான், அவள் முகத்தை ஏறிட்டு நோக்கினேன். அவள் என்னைப் பார்த்துப் புன்னகை செய்தாள். அவள் முகத்தில் அதியுச்ச சந்தோஷம் தெரிந்தது. "ம்... நல்ல முடிவாகத்தான் இருக்கும் எதற்கும் கேட்டுப் பார்ப்போம் என எண்ணிக் கொண்டு வேகமாக நடந்து அவளருகில் சென்று புன்முறுவல் பூத்தேன். அவளும் பதிலுக்கு என்னைப் பார்த்து புன்னகைத்தாள். முடிவைக் கேட்பதற்கு ஆயத்தமானேன். அப்போது எங்கள் எதிரில் தெரிந்த சிலர் வருவதைக் கண்ட நான், அவ்விடத்திலேயே நின்று விட்டேன். செல்வியோ திரும்பி என்னைப் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டாள்.

அந்தப் புன்னகை "முடிவைக் கேட்டுவிடு கேட்டுவிடு" என என்னை உசார்படுத்தியது.

"சீச்சி... யாரும் நான் செல்வியோட கதைக்கிறதை யாரும் கண்டு விட்டால் தப்பாக நினைத்துவிடுவார்கள் என எண்ணிக்கொண்டாலும் என் மனம் விடவில்லை. மீண்டும் அவள் பின்னால் வேகமாக நடக்கிறேன். அவளை நெருங்கியதும், எனைப் பார்த்துப் புன்னகைத்தாள். யாரும் வருகிறார்களா? என அங்குமிங்கும் பார்த்தேன். யாரையும் காணவில்லை. சற்றுத் துணிவுடன் செல்வியை நெருங்கி,

"ஹலோ..." என்றேன்.

"ஹலோ..." என்றாள் அவளும் பதிலுக்கு.

"உங்களிடம் முடிவு கேட்க வேண்டும் என்பதற்காய் நான் காலையிலிருந்து காத்திருக்கின்றேன்" என்றேன்.

என் முகத்தைப் பார்த்த அவள் புன்சிரிப்பொன்றை உதிர்த்தவள், "என் முடிவைத் தான் உங்கள் நண்பன் ஜெகனிடம் சொல்லி அனுப்பினேனே... அவர் உங்களுக்குச் சொல்ல வில்லையா...?" என்றாள்.

"இல்லையே..." என்றேன்.

சற்றுநேரம் மௌனம் காத்தவள், "நான்கு ஏ யும், நான்கு பீ யும்" என்றாள்.

எனக்கு ஒரே சந்தோஷம். ஏனெனில் அவள் கஷ்டப்பட்டுப் படித்ததற்கு சாதாரணதரப் பரீட்சையில் சித்திபெற்று விட்டாள். அவளிடமிருந்து விடைபெற்ற நான் வீட்டை நோக்கி ஆனந்தமுடன் விரைகின்றேன்.

பக்திப் பரிசு!

இணுவில் - சர்மா

"சர்வாணி தொலை தொடர்புச் சேவை" அந்தப் பெயர்ப்பலகை திடமாக மின்னொளியில் பிரகாசித்துக் கொண்டிருந்தது. ஆனால், உள்ளே பரபரத்த மனதுடன் இருந்த கல்பனாவை பிளாஸ்ரிக் கதிரை தாங்கியிருந்தது. கணவனின் செய்திக்காக அவள் காத்திருந்தாள். காலை 5.30 மணிக்கு முதல் விமானத்தில் பிரயாணத்திற்காகப் புறப்பட்டுப்போன கணவனின் செய்தி இன்னும் கிடைக்காமல் போகவே நிலவின் ஒளியில் வீடு திரும்பினாள்.

"என்னம்மா ரெலிபோன் வந்ததா?"

"இன்னும் எடுக்கேல்ல"

"ஏன்?"

"தெரியேல்லை மாமி... பகல் 11 மணிக்கெல்லாம் பிளேன் போயிருக்கும்"

"அப்ப ஏன் எடுக்கேல்ல?"

"லைன் கிடைக்கேல்லையோ தெரியேல்ல...!"

இருவரும் ஒருவருக்கொருவர் தம் பதற்றத்தைக் காட்டிக்கொள்ளாமல் கதைத்துக்கொண்டனர். கல்பனா, சுவாமி அறை சென்று மங்கியிருந்த விளக்கின் திரியைத் தூண்டிவிட்டு விளக்கிற்கு நெய் ஊற்றினாள். விளக்கின் சுடர் எதிரேயிருந்த ஐயப்பன் படத்தில் பட்டுப்பிரகாசித்தது. நிம்மதியுடன் படுக்கைக்குப் போனாள். ஆனாலும், அவளுக்கு நித்திரை வரவில்லை.

விமலன், கல்பனாவின் கணவன். பிரபல வியாபாரி. "விமல் ஸ்ரோர்ஸ்" அவனது சொத்து. அதேபோல் கவினேஸும் விமல் கல்பனாவின் உயிருள்ள சொத்துத்தான். விமலன் தந்தை இறந்தபின் வியாபாரத்தைக் கவனித்து வருகின்ற ஓர் கலைப்பட்டதாரியானாலும், வியாபார நுட்பம் தெரிந்திருந்ததால் வாழ்வில் நன்கு முன்னேறி சமூகத்தில் பிரபலமாகிவிட்டான். என்னதான் வாழ்வில் சகல வசதிகள் இருந்தாலும் அவ்வப்போது ஏற்படுகிற சிறு கஷடங்களை மறக்கவும், இந்த இயந்திர வாழ்விலிருந்து சிறிது ஓய்வு எடுக்கவும் ஆன்மீக நாட்டமும், கலா ரசனையும் ஒருவனுக்கு அவசியம் வேண்டும். அதற்கு விமலன் விதிவிலக்கல்ல.

"ஐந்தாம் திருப்படி சாமி பொன் ஐயப்பா! ஐயனே பொன் ஐயப்பா!!"

விமலனின் ஐம்புலன்களும் அந்தப் பாடலில் லயித்து விட்டன. அப்படியே ஓர் ஐயப்ப பக்தனாக மாலைபோட்டு, விரதமிருந்து இப்போ மகரஜோதி தரிசனத்திற்காக சபரிமலை போக வேண்டி கொழும்புக்குப் பயணப்பட்டிருக்கிறான்.

"ஹலோ... நான் கல்பனா கதைக்கிறன்"

"ஆ... கல்பனா! நான் சுகமா வந்திட்டன்"

"என்..னப்..பா.. எங்கட.. கடை.. களவு போட்டுது..."

"....."

"நேற்றிரவு... நீங்களும் போட்டியள்..."

"....."

"எ.. ன்னப்.. பா... எல்லாம்... போட்.. டுது."

விமலால் ஒன்றுமே பேச முடியவில்லை. அவன் உடலால் உணர்வால் மிகவும் பாதிக்கப்பட்டான். அவனுக்கு அடிக்கு மேல் அடி. பிளேனால் வந்திறங்கி ஒட்டோ எடுத்து நண்பனின் வீடு விசாரிக்கும் போது ஒட்டோவுடன் பாக், பணம் எல்லாம் பறிபோனது கல்பனாவுக்குத் தெரியாது. எப்படியோ நண்பனின் வீடடைந்து, வியாபார நண்பர்களின் உதவியுடன் சபரிமலை போய் ஆண்டவன் சோதனையோ? யார் படைத்த வேதனையோ? என எண்ணி மகரஜோதியில் மனங்கலந்து வழிபட்டான்.

ஆனால், விடயமறிந்த கல்பனா விசரிபோலானாள். ஐயப்பா உன்னைத் தொழுதோம் எமக்கு இந்த நிலையா? இனி உன்னை வழிபடேன். என்று கூறிப் படத்தை எடுத்து ஒரு ஓரத்தில் போட்டாள்.

அன்றுமுதல் சுவாமி அறையுடன் அவர்கள் குடும்பமும் இருண்டது. தாயின் நிலை கண்டு கவினேஸ் பள்ளிசெல்லாது படுக்கையுடன் ஒட்டிக்கொண்டான். மாமியார்நோய் கண்டு ஆஸ்பத்திரிக்கும் வீட்டிற்குமாக அலைந்து திரிந்தாள். இது போதாதென்று அடிக்கடி பொலீஸ் விசாரணை வேறு. உற்றார் உறவினர் எவ்வளவோ ஆறுதல் கூறினர். தந்திகளும், கடிதங்களும் வந்து குவிந்தன. தொலைபேசியிலும் பலர் துக்கம் விசாரித்தனர். இருந்தும் என்ன பயன்?

தரிசனம் முடிந்ததும் இந்தியாவைச் சுற்றிப்பார்க்க எண்ணியிருந்த விமலன் அருளை மட்டும் வேண்டிப் பொருள் ஒன்றும் வேண்டாது வெறும் கையுடன் வீடுவரவேண்டிவந்தது.

விமலன் கல்பனா இருவரும் சந்தித்துக் கதைத்துக்கொண்ட சோக சம்பவங்கள் அவர்கள் வாழ்வில் இனிச் சரித்திரங்கள் தான். "இப்படியொரு கஷ்டம் இனியாருக்கும் வரக்கூடாது ஐயப்பா!" என மனதிலே வேண்டிக் கொண்டான்.

"கல்லறை வரை வேண்டும் சில்லறை" என்று ஒரு புத்தகத்தில் என்றோ படித்த ஞாபகம். இப்போது அவனின் முதல் அல்லவா முழுதும் போய்விட்டது. மனக் கஷ்டம் தீர பஜனை செய்யலாம் என எண்ணி சுவாமி அறைக்குப் போனான். அறை இருண்டு கிடந்தது. அதனால் கணவன் மனைவிக்குள் விரிசல்...

"சாமி! சாமி! என்றீர்களே இப்போ நாம் தெருவெல்லாம் சரணம் போட வேண்டிய நிலை..."

"கல்பனா! சாமி எம்மைக் கைவிடார்..."

"எம் வாழ்க்கையை வாரிவிட்டாரேயப்பா..."

"கல்பனா! அவர் மீது இன்னும் எனக்கு நம்பிக்கை. அவர் தாம் எமக்கு ஆறுதல்..."

"எனக்கு ஆறுதல் தந்தது இந்தக் கடிதங்களும், தந்திகளும் தான்" எனக் கூறி விமலனின் முகத்தில் அவற்றை வீசியெறிந்தாள்.

கோபம் கண்ணை மறைக்கினும் கும்பிட்ட தெய்வம் குறுக்கே நின்றது. நிதானமாக அவற்றைப் பொறுக்கி எடுத்தான். துக்கத்தில் துவண்ட கல்பனாவின் கண்ணில்படாது பிரிக்கப் படாமலே பல கடிதங்கள். அதில் வங்கி முத்திரையுடன் ஓர் கடிதம் பிரிபடாமல் இருந்தது. கடையைப் பெருப்பிக்க எடுத்த "லோனை"க் கட்டச் சொல்லித்தான் வந்த வங்கிக் கட்டளையோ? "பட்ட காலிலே படும். கெட்ட குடியே கெடும்" என்று பழமொழி சொல்வார்களே அப்படித் தான் எம் நிலையோ? என மனக் குழப்பத்துடன் அதைப் பிரித்துப்படித்தான்.

நீங்கள் கொள்முதல் செய்த ரிதி ரேகா சேமிப்புச் சான்றிதழ் பிஜிஇ 140271 இலக்கத்திற்கு இம்முறை குலுக்கலில் முதல் பரிசான ரூபா4,800,000/- (ரூபா நாற்பத்தெட்டு லட்சம்) கிடைக்கப்பெற்றுள்ளது. அதற்கான காசோலையை ஆறு மாத காலத்திற்குள்.....

விமலன் கண்களிலிருந்து வந்த கண்ணீரைக் கண்ட கல்பனா மனமிரங்கி மன்னிப்புக் கேட்டாள். விடயம் தெரிந்த அவள் விழிகள் ஆச்சரியத்தால் விரிந்துகொண்டன. விரிசல் கண்ட உள்ளங்கள் இரண்டும் இணைந்து இன்பங்கொண்டன.

"அடியாரைக் காக்க அன்புடன் வருக
வருக வருக வாசவன் மைந்தா
வருக வருக மணிகண்ட....."

ஐயப்ப கவசத்தின் அந்த வரிகள் அவர்கள் வாழ்வின் வசந்த வாசலில் காற்றில் சங்கமித்தன.

வாக்குமூலம்

கோதைநாயகன் - புத்தளம்

இரவு ரோந்து டியூட்டியில் இருந்த இரண்டு பொலீஸ்காரர்கள் சந்தேகத்திற்கு இடமாக இரவு நேரத்தில் கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்னால் நடமாடிக் கொண்டிருந்தாள் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஒரு அழகிய பெண்ணைக் கைது செய்தார்கள்.

அவளோ, தான் அப்பாவி என்றும், தன் குழந்தைக்குப் பால்மா வாங்க வந்ததாகவும் சொல்லி அழுது கதறி அடம் பிடித்தாள். ஆனால், அவள் தோற்றமும் அனாவசிய அலங்காரமும் மற்றும் நடவடிக்கைகளும் அவளைப் பலான தொழில் செய்பவள் என்பதைக் காட்டியது. இப்படியான கேஸ்களில் நன்கு பரிச்சயமான அந்த பொலீஸ்காரர்கள் எந்த இரக்கமும் காட்டாமல் காவல் நிலையத்திற்குக் கொண்டு சென்றார்கள். ஒரு தனியறையில் வைத்து அவளைத் துருவித்துருவி விசாரித்தார்கள். பின்னர், அவளுடைய வாக்குமூலத்தை இருவருமாகப் பதிவு செய்தார்கள்.

பயந்து களைத்துப்போயிருந்த அவளுக்கு இவர்களே டீயும், பண்ணும் வாங்கிக் கொடுத்தார்கள். "வெளியே போய் உட்கார். சார்ஜன்ட் அய்யா வந்ததும் பெயில் அவுட் தரலாம்" என்றனர். கொஞ்ச நேரம் கழித்து ஏதோ கேஸ் விடயமாக வெளியே போயிருந்த சார்ஜன்ட் அய்யா ரொம்பக்களைப்போடு வந்து சேர்ந்தார். வந்ததும் அவரின் முதல் கேள்வி,

"யாரப்பா வெளியே ஒரு பெண் அழுதுகொண்டு உட்கார்ந்திருக்கா. என்ன கேஸ்? யார் கொண்டு வந்தது?" அதிகாரத்தோடு கேட்டார்.

அவளைக் கொண்டு வந்த பொலீஸ்காரர் இருவரும், "சார்! நாங்கதான் அவளைக் கைதுசெய்து கொண்டு வந்தோம். விசாரித்துப் பார்த்ததில் இதுவொரு பலான கேஸ் என்று தெரிய வந்தது. விசாரித்தது மட்டும்தான், இன்னும் வாக்குமூலம் எடுக்கவில்லை சார். நீங்க வந்தபின் கேட்டுச் செய்யலாம் என்று இருந்தோம்" பணிவோடு சொன்னார்கள்.

சார்ஜன்ட் எரிச்சலுடன் சொன்னார். "அது சரி! கேஸ் பிடிக்க நீங்க, வாக்குமூலம் பதிவு செய்ய நானா? சரி சரி என் அறைக்கு அனுப்பி வையுங்கள்" என்று கடுப்போடு சொல்லிக்கொண்டே எடுப்பாக நடந்து போனார்.



அரை மணித்தியாலத்திற்குப் பிறகு சார்ஜன்ட் அறையில் இருந்து வெளியே வந்தவள் தட்டுத்தடுமாறி நடந்துபோய் வெளியே கிடந்த வாங்கில் பொத்தென அமர்ந்தாள். காலிரண்டுக்குள் தலையை அழுத்திக்கொண்டு அவள் குமுறிக் குமுறி அழுவதைப் பார்க்கப் பாவமாக இருந்தது.

கொஞ்ச நேரத்தில் ஒரு பொலீஸ் ஜீப் வேகமாக வந்து நின்றது. அதில் இருந்து ஒரு வயதான ஆனால், கம்பீரமான இன்ஸ்பெக்டர் இறங்கினார். டக் டக் என்ற அவரின் சப்பாத்துச் சத்தம் கேட்டவுடன் பொலீஸ் நிலையம் சுறுசுறுப்பானது. அவர் நுழையவும் எல்லோரும் விறைப்பாக நின்று சலூட் செய்தார்கள். ஆம்! இவர்தான் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி.

பல வருடகாலமாக சிரிப்பை மறந்துவிட்ட முகம். கரகரப்பான குரலில் கேட்டார். "யாரு மேன் வெளியே ஒரு லேடி சாகப்போறாப்பல அழுது கொண்டு இருக்கா"

சார்ஜன்ட்டும், பொலீஸ்காரர்களும் அசடு வழியச் சொன்னார்கள். "சார்! அது வந்து ஒரு பலான கேஸ். இப்ப தான் கொண்டு வந்தோம். வாக்குமூலம் கேட்டா அழுது அடம்பிடிக்கிறா. என்ன செய்ய வேண்டும் என்று சார்தான் சொல்ல வேண்டும்." இன்ஸ்பெக்டருக்கு கடுப்பாக இருந்தது.

"கேவலம்! ஒரு வாக்குமூலம் எடுக்க முடியாட்டி எதற்காக இது மாதிரி கேஸ்களை கொண்டு வருகிறீர்கள்? மாதம் முடிய சம்பளம் எடுக்க மட்டும் யாரும் சொல்லித்தர வேண்டியதில்லை. சரி சரி அவளை என்னறைக்கு அனுப்பி வையுங்கள்" என்று சொல்லிவிட்டு கம்பீரமாக நடந்து சென்றார்.

பொலீஸ்காரர்கள் இருவரும் அவளைக் கைப்பிடியாகக் கொண்டு போய் அவரின் அறையில் விட்டார்கள். உள்ளே போனவள், "சார் என்னை விட்டுவிடுங்கள்" என கையெடுத்துக் கும்பிட்டாள்.

இளகிய மனம் படைத்த அந்த இன்ஸ்பெக்டருக்கு அவள் நின்ற கோலம் பரிதாபமாக இருந்தது. "முதலில் உன் அழுகையை நிறுத்து. வாக்குமூலம் பதிவு செய்தபின் தான் உன்னை விடுதலை செய்வதா? இல்லையா? என்பதை முடிவு செய்ய வேண்டும்" என்று வஞ்சகமில்லாமல் சொல்கிறார்.

அவளோ துடித்துப் போகிறாள். "ஐயோ கடவுளே! இன்னொரு வாக்குமூலமா? முடியாது சார். உங்கள் காலில் விழுந்து கும்பிடுகிறேன். வேண்டாம் சார். இதற்குமேல் என்னால் முடியாது செத்து விடுவேன். என்னை விட்டுவிடுங்க சார்" என்று நிலத்தில் உருண்டு கதறுகிறாள். இன்ஸ்பெக்டருக்கு ஒன்றும் புரியவில்லை. ஆத்திரத்தில் கத்தினார்,

"ஏய்! உனக்கு என்ன பைத்தியமா? ஒரு வாக்குமூலம் கொடுப்பதற்கு ஏன் இப்படி அழுது புலம்பி ஊரைக் கூட்டுகிறாய்? ஒழுங்கா மரியாதையா வாக்குமூலத்தைக் கொடுத்து விடு. இல்லையென்றால்... மறியற்கூடு தான்" என்று எரிந்து விழுகிறார்.

அவள் எழுந்து வணங்கியபடி சொல்கிறாள். "ஐயா தயவு செய்து நான் சொல்வதைக் கேளுங்கள். இன்று இரவு காவல் நிலையத்திற்குக் கொண்டு வந்த நேரந்தொட்டு முன்று பொலீஸ்காரங்க மாறிமாறி என்னிடம் வாக்குமூலம் எடுத்ததில் என் உடம்பு புண்ணா யிடிச்சு சாமி. இன்னொரு வாக்குமூலம் கொடுக்க என் உடம்பில சக்தியில்லை. மன்னிச்சிடுங்க" என்றபடி மயங்கிச் சரிகிறாள்.

ஏற்கனவே பலவீனமான தன் இதயம் ஓடுகிறதா, இல்லை நின்று விட்டதா என்ற சந்தேகத்துடன் தடவிப்பார்க்கிறார் இன்ஸ்பெக்டர்.

கண்ணாமூச்சி ரே... ரே... 22

"அதான் சார் பெரிய பிரச்னை. துர்க்காவுக்குப் பதிலா வேற யாரையாவது வச்சி ஆள் மாறாட்டம் நடத்தப்பட்டிருந்தா நிறைய வித்தியாசங்கள் கிடைக்கும். துர்க்கா ஒரு பர்ஃபெக்ட் டூப் ஆர்ட்டிஸ்ட். ஒரே கலர். ஒரே அளவுகள். முகம் தான் வித்தியாசம். ஒரு முகத்தைச் சிதைச்சுட்டானுங்க. ஒரு முகத்தை ஆசிட் வீசி பிய்ச்சிட்டானுங்க. இன்னொரு மைனஸ் பாய்ண்ட் - மதுலதா நல்ல மனநிலையில இல்லை. அது இருந்திருந்தாலும் எவ்வளவோ உதவியா இருக்கும்."

> "ஒரு பாய்ண்ட் சுசி இது. ட்ரை பண்ணிப் பார்க்கலாமா? நானும் கண்ணு முழிச்சி மதுலதா சம்பந்தப்பட்ட செய்திகள் ஒண்ணு விடாமப் படிச்சேன். எதுவும் கிளிக் ஆகலையே. ஒக்கே! இப்ப கௌசல்யாவைப் பார்த்து அந்த மேக்கப் வுமன் யாருன்னு விசாரிச்சி..."

நிருபர்: உங்களுக்கு படப்பிடிப்பின் போது விபத்து ஏதாவது ஏற்பட்டதுண்டா? அந்த அனுபவத்தைச் சொல்லுங்களேன்.

மதுலதா: 1982ல "கண்ணின் இமை"ன்னு ஒரு படம். சிவாஜி சார் கூட நான் நடிச்ச முதல் படம் அது தான். அதிலே ஒரு சீன்ல வில்லன் என்னைக் குதிரையிலே தூக்கிக் கடத்திக்கிட்டுப் போவான். ரிகர்சல் அப்ப சாதுவா இருந்த குதிரை டேக் அப்ப திடீர்னு வெறி பிடிச்ச மாதிரி ஓட ஆரம்பிச்சிடுச்சி. வில்லன் ஒரு பக்கம்

"பார்க்கலாம். நான் உங்களை அடிக்கடி காண்டாக்ட் பண்றேன் பரத்."

"ஒக்கே சார்..."

சுசிலா வெளியே வந்து, "பரத், நான் ஒரு யோசனை சொல்லவா?"

"சொல்லு..."

"மதுலதா தனக்காக ஒரு தனி மேக்கப் வுமன் வச்சிருந்தா. மத்தவங்களை விட ஒரு மேக்கப் வுமனுக்கு மதுலதா உடம்புல சில பிரத்யேக அடையாளம் ஏதாவது தெரியலாமில்லையா?"

"ஒரு பாய்ண்ட் சுசி இது. ட்ரை பண்ணிப் பார்க்கலாமா? நானும் கண்ணு முழிச்சி மதுலதா சம்பந்தப்பட்ட செய்திகள் ஒண்ணு விடாமப் படிச்சேன். எதுவும் கிளிக் ஆகலையே. ஒக்கே! இப்ப கௌசல்யாவைப் பார்த்து அந்த மேக்கப் வுமன் யாருன்னு விசாரிச்சி... ஹும்!" என்று பெருமூச்சு விட்டான் பரத்.

"என்ன பரத், இவ்வளவு அலுத்துப் போய்ட்டீங்க?"

"பின்னே என்ன? இந்த கேஸ் இவ்வளவு டிரில் வாங்குது. அவசர அவசரமா உன்னைக் கொஞ்ச வேண்டியிருக்கு. அட! சண்டைபோடக் கூட நேரமில்லைப் பாரு"

"சாவகாசமா சண்டை போட்டுக்கலாம். நிறைய பாய்ண்ட்ஸ் வச்சிருக்கேன் அதுக்கு. இப்ப வண்டியை ஸ்டார்ட் பண்ணுங்க" என்றாள் சுசிலா.

கௌசல்யா வீட்டில் அவள் தம்பி தான் இருந்தான்.

"அக்கா பாங்க் வரைக்கும் போயிருக்காங்க. இப்ப வந்துடுவாங்க. உட்காருங்க."

சுசிலா உட்கார்ந்து பேப்பர் படிக்க ஆ-ம்பித்தாள். பரத் அங்கே ஆஷ்ட்ரே இல்லாத காரணத்தால் வீட்டு வாசலில் வந்து நின்று சிகரெட் புகைத்தான். வீட்டு வாசலில் நின்ற மரத்திலிருந்து பறவை சொத் என்று பைக்கின் மேல் எச்சமிட... அதைத் துடைப்பதற்காக பைக்கின் சைடு பாக்ஸ் திறந்து துணி எடுத்த பரத்... பெட்டியில் அன்று வாங்கிப் போட்ட மதுலதாவை அட்டையில் தாங்கிய சினிமா எக்ஸ்பிரசைப் பார்த்தான்.

பைக்கைத் துடைத்துவிட்டு, புத்தகத்தில் மதுலதாவின் சிறப்புப்பேட்டியின் பக்கத்தைப் புரட்டி நின்ற நிலையிலேயே படிக்க ஆரம்பித்தான்.

பத்தாவது நிமிடம் வீட்டின் உள்ளே திரும்பி, "சுசி! வா கௌசல்யாவை அப்புறம் பார்த்துக்கலாம். ஒரு புது ரூட் கிடைச்சிருக்கு" என்றவன் பைக்கை ஸ்டாண்ட் எடுத்தான்.

போய்க்கொண்டிருக்கும் போது கேட்டாள், "என்ன பரத்?"

"சொல்றேன்" என்றவன் மைலாப்பூர் வந்து அப்பு தெருவில் "டாக்கடர் வீராசாமி - எலும்பு முறிவு நிபுணர்" என்கிற போர்ட்டுடன் இருந்த பெரிய கிளினிக் வாசலில் நிறுத்தி, உள்ளே வந்து, "டாக்டர் இருக்காரா?"

"இருக்கார்... நீங்க?" என்றாள் நர்ஸ்.

பரத் தன் விசிட்டிங் கார்ட்டைக் கொடுத்தான்.

"அப்படி உக்காருங்க..."

அப்படி உக்கார்ந்ததும், "என்ன? இப்ப சொல்லுங்க" என்ற சுசிலாவுக்கு அந்தப் பத்திரிகையின் பேட்டிப் பக்கத்தைப் புரட்டி, "இந்த ஒரு கேள்வியையும், பதிலையும் மட்டும் படி சுசி" என்றான்.

சுசிலா பார்த்தாள்.

போய் விழுந்தார். நான் ஒரு பக்கம் போய் விழுந்தேன். விழுந்ததிலே பின் தொடையில பெரிய அடி எனக்கு. ஆர்த்தோ ஸ்பெஷலிஸ்ட் வீராசாமி தான் ட்ரீட்மெண்ட் கொடுத்தார். உள்ளே ஒரு எலும்பே நொறுங்கிப் போச்சி. மூணு மாசம் வீட்ல படுத்த படுக்கையா இருந்தேன். அப்புறம் சரியாப் போய்டுச்சி.

"படிச்சியா? அதுக்கு என்ன மாதிரி ட்ரீட்மெண்ட் கொடுத்தார்? அந்தத் தழும்பு தொடையில இருக்குமா? இதான் இப்ப எனக்குத் தெரியணும்" என்றான் பரத்.

"சார், உங்களை வரச் சொல்றார்" என்றாள் நர்ஸ்.

டாக்டர் வீராசாமி ரோஸ் உதடுகளோடு புன்னகையோடு பேசியவர், பரத் சொன்ன விபரங்களைக் கேட்டு அதிர்ச்சியடைந்தார்.

"என்னது, ஆள் மாறாட்டமா? நான் தான் ஆபரேட் பண்ணேன். தட் வோஸ் எ பெக்யூலியர் கேஸ். தொடைப்பகுதி எலும்புல ஒரு ஜாய்ண்ட்ல ஒரு சின்ன எலும்பு சுத்தமா உடைஞ்சி தூள் தூளா இருந்திச்சி. அதை சுத்தமா எடுத்துட்டு எவர் சில்வர் எலும்பு பொருத்தினேன். ஆறு இஞ்ச் நீளத்துக்கு கிழிச்சி தச்ச தழும்பு இருக்கும். சம்பந்தப்பட்ட எக்ஸ்ரேஸ், டெஸ்ட் ரிப்போர்ட்ஸ் எல்லாம் பத்திரமா வைச்சிருக்கேன் நான். நீங்க சொல்ற பைத்தியப் பொண்ணு மதுலதாவா இருந்தா அந்தத் தழும்பு இருக்கும். இன்னும் கன்ஃபர்ம் பண்ணிப் பார்க்க கணும்னா ஸ்கேனர்ல வச்சிப் பார்த்தா அந்த மெட்டல் போன் தெரியும்."

(கண்ணாமூச்சி தொடரும்)

பட்டுக்கோட்டை பிரபாகர்

சிம்ரனைப் போல் ஒரு அக்கா கிடைக்கமாட்டார்

மோனலின் கடைசிப் பேட்டி!

கொலையா? தற்கொலையா? எனத் திரையுலகில் மற்றொரு சர்ச்சையைக் கிளப்பிவிட்டு இந்த உலகிலிருந்து நிரந்தரமாக மறைந்த நடிகை மோனல் இறப்பதற்கு ஓரிரு நாட்களுக்கு முன்னர் தமிழக நாளிதழ் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியை அப்பத்திரிகை வெளியிட்டுள்ளது.

தமிழ்த்திரைவானில் இன்னுமொரு நட்சத்திரம் மறைந்துவிட்டது. அது மோனல். இரண்டொரு நாட்களுக்கு முன்னர் "பேசாத கண்ணும் பேசுமே" படப்பிடிப்பில் அவரைச் சந்திக்க நேர்ந்தபோது மரணத்தின் அறிகுறி அவரிடம் எள்ளவும் இல்லை. ஆனால், இந்த வாரம் அவரே மறைந்துவிட்டார். தன்னம்பிக்கை நிறைந்தவராகக் காணப்பட்ட மோனலின் கடைசிப் பேட்டி இது தான்.

டில்லியில் பிறந்த பஞ்சாபிப் பெண்ணவர். பள்ளிப்படிப்பை முடித்ததெல்லாம் டில்லியில்தான். இப்பொழுது நடிப்புக்காகக் குடிபெயர்ந்துவிட்டதால் பிகாம் டிகிரியை அஞ்சலில் தொடர்ந்தார்.

★ உங்கள் அக்கா சிம்ரனுடன் மட்டும் சண்டை போட்டுக் கொள்கிறீர்களாமே...?

யார் சொன்னார்கள் அப்படி? பத்திரிகையாளர்களாகிய நீங்களெல்லாம் இப்படி என்னென்னவோ எழுதிக்கொள்கிறீர்கள். எங்களுக்குள் ஏன் சண்டை வரவேண்டும்? அவர் எனக்கென்ன கெடுதல் செய்தார்? அவர் இங்கு வந்து நடிகையாகப் புகழ் பெற்றதால்தானே என் அறிமுகம் எளிதாக அமைந்தது. அவரது அனுபவங்கள்தானே என் சினிமா உலகப் பயணத்தைச் சிக்கலில்லாமல் கொண்டு செல்கிறது. ஒன்று சொல் கிறேன், எனக்கு நிறையப்படங்கள் கிடைக்கலாம்... பட்டங்கள் கிடைக்கலாம், ஏராளமான பணமும் புகழும் கிடைக்கலாம். ஆனால், சிம்ரன் போல் இன்னொரு அக்கா கிடைக்கமாட்டார்.

சிலவாரங்களுக்கு முன் நடந்த மனோரமாவின் பாராட்டு விழாவில் கூட நாங்கள் இருவரும் ஒன்றாகத்தான் கலந்துகொண்டோம். இது எல்லாப்பத்திரிகைகளுக்கும் தெரியும். எனவே, இனிமேல் இப்படி எங்களுக்குள் எழுத்தில் சண்டையை மூட்டி விடாதீர்கள்.

★ உங்களது இன்னொரு தங்கை "ஜோதி நவ்வால்" நடிக்க வந்திருக்கிறாரே? அவர் உங்களுக்குப் போட்டியாக இருப்பாரா?

யாருக்கு யாரும் போட்டியல்ல. ஒரேயொரு நடிகை மட்டுமே வெளியாகும் எல்லாப்படங்களிலும் நடித்துக்கொண்டிருக்க முடியாது. அவரவர்களுக்கு என்னென்ன கிடைக்குமோ அது கிடைக்கத்தான் செய்யும். யாருடையதையும் யாரும் தட்டிப்பறித்துவிட முடியாது.

★ ஞான மார்க்கமாகவே பேசுகிறீர்களே! மோனல் என்றால் என்ன? ஞானமா?

இல்லை... மோனல் என்பது ஒரு பறவையின் பெயர்.

★ உங்களுக்கு இன்னும் சகோதரிகள் இருக்கிறார்களா?

இல்லை. நாங்கள் மூன்று பேர் தான். ஒரேயொரு சகோதரன் உண்டு.

★ நீங்கள் நடிக்க வந்தது அதிர்ஷ்டமா?

அதிர்ஷ்டத்தில் எல்லாம் எனக்கு நம்பிக்கையில்லை. அதை நம் கடினமான உழைப்பின் மூலம் உருவாக்கிக்கொள்ள வேண்டும். நான் தமிழில் அறிமுகமான "பத்ரி"யில் இரண்டாவது கதாநாயகி வேடம். தயங்காமல் ஒத்துக்கொண்டேன். ஓடிக்கொண்டிருக்கும் "சார்லி சாப்ளின்"ல் மூன்று கதாநாயகிகள். நான்காவதாக நான் நடித்திருக்கிறேன். அதிலும் யாரும் ஒத்துக்கொள்ளாத விலைமகள் வேடம். தயங்காமல் நடித்தேன். இன்றைக்கு அந்தப் படத்தில் என் பெயர்தான் பேசப்படுகிறது. இந்தத் திட்டமிடுதலும், உழைப்பும்தான் வெற்றி. நான் டில்லியில் கிஷோர் நமீத் கபூர் ஆக்டிங் இன்ஸ்டிட்யூட்டில் படித்துவிட்டேன் என்பதற்காக நான் விரும்பியபடிதான் நடிப்பேன் என்றால் முடியுமா?

★ அதென்ன, அவ்வளவு பெரிய இன்ஸ்டிட்யூட்டா?

ஆமாம்... அங்கிருந்து வந்தவர்கள் தான் ஹிர்த்திக் ரோஷன், ஃபர்தீன் கான், கரீனா கபூர், மஹிமா சௌத்ரி, ஈஷா தியேல் எல்லோருமே!

★ அப்படியானால் உங்கள் உதட்டின் மேலுள்ள அதிர்ஷ்ட மச்சத்தின் பங்கு தான் என்ன?

அழகுக்காக மட்டும்தான்... உண்மையிலேயே இது இயற்கையான மச்சம் அல்ல. நான் செயற்கையாக உருவாக்கிக்கொண்டது. இப்போதாவது அதிர்ஷ்டம் நாமாக உருவாக்கிக் கொள்வதுதான் என்பதை நம்புகிறீர்களா?

இந்த வருடம் மோனலுக்கு அருமையான பிறந்தநாள் பரிசு கிடைத்திருக்கிறது. அது ஒரு திரைப்படம். மோனலின் முதல் ஹிந்திப்படமும், முதன் முதலில் அவர் நடித்த படமுமான "மாதுர் ஜே சலாம்" அவரது இந்த வருடப் பிறந்தநாள் அன்று உலகமெங்கும் வெளியாகி அருமையாக ஓடிக்கொண்டிருக்கிறது. இதைத்தான் பிறந்தநாள் பரிசாகச் சொல்லிப் பூரித்தார் அவர். பிறந்தநாளில் கிடைத்த பரிசு சரி... அவர் பிறந்தநாளே ஒரு பரிசாக அமைந்திருப்பது பெரிய விஷயமல்லவா? இந்தியக் குடியரசுத் தினமான ஜனவரி 26 தான் அவர் பிறந்தநாள்.

ஆச்சரியத்தில் நம் கண்கள் விரிய அவரோ, "இதுவொன்றும் ஆச்சரியமேயில்லை... என் அப்பா பிறந்தது ஒரு புத்தாண்டு தினத்தில், என் அம்மா பிறந்ததோ ஒரு கிறிஸ்மஸ் தினத்தில்" என்று ஆச்சரியங்களை அடுக்கினார். "அதென்னவோ... என் வாழ்வின் முக்கியமான நிகழ்வுகள் எல்லாம் ஏதாவதொரு முக்கியமான நாளில் அமைந்திருக்கிறது" என்றார் மோனல் கடைசியாக,

உண்மைதான்... அவர் மரணமடைந்ததும் தமிழ்ப் புத்தாண்டு தினத்தில் தான்! ■

மலையகத்திலிருந்து ஒரு மனக் குமுறல்

ஏங்க, ஒங்களுக்கு ஞாபகமிருக்குதுங்களா எங்கள?

ஐயாமாரே, அம்மாமாரே, நீங்கெல்லாம் இன்னிக்கு ஏதேதோ பேசறிங்க, சமாதானமுன்னு சொல்லறிங்க, யுத்த நிறுத்தமுன்னுறிங்க, நல்லதுதாங்க, இல்லேங்க. ஆனாப் பாருங்க வயிறுன்னு ஒன்னு இருக்குங்களே! நா பேசறது சரியா தப்பான்னு எனக்குத் தெரியல்லீங்க. ஏம் மனசுல பட்டதச் சொல்லிப்புடுறேங்க. என்னன்னாங்க, ஏதேதோ பெரிய விஷயமெல்லாம் பத்திப் பேசறப்ப நம்ம ஒருசாண் வயிறு முனு தலைமுறையாக் கெடந்து காயுதுங்களே அதெப்பத்திக் கொஞ்சூண்டாவது யாரு தன்னும் பேசறீங்களா?

நாயமாத்தான் ஒங்கள ஒரு கேள்வி கேக்கறேங்க, படிக்காத ஏழைதான் நா, பதில் சொல்லுவீங்களா?

இந்த இலங்கத் தீவுல, ஏதோ அறுபதோ எழுபதோ வீதம் பொருளாதாரத்தகின புலிங்க என்னாம் பெரிய போராட்டத்த நடத்தி இன்னிக்கு உலக நாடுங்களையே கூட்டிக்கின்னு வந்து நாயம் கேக்கறாங்க. இன்னாம் பெரிய தொழிலாளிங்க பலத்த வைச்சிகிட்டு ஆசியாவிலேயே பெரிய தொழிற்சங்கமுன்னு பெயரையும் சேத்துக்கிட்டு நம்மால நம்ம உரிமைங்களக் கேட்டு என்ன ஒரு உருப்படியான போராட்டம் நடத்த முடிஞ்சுது இத்தின வருஷமா?

எதோ, தேசிய இனமாம் சொயநிர்ணய உரிமையாமுன்னு ஏதோதோ இப்ப அரசியலில சொல்லிக்கறாங்களே, இதெல்லாம் இந்த மலைப் பள்ளத்தாக்கில அடைபட்டுக் கிடக்குற வாய் பேசாச் சீவங்களுக்கும் இருக்குதா இல்லையான்னு நம்ம தலைமைங்க எப்பனேனும் யோசிச்சதுண்டா சொல்லுங்க?

கஞ்சியக் குடிங்கடா, ஒங்க தொழிலைப் பாத்துகிட்டு சுருண்டு படுங்கடான்னு எதையுமே ஏறெடுத்துப் பாக்கறாங்களே, ஏங்க, இந்த சந்தர்ப்பத்தப் பாவிச்சுன்னாலும் அரையுங் கொறை யுமா நீக்கப் பட்டிருக்கிற பிரசா உரிமைச் சட்டத்த முழுசா நீக்கி, நம்மட வாக்குரிமையையாவது முழுசா வாங்கித் தரலாமுல்ல? அது நாளைக்கு தேர்தலுன்னு வாறப்போ அவுங்களுக்கும் வசதிதானுங்களே! - அட சொந்த நன்மைக்குத் தன்னும் உசும்பாமப் படுத்துக் கெடக்கறாங்க பாருங்க!

> இந்தாப் பெரிய தொழிலாளிங்க சமுத்திரமும் சேந்து இத்தனை தலைமுறையா ஒழைக்கிறோம். மத்தவங்க மாதிரி ஒரு கொட்டில் வீடுதன்னும் நம்மலுக்குன்னு சொந்தமாச் சேரெல்லிங்களே அதெப்படீங்க அத்தனை ஒழைப்பும் மொத்தமாக் காணாமலாயிடிச்சு?

அதத்தன்னும் வுடுங்க, இன்னும் எத்தின ரோதனை நமக்கு, இந்த அமைச்சர் கதிரையில இருந்தபடியேகூட அதுகளக் கொஞ்சம் பாக்கலாமுல்ல. நம்ம பேர்த்து சேர்டிபிகேட்டுப் பிரச்சினைங்க, ஐடென்டிக் கார்ட்டுப் பிரச்சினைங்கன்னு எத்தனை சோலியிருக்குப் பாக்க? அதவுட நம்ம கிராம சேவகருங்க எல்லாமே சிங்களவங்களா இருக்கிறதால நாம தெனந்தெனம் பாசையோட மல்லாடித் திண்டாடுறோமே, ஏங்க நம்ம எடந்தானே, அதுக்கு நம்ம சனத்திலயே நாலு கிராம சேவகருங்களப் போட்டுக்கவா செல்வாக்கில்லாமப் போயிடிச்சு நம்ம அமைச்சருங்களுக்கு? இதுக்குக்கூட வக்கில்லைன்னா எப்புடிங்க நம்ம சமுதாயத்தைக் கட்டிக் காக்கப்போறாங்கன்னு நம்பறது? இந்த நாட்டுக்கெல்லாம் மின்சாரம் கொடுத்துட்டாங்க, நம்ம லயனுங்களுக்கு இன்னும் கொடுத்து முடிஞ்சபாடில்லைங்களே? சொன்னா வெக்கக்கேடுங்க, தேயிலக் காட்டு வாரித் தாறதாப் பீத்திக்கிற தோட்டத் துறை இருக்குதுங்களே, அது எத்தன வீதத்தக் கொட்டிக் குடுத்தாலும் தோட்டத் துறையில இருக்கிற மொத்தத் தொழிலாளிங்களும் இத்தனை தலைமுறையா வறுமையிலதானேங்க வாடுறோம்?

ஏங்க, நாங்க ஒழைச்ச ஒழைப்புல உறிஞ்சியெடுத்த லாபமெல்லம் எங்கேங்க போச்சு?

நீங்க, நல்லா லாபஞ் சம்பாதியுங்க, கொறை சொல்லேல்ல, நாடு நல்லாயிருந்தா நமக்கும் நல்லதுதானேங்க, ஆனாங்க, இந்தாப் பெரிய தொழிலாளிங்க சமுத்திரமும் சேந்து இத்தனை தலைமுறையா ஒழைக்கிறோம் ஒழைக்கிறோம், மத்தவங்க மாதிரி ஒரு கொட்டில் வீடுதன்னும் நம்மலுக்குன்னு சொந்தமாச் சேரேல்லீங்களே, அதெப் பிடீங்க அத்தனை ஒழைப்பும் மொத்தமாக் காணாமலாயிடிச்சு?

யாருங்க இங்க வஞ்சகம் செஞ்சது? தருமர் கேட்டமாதிரி கெஞ்சிக் கேட்டும் இந்தத் துரியோதனப் பசங்ககிட்டயிருந்து ஒரு துண்டு நெலந்தன்னும் இன்னுங் கிடைக்கலியே? ஏங்க இங்கயும் ஒரு பாரதப் போர் நடத்தி ரத்த ஆறு ஓடினாத்தான் நாயம் பொறக்குமா?

நம்ம புள்ளைங்களில எத்தனை பேருக்கு படிப்புச் சேந்திருக்கு? நம்ப வசிப்பிடங்களில எங்கங்க சொகாதாரம் வாழுது? பனிக் குளிரோ, கொதிக்கிற வெயிலோ, நாம கூடை சொமந்து கொழுந்தெடுத்து வந்து கொட்டுறமே, எங்கள யாருங்க ஒரு மனிசராக் கணக்கெடுக்கறாங்க? ஒரு பக்கத்தால விலையேறுது. மத்தவங்களுக்குசரி காலா காலத்துல விலையேத்தத்தோட சேத்து கண்துடைப்புக்காவது சம்பள உயர்வுன்னு ஏதோ கொடுத்திடறாங்க. நமக்கு, ஒரு செப்புச் சல்லி ஒசத்தச் சொல்லிக் கேக்கிறதுன்னாலும் சீவனப் புழிஞ்சு பெரும் போராட்டம் நடத்தி, பேச்சு வார்த்தையுன்னு இழுபறிப்பட்டு பாதியாக் காலாத்தான் ஒசத்த வேண்டிக் கெடக்குது.

யாரைங்க குத்தம் சொல்றது? அரசாங்கத்தையா? தோட்ட நிர்வாகத்தையா? தொழிற்சங்கங்களையா? நம்மட அரசியல் தலைவங்களையா?

நம்ம தலைவங்க எப்ப வாக்குக் கேட்டு நாம இல்லேன்னு சொல்லியிருக்கோம்? எத்தனை தடைவை கேட்டாலும் அள்ளி அள்ளிப் போட்டுத் தள்ளினமே, நம்ம வாழ்க்கையில இத்தனை காலத்தில என்ன பெரிசா மாத்தம் செஞ்சிருக்காங்க.

பெரிய அரசியல் கட்சிங்களா மார்தட்டிக் கொள்றாங்களே, எங்கட அரசியலென்னு என்னத்த இவுங்க சொல்றாங்கன்னு புரியல்லீங்களே!

அரசாங்கத்துல சேந்துடுறதத் தவிர என்ன பெரிய அரசியல் பண்ணியிருக்காங்கன்னு யாராச்சும் சொல்லுவாங்களா?

சின்னாஞ் சிறிய இசக்கமாத் தொடங்கி விடாம குட்டிக் குட்டியே குனிய வைச்சிட்டாங்களே நம்மள.

நமக்கு அரசியல் பத்திப் பேச இன்னும் ஞானம் போதலையாம், காலம் கூடலையாம்...!

இப்பதன்னும் ஏதோ அரசியல் பேச்சு வார்த்தை அது இதென்னு ஏதோ ஆரவாரப்படுறாங்களே, இந்த முஸுலிம் தலைவங்ககூட இந்த சந்துக்குள்ள தங்களுக்கும் உரிமை கேட்டு பேச்சில பங்காளிங்களாகப் பாக்குறானுங்களே, நம்ம தோட்டத் தமிழங்களுக்கு எதத் தன்னும் பேசிப்பாக்க நெனச்சாங்களா நம்ம தலைமைங்க?

வன்னிக்குப் போயி புலிங்க தலைவரு பிரபாகரனக்கூடப் பாத்துப்புட்டு வந்தாங்களாமுன்னு பேப்பரெல்லாம் பெரிசாப் பேசுதே, இவுங்க அவங்ககிட்ட நம்ம உரிமைங்கபத்தி என்னாங்க சொன்னாங்க?





அவுங்ககூட போட்டோ எடுத்துப் போடுறதுதான் பெரிய சாதனைன்னு அதிலயும் ஒருத்தரை ஒருத்தர் வெட்டிக் குறாங்களே!

அவுங்க போராட்டத்தப் பாராட்டுறதும் அதுக்கு ஆதரவு கொடுக்கிறதும் சரிதான், இல்லேங்கல. ஆனா நமக்கும் இதுல என்னா தீர்வுன்னு வாய் தெறந்து ஒரு வார்த்தை கேட்டா என்னாவாம்?

தெரியாமத்தாங் கேக்கறேங்க, தீர்வுன்னு வருதுன்னா, அதுக்குன்னு யாப்பையே மாத்தனுன்னு ஆயுடுச்சுன்னா ஏன் அதுல நம்ம பத்தியும் நாலு வரி சேத்துக்கப்புடாது?

இந்தாப் பெரிய எடுப்பு நடப்புச் செய்துதா இந்த மாத்தங்களுக்கே ஒத்துவருவாங்கன்னா இந்தத் தருணத்தை வுட்டுட்டு பொறவு நாம தனியா ஒரு சண்டை நடத்தி நமக்குன்னு ஒரு தீர்வைக் கேட்டு அதுக்கு இந்த அரசாங்கத்த ஒத்துவரப் பண்ணுறது நடக்குற காரியமா சொல்லுங்க?

இனப்பிரச்சினைக்குத் தீர்வுன்னு சொல்றப்போ, அத இங்க இருக்கற எல்லாச் சிறுபான்மை இனங்களுக்குமான தீர்வா ஒரே தடவையில அமைச்சுக்கறது நல்லதில்லேங்களா?

ஏன், முஸுலிங்க அதத்தானே கேக்கறானுவ, அப்புறம் நாம கேட்டாத் தப்பா?

அவுங்க தென் கெழக்கு மாகாண சபைன்னு ஒரு முஸ்லிம் மாகாணசபை கேட்டாங்க, பொறவு என்னமோ கல்முனை மாவட்டமுன்னு கேட்டாங்க, இப்ப பேச்சுவார்த்தையில பிரதிநிதித்துவங் கேக்கறாங்க, அப்பிடி யிப்புடி ஏதோன்னு தேட்டுக்கிட்டுக்கானே இருக்காங்க. நாம ஆயுதச் சண்டை போடலேன்னுட்டு எதுவுமே வேணாமுன்னு விட்டாத்தியாவா நிக்கறானுவ?

நம்ம தலைவங்க மட்டும் ஏங்க உப்புடிக் கல்லுளி மங்கனுங்களா ஒண்ணும் பறையாம நிக்கறாங்க?

போதாக் கொறைக்கு வடக்கு கெழக்குல குடியேறி வாழுற மலையகத் தமுழங்க, அவுங்க போராட்டத்தோட ஒத்துப் போகனுன்னு நம்ம தலைவரொருவரு சொல்லிப்புட்டு வந்துட்டாரே, அவுங்க அப்புடி என்னாங்க புறிம்பு காட்டி நின்னுட்டாங்க. இவுங்கதானே தேர்தலுன்னா அங்கயும் போயிக் குதிச்சுப் போட்டி போட நிக்குறாங்க? இதெல்லாம் சொல்லுறவரு மலையகத் தமிழருக்கு என்னா வேணுமுன்னு ஏங்க பேசல?

ஏதோ, மலையக தமிழங்களுக்குத் தீர்வா நாம செறிஞ்சு வாழுற பகுதிங்களச் சேத்து தனி மாகாணமா அமைக்கலாமா, மாவட்டமா அமைக்கலாமான்னெல்லாம் படிச்சவங்க கொஞ்சப்பேரு செமினாருங்க நடத்தி நாலுவிதமாப் பேசினாங்களே, இப்ப யாருமே பேச்சு முச்சில்லாமக் கெடக்குறானுங்களேங்க?

அதெல்லாம் சரிங்க, இந்தத் தலைவருங்க ரெண்டு பகுதிக்காரங்களும் அரசாங்கத்தில அமைச்சருங்களா இருக்கறாங்களே, ஏங்க, இந்த சந்தர்ப்பத்தப் பாவிச்சுன்னாலும் அரையுங் கொறை யுமா நீக்கப் பட்டிருக்கிற பிரசா உரிமைச் சட்டத்த முழுசா நீக்கி, நம்மட வாக்குரிமையையாவது முழுசா வாங்கித் தரலாமுல்ல? அது நாளைக்கு தேர்தலுன்னு வாறப்போ அவுங்களுக்கும் வசதிதானுங்களே! - அட சொந்த நன்மைக்குத் தன்னும் உசும்பாமப் படுத்துக் கெடக்கறாங்க பாருங்க!

அதத்தன்னும் வுடுங்க, இன்னும் எத்தின ரோதனை நமக்கு, இந்த அமைச்சர் கதிரையில இருந்தபடியேகூட அதுகளக் கொஞ்சம் பாக்கலாமுல்ல. நம்ம பேர்த்து சேர்டிபிகேட்டுப் பிரச்சினைங்க, ஐடென்டிக் கார்ட்டுப் பிரச்சினைங்கன்னு எத்தனை சோலியிருக்குப் பாக்க? அதவுட நம்ம கிராம சேவகருங்க எல்லாமே சிங்களவங்களா இருக்கிறதால நாம தெனந்தெனம் பாசையோட மல்லாடித் திண்டாடுறோமே, ஏங்க நம்ம எடந்தானே, அதுக்கு நம்ம சனத்திலயே நாலு கிராம சேவகருங்களப் போட்டுக்கவா செல்வாக்கில்லாமப் போயிடிச்சு நம்ம அமைச்சருங்களுக்கு? இதுக்குக்கூட வக்கில்லைன்னா எப்புடிங்க நம்ம சமுதாயத்தைக் கட்டிக் காக்கப்போறாங்கன்னு நம்பறது? இந்த நாட்டுக்கெல்லாம் மின்சாரம் கொடுத்துட்டாங்க, நம்ம லயனுங்களுக்கு இன்னும் கொடுத்து முடிஞ்சபாடில்லைங்களே? சொன்னா வெக்கக்கேடுங்க, தேயிலக் காட்டு மறைப்புத்தாங்க இன்னும் நமக்குக் கக்கூசு.

பார்லிமேந்த வுடுங்க, இந்த மாகாண சபைங்களிலயும் நம்மாக்கள் அமைச்சருங்களா, உறுப்பினருங்களா இருக்கறாங்களே, இருந்தும் இதுங்களுக்கு என்னத்த சாதிக்க முடிஞ்சுது?

எல்லாம் சரிங்க, நம்ம தோட்டத் துறையத் தனியார் மயமாக்கினாங்களே பிரேமதாஸா காலத்தில, அப்ப நாமெல்லாம் தொழிலாளிங்களுக்கு உத்தரவாதமில்லேன்னு கேக்கறப்போ, நம்ம தலைமைங்கதானே முன்னுக்கு குதிச்சி அதெல்லாம் பேசிக்கிட்டாச்சு, எல்லாஞ் சரியா நடக்குமுன்னு பெரிசா உத்தரவாதமெல்லாம் தந்து வக்காலத்து வாங்கினாங்க. இப்ப அவுங்களேதான் நம்ம சம்பள ஒயர்வுக்கு உண்ணாவிரதமும் இருக்க வேண்டி வந்து கெடக்கு? அப்போ, இது யாராத் தேடிக்கொண்ட வீதி சொல்லுங்க?

ஏங்க, அப்ப நம்ம தலைவங்க ஒன்னு சொன்னாங்களே, ஞாபகமிருக்குதுங்களா? நம்ம தோட்டத் தொழிலாளிங்களுக்கெல்லாம் கிராமங்க அமைச்சுக் கொடுத்து, அங்க அவுங்க சொந்த வீடுங்களில இருந்து மத்தவங்க வேலைக்கு வருமாப்போல வந்து திரும்ப இருந்து எழும்பி வாறது? நம்மள யாருங்க கைதூக்கி வீடுறது?

ஏங்க, நா சொல்லறது நாயம் தானேங்க? வெள்ளக்காரன் காலந்



தொட்டு இன்னிக்கு வரை நம்ம துன்பங்களுக்குச் சாவைத் தவிர வேற எதுங்க விடுதலை தந்திருக்கு? எத்தனை வதைபட்டு வாழ்க்கை நடத்துறோம் சொல்லுங்க! தொழிற்சங்கங்கல்லாம் சோரம் போறவங்களாயும் தலைவர் மாருங்கள்லாம் தன்னலக் காரங்களாயுமாயிட்டா தொழிலாளிங்கள்லாம் பொணமாத்தானே

மலையூரான்

எங்களுக்குன்னு எது மிஞ்சிக் கெடக்கு? படிப்பும் மிஞ்சல்ல, ஒழைப்பும் மிஞ்சல்ல, காணியோ பூமியோ, வீடு வளவு தோட்டம் தூரப்பு எதுவுமே இல்ல, உரிமைகளுமில்ல பெருமைகளுமில்ல, நம்ம வாழ்க்கைக்கு அர்த்தம் என்னாங்க?

தனியார் துறைக்கு எழுதிக்குடுத்த அடிமைச் சாசனத்துக்கு நம்ம சந்ததிங்களக் கொத்தடிமைங்களாக்கிப் போட்டு நம்ம காலம் போயிடப் போவுது.

நான் பேசறது சரியா, தப்பா, அதிகப் பிரசங்கித் தனமா தெரியலீங்க. தலைவங்க திட்டுவாங்க, படிச்சவுங்க மட்டு மருவாதிய மீறிப் பேசிப்புட்டேம்பாங்க, லயத்துக்காரனுங்க ஏம்பா ஒனக்கு வீண் வம்பு, ஓம் பொழைப்பப் பாத்துபுட்டுப் போவியா எம்பாங்க, ஆமாங்க, நாளைக்கு நம்ம சந்ததிங்களும் மத்தவங்களுக்குச் சமதையா மவுசோடும் மருவாதையோடும் தலை நிமிந்து வாழனுமுன்னு நமக்கு மட்டும் மனசுக்க ஒரு ஆசையிருக்காதா என்ன, சொல்லுங்க!

மலையக மக்களின் அரசியல் சமூக பிரச்சினைகளை வெளிக்கொண்டுவர இந்தப் பகுதியூடாக வாசகர்களுக்கும் சந்தர்ப்பம் உண்டு உங்கள் கருத்துக்களை எமக்கு எழுதுங்கள்.

ஆசிரியர்,
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 1772, கொழும்பு.

ஸ்போர்ட்ஸ்

26 ஆண்டுகளுக்குப் பின்னர் மேற்கிந்திய தீவில் இந்திய அணி வெற்றி!

மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான 2வது கிரிக்கெட் டெஸ்டில் இந்தியா 37 ஒட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது. 1976க்குப் பின் முதன்முறையாக மேற்கிந்திய தீவுகளில் இந்தியா வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. 5ம்நாள் தேநீர் இடைவேளைக்குப் பின் மேற்கிந்திய தீவுகள் அணி 2வது ஆட்டத்தில் 275 ஒட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

முதலாவது ஆட்டத்தில் இந்திய அணி 339 ஒட்டங்களும் மேற்கிந்திய தீவுகள் அணி 245 ஒட்டங்களும் எடுத்தன. இந்தியா 2வது ஆட்டத்தில் 218 ஒட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. இந்த டெஸ்ட் "போர்ட் ஒவ் ஸ்பெயின் இல் நடைபெற்றது. 313ஒட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் தொடங்கியது மேற்கிந்திய தீவுகள் அணி. மழைகாரணமாகத் தேநீர் இடைவேளைக்குச் சற்று முன்னர் ஆட்டம் நிறுத்தப்பட்டபோது ஒரு விக்கெட்டு இழப்பிற்கு 62 ஒட்டங்கள் எடுத்திருந்தது.

வில்லியம்ஸ் 13 ஒட்டங்களுக்கு ஸ்ரீநாத்தின் பந்து வீச்சில் திராவிட்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். 2வது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த கெயிலும், சர்வானும் நம்பிக்கையுடன் ஆடினார்கள். நன்றாக ஆடிக்கொண்டிருந்த கெயில், தசைப்பிடிப்புக் காரணமாக 21 ஒட்டங்களுடன் மைதானத்தை விட்டு வெளியேறினார். அதன் பின்னர் சர்வானுடன் ஜோடி சேர்ந்தார் லாரா. சிறப்பாக ஆடிவந்த சர்வான், 41 ஒட்டங்கள் எடுத்த நிலையில் ஹர்பன்சிங்கின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

4ம்நாள் ஆட்டநேர இறுதியில் லாரா 40 ஒட்டங்களுடனும், ஹூப்பர் 1 ஒட்டத்துடனும் களத்திலிருந்தனர். மேற்கிந்திய தீவுகளி அணியின் நம்பிக்கை நட்சத்திரமான லாரா 7 ஒட்டங்கள் எடுத்த நிலையில் ஆஷிஷ் நெஹ்ராவின் பந்துவீச்சில் திராவிட்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந் தார். முதல் டெஸ்ட்டில் இரட் டைச்சதமடித்த அணித்தலைவர் ஹூப்பர் 22 ஒட்டங்கள் எடுத்திருந்த போது நெஹ்ராவின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். தசைப்பிடிப்புக்காரணமாக மைதானத்தை விட்டு வெளியேறிய கெயில்,சந்தர்போலுடன் ஜோடி சேர்ந்தார். இருவருமிணைந்து 5வது விக்கெட்டுக்கு 74 ஒட்டங்கள் சேர்த்தனர். அணியை இந்த ஜோடியே வெற்றிக்கு அழைத்துச் சென்றுவிடும் என்ற நிலையில் கெயிலின் விக்கெட்டை ஜாகீர்கான் கைப்பற்றினார். அடுத்துக் களமிறங்கிய ஜூனியர் முர்ரே ரன் அவுட்டானார்.

37 ஒட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி இலக்கையடைந்தது. மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிராக வெளிநாடொன்றில் வைத்து இந்திய அணி 26 வருடங்களின் பின்னர் இந்த வெற்றியைப் பெற்றுள்ளது. போட்டியின் சிறப்பாட்டக்காரராக வி.வி.எஸ்.லக்ஷ்மன் தெரிவு செய்யப்பட்டார்.

★ பிரபாகரனின் அரசியல் ஆளுமை வியப்பையும் உற்சாகத்தையும் தருகிறது என்று நோர்வே பிரதி வெளிநாட்டமைச்சர் கூறியிருக்கிறாரே.?

ஏ.சிநீதரன், வவுனியா.

ஆமாம்! நோர்வே அமைச்சர் உற்சாகத்தையும், பிரதமர் ரணில் நம்பிக்கையையும் அடிக்கடி இப்படிக் காட்டிக்கொள்ளாவிட்டால் முதலுக்கே மோசமாகிவிடும் என்று தெரிந்திருப்பதால் இதெல்லாம் நமக்கு மகிழ்ச்சி தருகிறது.

✱✱✱

★ சுப்பிரமணிய பாரதியார் இளவயதிலேயே இறந்திருக்காவிட்டால் இன்னும் நல்ல பல கவிதைகள் தமிழுக்குக் கிடைத்திருக்கும் அல்லவா?

வி.சகாதேவன், யாழ்ப்பாணம்.

பாரதியாவது 39 வயதில் இறந்தார். ஆங்கிலக் கவிஞர் கீட்ஸ் 26 வயதிலேயே மறைந்தவர். இன்னும்பல கவிஞர்கள் வெளியுலகுக்குத் தெரியாமலேயே இறந்துபோனார்கள். இதற்கெல்லாம் சும்மா கவலைப்பட்டுக் கொண்டிராதீர்கள். பாரதியின் கவிதைகளை வாய்விட்டுப் படித்து இரத்தத்தில் ஊறும் உற்சாகத்தை அனுபவியுங்கள்.

✱✱✱

★ வெளிநாட்டுக்குப் போட்டிகளில் விளையாடுவதற்காகப் புறப்படும் நம் கிரிக்கெட் அணியினரைத் தொலைக்காட்சியில் காட்டும் போது பௌத்த மதகுருக்களிடம் ஆசி பெற்றுச் செல்லும் பௌத்த மதச் சடங்குகளையே காட்டுகிறார்கள். பல மதத்தவரும் இடம்பெறும் ஒரு அணியை இவ்வாறு காட்டுவது சரியா? அல்லது பௌத்த மத அணி ஒன்றுதான் வெளிநாட்டுக்குச் செல்வதாக நாம் எடுத்துக்கொள்வதா? எனக்கு இது பலநாள் குழப்பம். பதில் தேவை?

ம.ஸ்ரனிஸ்லோஸ், கொழும்பு-13.

பதில் தரவேண்டியவர்களுக்கே கேள்வி சமர்ப்பணம்.

✱✱✱

★ என் அபிமான பாடகர் ஹரீஸ் ராகவேந்தர் முகவரி என்ன?

ந.ரஷாந்தி, கறுவாக்கேணி.

"இளையகானம்" என்று போட்டுச் சக்தி ரீவி முகவரிக்கே எழுதுங்களேன்.

✱✱✱

★ காதல் நோய்க்கு என்ன மருந்து?

ஏ.எம்.றியால், நிந்தாவூர்-02.

"கலவி உள்ளவரை உடலுக்கு நோயில்லை, காதல் உள்ளவரை மனதுக்கு நோயில்லை" என்று சினிமாப் பாடல் ஒன்றில் சொல்கிறார்களே நீங்கள் கேட்டதில்லையா? காதல் தான் மருந்து உற்சாகமாக இருங்கள்.

✱✱✱

★ நான் சொர்க்கம் செல்ல ஆசைப்படுகிறேன். ஒரு வழி சொல்வீர்களா?

கை. ரமேஷ், பொத்துவில்.

முதலில் சாகவேண்டும் சம்மதமா?

✱✱✱

★ மனிதனுக்கு மனிதனே எதிரியாக இருப்பதற்கு என்ன காரணம்?

எஸ்.எம்.எம்.ஸரூக், காத்தான்குடி-03.

மற்ற விலங்குகள் எதுவும் மனிதனுக்கு எதிரியாக இருக்க முடியாது என்ற அளவுக்கு அவன் முன்னேறி விட்டதால்.

✱✱✱

★ மாயச் சூழல் என்கிறார்களே, அது என்ன?

எம்.எம்.இமாம்ஹஸன், ஹெம்மாதகம.

ஒருவனைப் பார்த்து நீ ஒட்டப்பந்தயத்தில் முதலாமிடத்தில் வருவாய் என்று சோதிடம் சொல்கிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். சோதிடத்தில் நம்பிக்கை கொண்ட அவன் நமக்கு அந்தத் திறமை இருக்கிறது போலும் என்று நினைத்து பயிற்சி செய்து ஒட்டப்பந்தயத்தில் முதலாமிடத்தில் வந்துவிடுகிறான்.

சோதிடம் சொல்லாமல் இருந்திருந்தால் அவன் ஒட்டப்பந்தயத்தில் வெற்றி பெற்றிருப்பானா? வெற்றி பெற்றவன் சோதிடத்தை நம்பாமலிருக்க முடியுமா? நம்பாதிருந்தால் ஓடியிருப்பானா?

✱✱✱

★ நாம் செய்யும் பாவங்களுக்காக நாம் தண்டிக்கப்படுவோம் என்பது உண்மையா?

கே.எஸ்.சிவமதன், காடியனாறு.

செய்த பாவங்களுக்காக அல்ல, செய்தபாவங்களாலேயே நாம் தண்டிக்கப்படுகிறோம்.

✱✱✱

புலப்படாமையம்

தோட்டத்தில் அமர்ந்திருந்தாள் அம்ரிதா. இன்றைக்கும் அவன் வரமாட்டான் என்பதை நினைக்க ஏக்கம் உண்டானது.

மேற்கொண்டு யோசிக்கவே அச்சமாக இருந்தது.

அவன் நினைவு வேண்டாம். யோசிக்க வேறு எவ்வளவோ இருக்கிறது. மனமே! அதோ அந்தக் குளத்தைப் பார். தெளிந்த அதன் அடியில் மேகங்கள் உரு மாறுவதைப் பார். மேலே வானைநோக்கி ஏக்கத்துடன் பார்த்திருக்கும் அல்லி மலர்கள் நீருக்குள் மேகங்களை முத்தமிடுவதைப் பார். ஆடுகின்ற அவற்றின் மகிழ்ச்சிக்கூத்தைப் பார்." என்று தன் மனதுக்குச் சொன்னாள்.

ஆனால், அந்த மனக் குழந்தை மீண்டும் தன்னிடமிருந்து பறிக்கப்பட்ட பொம்மையை நினைத்து வீரிட்டழுதது. மீண்டும் மீண்டும் அவன் நினைவுக்கே சென்று அடம் பிடித்தது.

காற்றூதிய பலூனை வாளித் தண்ணீருக்குள் அமுக்க அமுக்க அது திமிறி மேலெழுவதைப் போல அவன் நினைவே மனதின் முதல் தளத்தில் எப்போதுமிருந்தது.

அவனை நினைக்க வேண்டாம் என்று நினைக்க நினைக்க எண்ணமெல்லாம் அவனாகவே நிறைந்தான்.

இப்படித் தான் தோட்டத்திலிருக்கும் சமயங்களில் திடீரென்று வந்து நிற்பான்.

அவனையே தேடியபடி இருக்கும் கண்களுக்கு அகப்படாமல் சட்டென்று அருகில் தோன்றுவான். திகைப்பில் அவளுக்கு மூச்சு வாங்கும்.

சிரித்தபடியே அருகே அமர்ந்து, கையால் அவள் தோளை வளைத்துத் தன்னுடன் சேர்த்து இறுக்கிக்கொள்வான்.

கன்னத்தோடு கன்னம் உராய்ந்தபடி, "இன்னும் பயம் தணியவில்லையா?" என்பான்.

அவள் அவன் பிடியிலிருந்து விலகுவதற்கு விரும்புபவள் போல உடலைப் பக்கவாட்டில் அசைப்பாள்.

அவளை அசையவிடாதிருக்கும் முயற்சியில் அவன் மறுகையாலும் அவள் தோளைப் பற்றிக்கொள்வான்.

அவன் முரட்டுத்தனம் அவளுக்கு உவப்பாக இருக்கும்.

முகத்தைப் பார்த்தால் குழந்தையைப் போலிருப்பான். அதே சமயம் முறுக்கேறிய காளைக் கன்றின் சதையாக, உருக்கி ஒட்டிவிட்ட இரும்புச் சட்டம் போல அசைக்க முடியாதபடியிருக்கும் அவன் கரங்களும், அவனுக்கேயான வியர்வை மணமும் அவளறிவாள்.

அவன் தன் தோள்களை, கழுத்தை, கைகளின் மெல்லிய மயிர்ப்பரப்பை, உதடுகளை மாறிமாறிப் பார்த்தபடி இருப்பதை அம்ரிதாவின் ஓரக்கண் பார்வை அறியும்.

அவளே அறியாமல் உடல் பிரக்ஞை காரணமாக இயல்பற்ற முறையில் அவளுடைய அசைவுகள் மாறும். அது பற்றி வெட்கமும், கோபமும் அடைவாள்.

"கண்களைப் பார் பாம்பு போல், இப்படியா உடம்பையெல்லாம் உற்று உற்றுப் பார்ப்பார்கள்" என்று மனதுக்குள் முணுமுணுப்பாள்.

ஆனால், உடையைச் சரிசெய்வதிலும், கூந்தலை ஒதுக்குவதிலும் தன்னிடம் ஏற்பட்ட தேவையற்ற நளினத்தையும் அசைவுகளையும் உணர்ந்து, "ஐயோ இதென்ன வெட்கக்கேடு" என்று தன்னையும் நொந்துகொள்வாள்.

இந்த நாடகம் மெல்ல மெல்ல அவனையே நெறியாள்கை செய்பவனாக மாற்றிக்கொண்டு நடக்கவாரம்பிக்கும்.

அவன் ஒரு கம்பீரமான பாவனையையும், நாடகத்தின் சகல அசைவுகளையும் தன் கட்டுப்பாட்டில்

கொண்டுவரும் கடுகடுப்பையும் மேற்கொள்ள அவள் மிகப் பலவீனமான ஒரு அபலையின் பாவனையை மேற்கொள்வாள்.

அந்தப் பாவனையே அவனை மேலும் மேலும் அதிகாரம் எடுத்துக்கொள்ளத் தூண்டும் என்பதை அறிவாள்.

அவனுடைய வலிமைக்கும் உறுதிக்கும் அடங்கிய எளிய பெண்ணாக, ஏதுமறியாப் பேதையாகத் தன்னைக் கற்பனை செய்துகொள்வது அவளுக்கு உவகை தரும்.

அவன் தன் ஆக்கிரமிப்பை விரிவுபடுத்துவான். பல புதிய பிரதேசங்களைத் தன் ஆளுகைக்குள் கொண்டு வருவான்.

துடித்துத் திமிறும் இதயத்தை அடக்கியபடி அவன் ஒவ்வொரு பகுதியாக முன்னேறி நடமாடுவதை ஒவ்வொரு உடலணுவாலும் உணர்ந்தவளாக தான் விரும்பி இதெல்லாம் நடக்கவில்லை என்பது போலிருப்பாள். அவன் இன்னும் என்னவெல்லாம் செய்யப் போகிறான் என்பதொன்றும் அறியாதவள் போல பாவனையிலிருப்பாள்.

ஆனால், அவர்களுடைய நாடகத்தின் இறுதிக் கட்டம்வரை அவள் மனம் முன்னேறியிருக்கும்.

அவனுடைய இம்சை அவளை உள்ளூரக் கிளுகிளுக்க வைக்கும். அவனுடைய அதிகாரபூர்வ நெறியாள்கையில் தான் எதுவும் செய்வதறியாப் பேதை என்ற பாவனையில் தன்னை ஒப்புக்கொடுத்து நிற்பாள்.

அவன், வெறுங் களிமண்ணைத் தனக்குவாகாக மாற்றிக்கொள்ளும் குயவனைப் போல, வேண்டிய சுதந்திரம் எடுத்துக்கொண்டு அவளைத் தன் ஆளுகைக்குட்படுத்துவான்.

ஒரு சர்வாதிகாரியின் ஆட்சிக்குத் தங்களை ஒப்புக்கொடுத்துவிடுவதில் சுகங் காண்கிற மக்களைப் போல, அவள் அவன் பிடியில் மயங்கிக்கிடப்பாள்.

ஏதோ இலை உதிர்ந்து வீழ்ந்ததில் அம்ரிதா திடுக்கிட்டு விழித்தாள்.

தனிமை சற்றுவெளியைப் பேருருவாக்கி அவள் மீது கவிந்து அழுத்தியது.

இருக்க முடியவில்லை. எழுந்து வீட்டுக்குள் ஓடினாள். கோபமும், ஆங்காரமும் மனதை எரித்தன. மஞ்சத்தில் வீழ்ந்து தலையணையில் முகம் புதைத்தாள். கண்களில் கண்ணீர் ஊறி தலையணையை நனைத்தது. அவள் முகத்தோடு சேர்த்து அதுவும் புழுங்கியது.

நெடுநேரம் படுத்திருக்கவும் முடியாமல் எழுந்து வெளியே வந்தாள். கைகளால் தலையை அறைந்தபடி கதறவேண்டும் போலவும், வெட்டவெளியில் அகரத்தனமாக கைவிரித்து ஓடவேண்டும் போலவும் உணர்ந்தாள்.

வாடைக்காற்று வீசும் இந்த மாலைப் பொழுது...

பகல் இறந்து இரவு உயிர்க்கிறது.

எனக்கு இது ஏன் இவ்வளவு வேதனை தரவேண்டும்?

தனிமைக்கு இத்தனை குரூரத்தைச் சொல்லிக்கொடுத்தது யார்?

தூரத்தே மாட்டுத் தொழுவத்தைப் பார்த்தாள். மாட்டை ஒருவரும் இன்னும் அவிழ்த்துக் கட்டவில்லை. நெருங்கிச் சென்றாள். கீழே சாணமும் சகதியுமாக கால்களை மாற்றி மாற்றி வைத்தபடி நின்றது பசு. முளையுடன் கட்டியிருந்த கயிறு அதைத் தூரச் செல்லவும் விடவில்லை. கீழே படுக்கவும் முடியவில்லை. தத்தளித்தபடி நின்றது பசு.

அதே பசுவின் கொடுமைதான் தனக்கும் என்று உணர்ந்தாள். முளையிலே கட்டிய கயிறென அவன் நினைவு. அதைவிட்டு நீங்கவும் முடியாது, அதை மறக்கப் படுத்துத் தூங்கிவிடவும் முடியாது. அவன் நினைவே சுற்றிச் சூழ்ந்து தன்னை அசையவிடாது ஒரு புள்ளித்தனிமையில் நிறுத்தியிருப்பதை எண்ணி மனம் குமைந்தாள்.

"ஓ"வென்று கத்திப் புலம்புவதைத் தவிர அவளுக்கு வேறுவழி தெரியவில்லை.

உரைக்கல் ஆகா எவ்வம் இம்மென
இரைக்கும் வாடை இருள்கூர்
பொழுதில்
தொளியுடைத் தொழுவில்
துணிதல் அற்றத்து
உச்சிக் கட்டிய கூழை ஆவின்
நிலை என ஒருவேன் ஆகி
உலமரக் கழியும்
இப்பகல் மடி பொழுதே!

(நற்றிணை: 109: 5-10)

ஜோதிகா

★ எனது அபிமான நடிகை "கொளுக் கட்டைக் கண்ணி" ஜோதிகாவுக்கும் நடிகர் சூர்யாவுக்கும் இடையில் காதல் மலர்ந்து மணம் வீசுகிறதாமே?

சோ.தனுஷ்யன், ஆரையம்பதி.

மணம் வீசுவதெல்லாம் சில பத்திரிகையாளர்களின் மூக்குக்குத் தான். அதை விடுங்கள். கயல், குவளை, அம்பு, வேல் என்று கவிஞர்களை அல்லாட வைக்கும் கண்ணுக்கு இப்படியொரு உவமையை எங்கு கண்டுபிடித்தீர்கள்?

✱✱✱

★ ஆயிரம் பொய் சொல்லியாவது ஒரு கல்யாணத்தைச் செய் என்கிறார்களே, அத்தனை பொய்களுக்கு எங்கே போவது?

கே.வசந்த், கொழும்பு-15.

இப்படித் தடுமாறுவீர்கள் என்று தெரிந்துதான் போலும், பின்னர் காலம் பூராவும் சொல்லுவதற்குத் தெரிந்திருக்க வேண்டியதைக் கல்யாணத் துக்கு முன்னே பழகிக்கொள்ளுங்கள் என்று சொல்லி வைத்தார்களோ என்னவோ!

✱✱✱

சிந்தியா பதில்கள்

★ முட்டாள்களையும் குழந்தைகளையும் தவிர, உலகத்திலேயே கூடுதலாக உண்மை சொல்லுபவர்கள் யார் சிந்தியா?

பா.ஜனார்த்தனி, பெரியகல்லாறு-02.

பொய் சொல்லத் தெரியாதவர்களையும், பொய் சொல்லத் தேவையில்லாதவர்களையும் மனநிலை பிறழ்ந்தவர்களாகக் கருதுவது இந்த சமூகத்தின் வழக்கம். எனவே தெளிவான மனநிலையுடன் இருப்பவர் என்போர் பொய் பேசுவோர் என்றாகிறது. வேண்டுமானால் நீங்கள் உண்மையையே பேசுவதென்று முடிவு செய்து பாருங்கள். முட்டாள் என்று திட்டவோ, குழந்தை என்று எள்ளிநகையாடவோ மாட்டாது இந்த உலகம்; பைத்தியம் என்று தான் ஒதுக்கும்.

இந்தப் பழிப்புக்கு அஞ்சித் தான் நான் உண்மையையே பேசுவது என்ற விரதத்தைக் கைவிட்டேன் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள்!

✱✱✱

தேவ கன்னிகையரின் காதல்

திருமால்புரி அரசன் தருமராஜனுக்கு முன்று புத்திரர்களும், ஒரு புத்திரியும் இருந்தனர். அவர்கள் அனைவருக்கும் கல்வி முதலான கலைகள் யாவற்றையும் முறையாக நிறைவேற்றி வைத்தபின்னர் மன்னர் காலமாகி விட்டார். இருப்பினும் இந்நாட்டின் அரியணையில் ஆட்சி புரிவதற்கேற்ற எவரையும் தெரிவுசெய்ய முடியாமல் மந்திரிபிரதானிகளும் பிரமுகர்களும் தவித்தனர்.

இளவரசர்கள் மூவரும் தேசசஞ்சாரம் செய்து வந்த பின்னர் அவர்களில் ஒருவரைத் திருமால்புரி அரசராக அரியணை ஏற்றுவதெனத் தீர்மானிக்கப்பட்டது. இதன்படி தேசசஞ்சாரம் செய்யப் புறப்பட்ட மூன்று இளவரசர்களும் தேவ கன்னியர்கள் மூவரின் வலைக்குள் வீழ்ந்து விட்டனர்.

தேவலோகத்திலிருந்து மாலை வேளையில் பூமிக்கு வரும் தேவகன்னியர்கள் கானகத்தின் நடுவேயிருந்த பொய்கையில் நீராடிவிட்டு வெளியேறியபோது ஒருமரத்தினடியில் படுத்துக்கொண்டிருந்த திருமால்புரி இளவரசர் மூவரையும் கன்னியர்களுக்குச் சொந்தமாகவிருந்த மூன்று மாளிகைகளுக்கும் அழைத்துச்சென்று சுகபோகம் அனுபவித்துவிட்டு அதிகாலையில் தேவலோகம் புறப்படும்போது இளவரசர்களைக் கல்லாக்கிவிட்டுச் சென்றுவிடுவார்கள். மாலையானதும் மீண்டும் அத் தேவகன்னியர்கள் மூவரும் பூலோகம் வந்து கல்லாயிருக்கும் இளவரசர்களை கல்லுருவை நீக்கி மனமகிழ்ச்சியாயிருப்பார்கள். இவ்வாறு பல நாட்கள் தொடர்ந்தன.

தேவகன்னியர்களின் இத்தகைய கொடூரச் செயல்களிலிருந்து மீள முடியாமல் இளவரசர்கள் தவித்தார்கள். அவர்களில் இளையவரான மகாசூரன் ஒருநாள் இரவு உலாவிக்கொண்டிருந்த போது ஒரு தேவதையைக் காண்கிறான். இளவரசர்களைத் தேவகன்னியர்களின் பிடியிலிருந்து மீண்டுகொள்வதற்காக அந்தத் தேவதை உதவி செய்வதாக வாக்களித்தது. மகாசூரனிடம் அந்தத் தேவதை ஒளிபொருந்திய ஏழு இரத்தினக்கற்களைக் கொடுத்தது.

"இளவரசனே நீயும், உன் சகோதரர்களும் தேவகன்னியர்கள் தூங்கும் போது மாளிகைகளை விட்டு வெளியேறவேண்டும். சற்றுநேரத்திற்கெல்லாம் தேவகன்னியர்கள் உங்களைத் தொடர்ந்து வருவார்கள். உங்களைப் பெயர் சொல்லி அழைத்துக்கொண்டே வருவார்கள். ஆனால், நீங்கள் திரும்பிப் பார்க்கவே கூடாது. அவர்கள் நெருங்கி வந்ததும், அவர்களுக்கும் உங்களுக்கும் உள்ள இடைவெளியில், திரும்பிப்பார்க்காமல் நான் உங்களிடம் தந்திருக்கும் இரத்தினக்கற்களில் ஒன்றைப் பின்புறமாகப் போட்டு விடுங்கள். அந்தக் கல்லின் ஒளியில் மயங்கிய கன்னியர்கள் மூவரும் சற்றுத் தாமதமடைவார்கள். இதனைப் பயன்படுத்தி நீங்கள் மூவரும் வெகுதூரம் சென்றுவிடலாம். இருப்பினும் மீண்டும் அவர்கள் மயக்கம் தெளிந்து உங்களைப் பின்பற்றி வருவார்கள். அவர்கள் நெருங்கியதும் முன்பு போல் மீண்டும் ஒரு இரத்தினக்கல்லைப் பின்புறமாகப் போட்டுவிடுங்கள். இவ்வாறு ஏழு கற்களையும் ஒன்றன் பின் ஒன்றாகப் போட்டுவிடுங்கள்.

இவ்வாறு ஏழாவது கல்லைப் போடும் போது பொழுது புலர்ந்துவிடும். இவ் வேளையில் உங்கள் மூவரையும் கல்லாக்க முடியாமல் தேவகன்னியர்கள் தேவலோகம் சென்றுவிடுவார்கள். அன்றைய பகல் முடிவடைந்து மாலையாவதற்குள் இந்தக் கானகத்தைக் கடந்து நீங்கள் உங்கள் அரண்மனைக்குச் சென்றுவிட வேண்டும். இ'தன் பின்னர் அக்கன்னியர்களால் உங்களை எதுவும் செய்ய முடியாமல் போய்விடும்"

இவ்வாறு கூறிய தேவதை இளவரசன் மகாசூரனிடம் ஏழு கற்களையும் கொடுத்து விபரங்களையும் கூறியது. மகாசூரன் மிக்க மகிழ்ச்சியுடன் தேவதைக்கு நன்றிகூறிவிட்டுத் தன்னுடைய சகோதரர்கள் இருவரையும் எழுப்பி, தேவதை கூறிய தகவல்களைச் சொல்லிய பின்னர் மூவரும் தங்கள் அரண்மனையை நோக்கிப் புறப்பட்டனர்.

மன்னாதி மன்னன் 102

இராஜகுமாரன்

இவர்கள் மூவரும் தங்களிடமிருந்து தப்பிச் செல்கின்றனர் என்பதை உணர்ந்த தேவகன்னியர்கள் அவசரஅவசரமாகப் புறப்பட்டு இளவரசர்களைத் தொடர்ந்தனர். மகாசூரன், தேவதை அவனிடம் கூறியதற்கு ஏற்ப தன் சகோதரர்களுடன் திரும்பிப்பாராமல் சென்று கொண்டிருந்தான். தேவதை கூறியது போல் கற்களைப் பின்புறமாகப் போட்டுக் கொண்டே சென்றான். ஏழாவது கல் போடும் போது பொழுது விடிந்து விட்டது. அதற்குமேல் பூலோகத்தில் தாமதிக்க முடியாது என்றுணர்ந்த தேவகன்னியர்கள் என்ன செய்வதெனத் திகைத்து நின்றனர். அக் கன்னியர்களுள் இளையவளான ரூபகன்னிகையின் ஆசைக்குரியவனான மகாசூரனே இரத்தினக்கற்களைப் போட்டுத் தங்களைத் தடுத்து நிறுத்தி வந்தான், என்று அறிந்து கொண்டனர். அவர்களில் வயதில் மூத்தவர்களான இருவரும் இளையவளான ரூபகன்னிகையை அடித்துத் தாக்கிக் கொலை செய்து அவ்விடத்திலேயே போட்டுவிட்டுத் தேவலோகம் சென்றனர்.

தனக்கு அதுவரை இன்பமூட்டிய ரூபகன்னிகை கொலைசெய்யப்பட்டதைக் கண்டு மகாசூரன் வருந்தினான். அவனது மூத்த சகோதரர்கள் இருவரும் மகாசூரனுக்கு ஆறுதல் கூறித் தங்களுடன் வந்துவிடுமாறு கோரினர். ஆனால், மகாசூரன் மறுத்துவிட்டான். மரக்கட்டைகளை அடுக்கித் தீ மூட்டினான். அதே தீயில் தானும் வீழ்ந்து மாண்டுவிடுவதெனத் தீர்மானித்து சிதையைச் சுற்றி வலம்வந்துகொண்டிருந்தான்.

அதேவேளையில் காளிகாம்பாள் தோன்றி, "மகாசூரனே... நீ எதற்காக உன்னுயிரைத் தியாகம் செய்கின்றாய்? நீ ரூபகன்னிகையைப் பிரிந்து செல்ல விரும்பினாலும் அவளின் மீது உனக்கு உண்மையான அன்பு இருக்கிறது. எனவே, நீ விரும்புவது போல் அவளை உயிர்ப்பித்துத் தருகின்றோம்" என்று கூறியதும், சிதையில் முட்டப்பட்டிருந்த தீ அணைந்தது. ரூபகன்னிகையும் உயிர்பெற்றெழுந்தாள்.

நடந்த சம்பவங்கள் அனைத்தையும் மகாசூரன் அவளிடம் எடுத்துக் கூறினான். மூத்த கன்னிகைகள் இருவரும் ரூபகன்னிகைக்கு விளைத்த கொடுமைகளைப் பற்றியெல்லாம் அவள் பொருட்படுத்தவில்லை. தன்னை உயிர்பெறவைத்த மகாசூரன் மீது அவளுக்கு மேலும் அன்பு அதிகரித்தது. அவனுடன் கூடிவாழ ஆசைப்பட்டாள். இருப்பினும் தேவகன்னிகையான அவள் குறிப்பிட்ட காலத்திற்கு மேல் பூலோகத்தில் தங்கமுடியாது என்பதால் தேவலோகம் செல்ல ஆயத்தமானாள். அவளைப் பிரியப்போவதை எண்ணிய இளவரசன் மகாசூரன் கலங்கினான். ரூபகன்னிகை ஒரு மகர வீணையை மகாசூரனிடம் கொடுத்து, "நான் தங்களிடம் வரவேண்டுமென்று நீங்கள் விரும்பினால் இந்த வீணையை மீட்டுங்கள். அப்போது நான் உங்கள் முன்தோன்றுவேன்" என்று கூறி விடைபெற்றாள்.

ரூபகன்னிகை கொடுத்த மகர வீணையுடன் திருமால்புரி திரும்பிய இளவரசன் அன்று மாலை தனது அரண்மனையிலிருந்தவாறு ரூபகன்னிகையை நினைத்து வீணையை மீட்டினான். அப்பொழுதே ரூபகன்னிகை அவன் முன் தோன்றினாள். இருவரும் அரண்மனையை விட்டு வெளியே வந்தபோது அங்கே வானரதம் இருப்பதைக் கண்டனர். தேவகன்னிகை கொண்டு வந்த வானரதமே அதுவாகும். அதில் இருவரும் ஏறியதும் அந்த ரதம் வானில் பறந்தது. ஒரு அழகான நந்தவனத்தில் இறங்கியது. இருவரும் ரதத்தை விட்டிறங்கி ஆடிப்பாடி மகிழ்ந்துகொண்டிருந்தனர். அப்போது சற்றும் எதிர்பாராமல் அந்தச்சோலையில் தவம் செய்து கொண்டிருந்த முனிவன் ஒருவன் தோன்றினான்.

(மன்னன் வருவான்...)

காதில பூ கந்தசாமி

நோட்டீஸ் பலகை

நான் சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர வேறொன்று
மில்லை -காதில பூ கந்தசாமி-

பெரும் அடுக்குப்பண்ணி வன்னிக்குப் போன கூட்டுக் கட்சிமார் என்னத்தைப் பேசிச்சினமெண்டு அறிவமெண்டுட்டு ஒவ்வொருத்தராப் ஃபோன் பண்ணினன்.

ஹல்லோ, திஸ் இஸ் காதில பூ கந்தசாமி.

சம்பந்தர் ஐயா நிக்கிறாரோ?

சம்பந்தன்: ஓம், நான்தான் பேசிறன். என்ன விஷயம்?

கா.பு+: ஐயா, வன்னிக்குப் போய் என்ன பேசினியல்?

சம்: எல்லாம் நல்லாத்தான் முடிஞ்சது. நாங்கள் பாராளுமன்றத்தில தொடர்ந்தும் இருக்கலாமெண்டிட்டினம். வேற என்ன?

கா.பு+ இல்லை, நீங்கள் என்ன கேட்டியல்?

சம்: நாங்கள் என்ன கேக்கக் கிடக்கு. நாங்கள் அவை சொன்னதக் கேக்கப் போனநாங்கள். கேட்டுட்டு வந்திட்டம்.

கா.பு+ உங்கட பேட்டிய பி.பி.சி. மில கேட்டன். இடைக்கால நிர்வாகத்தில எவரும் பங்கு கேக்கக் கூடாதெண்டியல். ஏன் உங்களுக்கு இடம் தரேல்லையே?

சம்: தம்பி, நீர் நக்கல் நளினம் பேசிறதெண்டால் ஃபோனை வையும். எங்களுக்குத்தானே இங்க 16 இடம் கிடக்கு பிறகென்னத்துக்கு வேற வேற அலுவல்களில இடம் எங்களுக்கு?

கா.பு+ நீங்கள் 16ம் பெற்றுப் பெருவாழ்வு வாழறியலெண்டது உண்மைதான். அப்பிடியெண்டால் நீங்கள் ஏன் உள்ளூராட்சி சபைகளுக்குத் துள்ளிக் கொண்டு போட்டிபோடப் பெயர் குடுத்தியல். அதிலயும் எனக்கு இடம் உனக்கு இடமெண்டு உங்களுக்கயும் அடிபட்டுக் கொண்டியல்?

சம்: சும்மா சம்பந்தமில்லாததெல்லாத்தையும் இழுத்து எங்களச் சங்கடத்தில மாட்டப் பாக்காதயும். நான் இப்ப கனக்கக் கதைக்கிறதில்லையெண்ட பொலிஸியில இருக்கிறன். உமக்கு வம்பளக்க வேணுமெண்டால் சங்கரியாரிட்டக் கேளும். நான் வைக்கிறன்.

கா.பு+ ஹலோ, சங்கரியண்ணை நிக்கிறாரே?

சங்கரி: நான் சங்கரிதான் பேசிறன், நீர் ஆர்தம்பி?

கா.பு+: அது நான் கா.பு+. என்னெண்டாலண்ணை நீங்கள் வன்னிக்குப்போய் வாய் மூடிக்கொண்டு இருந்திட்டு வந்திட்டியலாம். உண்மையோ?

சங்கரி: உதார் உவன் மாவையோ சொன்னது? அவர் என்ன வெட்டிக் கிழிச்சாராமெண்டு கேளாதயுமன்.

கா.பு+ அண்ணை எடுத்த உடனயே கொதிக்காதேங்கோ, தெரியாமல்தான் கேக்கிறன் உங்களுக்கும் மாவைக்குமிடையில அப்பிடி என்ன ஒரு பாசம்?

சங்: பாசமாவது, பனங்கொட்டையாவது! ஏதோ, கூட்டணியில தான்தான் சுத்தத் தமிழரசுக் கட்சிக் காரனெண்டும் நாங்களெல்லாம் எங்கயோ கொங்கிரசில இருந்து குதிச்சுக் கூட்டணியை ஆக்கிரமிச்சுப் போட்டமெண்டும் அழுது திரியிறார். ஏன் தம்பி, அங்கயும் ஏதும் என்னப்பற்றிக் கொம்பிளைன் குடுத்ததாக் கேள்விப் பட்டநீரோ?

கா.பு+: அப்பிடி எதுவும் எனக்குத் தெரியேல்லை. நீங்கள் என்ன பிரச்சினையல அங்க வாய்விட்டுக் கதச்சியலெண்டதச் சொன்னால் உதவும்.

சங்: ஏன் நான்தான் கதைக்க வேணுமே மற்றவையலெல்லாம் என்ன வாய்க்க கொழுக்கட்டையே வைச்சிருந்தவை? ஏன் உந்த வீராப்புக் கதைக்கிற வினாயகர் என்ன செய்தார்? இந்தக் காட்டுக்கையும் இந்தப்பெரிய வீடோ எண்டு வீடுப்புக் கதை கதைச்சதத் தவிர வேற என்ன கதைச்சவர்? அவயிட்டக் கேளும் போய். எனக்கு டென்சுன் ஏறினால் நித்திரை குழம்பீடும். வைக்கிறன் ஃபோனை.

கா.பு+: ஹல்லோ வினாயவீர்த்தி ஐயாவே? உங்களிட்ட வடக்கு விஜயம் பற்றிக் கேக்கலாமோ?

வினா: வழக்கோ தம்பி! இப்ப வழக்கொண்டும் வாறதில்லை வருமானமும் இல்லையெண்டு யோசிச்சுக்கொண்டிருக்கக்க வயித்தில பால் வாத்த மாதிரி எடுத்திருக்கிறீர். சொல்லும், எங்க யார் பிடிபட்டது...?

கா.பு+ ஐயா, இது நான் கா.பு+ வன்னி விஜயத்தப்பற்றிக் கேக்கிறன். என்ன பேசினியல் அங்க?

வினா: அவைதான் என்னென்னவோ பேசிவை. நாங்கள் பேசினாலென்ன பேசாட்டாலென்ன எல்லாத்துக்கும் சப்போட் தானே! பிறகெதுக்கு?

கா.பு+: நீங்கள் போய் விட்ட வாய்பாத்திட்டு வந்திட்டியலாமெண்டு உங்களோட வந்தவை நக்கலடிக்கினம்?

கா.பு: அவையிண்ட நக்கலுக்கு நீர் பப்ளிசிட்டி குடுக்க வந்திட்டீரோ? ஃபோனை வையும்.

கா.பு+ ஹலோ, ஹல்லோ..! சுரேஷண்ணையே, அண்ணை நானுந்தான் எல்லாரிட்டையும் சுத்திச் சுத்திக் கேட்டுப் பாக்கிறன் உந்த வன்னிச் சந்திப்பில என்ன கதைச்சநீங்களெண்டு. ஒருத்தரும் வாய் திறக்கினமில்லை. நீங்கள்தான் கொஞ்சம் துணிஞ்சவர். நாரந்தனைச் சம்பவத்தில மற்றவையக் காப்பாற்றிக் கொண்டு வந்தவரெண்டும் பெருமைப் படுறவர். என்ன பேசினியலெண்டு அந்தச் சிதம்பர ரகசியத்தை ஒருக்காச் சொல்லுங்கவன்.

சுரேஷ்: இங்கபாரும், எல்லாம் எல்லாருக்கும் தெரியத் தேவையில்லை. நாங்களா எதையும் பேசாட்டாலும் அதை நாங்களாச் சொல்லிக்காட்டாமல் சனம் தாங்களா எதையும் கற்பனை செய்துகொள்ள விடுறதுதான் புத்திசாலித்தனமான பொலிட்டிக்ஸ். பிரேமதாஸாவோடயுந்தான் எத்தின மாசம் பேச்சு நடந்துது. என்ன பேசினதெண்டு யாருக்குத் தெரிஞ்சுது? உம்மட சோலியப் பாருமன் பேசாமல்.

(கடைசி முயற்சியா எஞ்சியிருக்கிற டேலோ வைத் தேடி ஃபோன் எடுத்தால் செல் வண்ணை இந்தியாவிலயாம். எங்க போய் நடந்தத அறியிறதெண்டு பேப்பரெல்லாத்தையும் புரட்டிப் புரட்டிப் பாத்துக் களைச்சுப் போனன். சீன்ன ஒரு செய்தியையும் கொக்கரிச்சு ஊரெல்லாம் தம்பட்டமடிக்கிறவை ஏன் இந்தப் பெரிய முக்கியமான சந்திப்பு நடந்தும் இம்மியும் வாய் திறவாமல் இருக்கினமெண்டு எனக்கெண்டால் விளங்கேல்லை. உங்களுக்குத் தெரிஞ்சால் எழுதுங்கோ, ப்ளீஸ்.

யாவும் கலப்படமற்ற கற்பனை

இந்தவருட உங்கள் பலன் — சோதிட மாமணி

2002 பண பலன்கள்

கன்னி

(உத்திரம் 2,3,4,ம் பாதங்கள்; அஸ்தம், சித்திரை 1,2ம் பாதங்கள்) முதல் நான்கு மாதங்கள் சற்றுச் சொற்பமான பலன்கள் தரக்கூடும். அதுவும் பண விஷயத்தில் உங்களை ரொம்பவுமே மெனக்கெட வைக்கும். கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாது.

அவ்வளவு ஏன்? உங்களுக்குச் சொந்தமான பணத்தைக் கூட எடுத்துச் செலவு செய்துவிட முடியாது. அப்படி ஒரு அசௌகரியமான சூழல் நிலவும்.

இதனிடையே பிப்ரவரியில் நிகழும் ராகு, கேது பெயர்ச்சியில் கேது அனுகூல நிலை அடைகிறார். எனவே சற்று ஆசுவாசப்படுத்திக் கொள்ளலாம். ஏப்ரல் நான்காம் வாரம் உங்களுக்குத் திடீர் அதிஷ்ட வாய்ப்புக்களை ஏற்படுத்தும். நீண்ட தூரப்பயணங்களை மேற்கொள்வதன்மூலம் பொருளாதாரம் உச்ச நிலைநோக்கிப் பயணிக்கும். மே மூன்றாவது வார இறுதியில் குஜன் எனப்படும் செவ்வாயின் சஞ்சாரம் மெருகேறுவதால் சிறப்பான பலன்களைத் தரும். வீடு, நிலம் என்று ஆக்கம் தரும். ஆதாயமும் தரும்.

ஜூலை மாதம் குரு பகவான் 11ம் இடத்தில் லாபாதிபதி என்ற நிலை அடைகிறார். இதனை ஏகாதச ப்ரகஸ்பதி என்றும் கூறுவார்கள். அந்நியதேசத்தில் இருந்து வர்த்தக தொடர்புகள் ஏற்பட்டு வளம் கொழிக்கும். நண்பர்களே நம்பிக்கை கொடுப்பார்கள்.

தடைகள் விலகும். இதே மாதமும் சனியும் 10ம் இடத்திற்கு வருகிறார். உங்கள் வியாபாரம் வெற்றி இலக்கை எட்டும். என்ன, உங்கள் பேச்சுவழக்கில் மட்டும் கொஞ்சம் இங்கிதத்தைக் கையாளுங்கள். யாரையும் அதிருப்தியடைய விடாதீர்கள்.

நீங்களும் ஆத்திர, ஆவேசப்படாமல் இருக்கவும். செப்டம்பர் சூப்பர் பலன்களைப் பெறுவீர்கள். குடும்பத்தில் குதூகலம் தான்.

நவம்பர், டிசம்பரில் பணப்பட்டுவாடாக்களில் விழிப்புடனிருக்கவும். இந்த ஆண்டு பணபலம் குறைவுற்றிருக்காது என்று நம்பலாம்.

துலாம்

(சித்திரை 3,4ம் பாதங்கள்; சுவாதி, விசாகம் 1,2,3,ம் பாதங்கள்) புத்தாண்டில் பொலிவும் புதுமையும் கூடிவருகிறது. உழைப்பின் சிறப்பை நீங்கள் உணருவீர்கள். அதன் மூலம் பல்வேறு நிலைகளில் ஆதாயம் வரவுள்ளது. ஜனவரி இரண்டாம் வாரத்தில் செவ்வாய் கிரகத்தில் பலமும் அதிகரிக்கவுள்ளது. எனவே உங்கள் எண்ணங்கள் சிறக்கும்.

குரு வக்கிரநிலை பெற்றிருப்பதால் பணவிஷயத்தில் ஸ்பீடு பிரேக்கர் தான்! ஆனால் பிப்ரவரியில் அவர் நிவர்த்தி பெற்றுவிடுகிறார் என்பதால் முடங்கிக்கிடந்த பணவரவுகள் வேகமாக வரத்துவங்கும்.

உங்களின் எதிர்கால திட்டங்கள் வெற்றிலெக்கை எட்டும் விதமாகச் செயற்படும். அதே சமயம் ராகு, கேதுவின் மாற்றம் ரசிக்கும்படியாக இல்லை. ராகுவுடன் ஒப்பிடும் போது கேதுவின் இரண்டாமிட சஞ்சாரம் பரவாயில்லை. ஜூலை 22 வாக்கில் சனி மிதுனத்திற்கு இடம் மாறுகிறார். கோசார ரீதியாக இது சிறப்பில்லை என்றாலும் அவர் உங்கள் ராசிக்கு யோகத்தைத் தரும் நிலை உள்ளவர் என்பதால் உங்களைச் சஞ்சலம் செய்யமாட்டார்.

அக்டோபரில் இவர் வக்கிரம் அடைகிறார். எனவே பொருளாதாரம் பூதாகாரமாகும். ஏற்ற இறக்கம் என்பது சகஜமாகிவிடும். தொழில் வியாபாரம் என்றிருப்போர் கடுமையாகப் போராட வேண்டியிருக்கும். இந்த நிலை டிசம்பர் முதல் வாரம் வரை நீடிக்கிறது. அதன் பிறகு குரு வக்கிர நிலை பெற்றுவிடுவார். கூடவே விருச்சிகத்தில் உள்ள கேதுவையும் 5ம் பார்வையாகப் பார்ப்பார். இது நற்பலன்களைத் தரக்கூடியது. பணநடமாட்டம் ஒரு கட்டுக்குள் வரும். தொழில் முனைவோர் இயந்திரப்பணியாளர்களுக்கு நன்மையுண்டாகும்.

பணவிஷயத்தில் எவரிடமும் எச்சரிக்கையுடன் நடந்துகொள்ள வேண்டும். 2002ல் உங்களுக்கு நல்லதொரு துவக்கத்தைத் தந்து அவ்வப்போது சில தடைகளையும் ஏற்படுத்திப் பணபலத்தில் உயர்த்திவிடும்.

விருச்சிகம்

(விசாகம்4ம் பாதம், அனுஷம்,கேட்டை) கிட்டத்தட்ட சுமார் ஐந்து கிரகங்கள் சுமார் நிலையில் சஞ்சரிக்கிறது. இதன் மூலமாகவே உங்களுக்குத் தெரியும். அனுகூலமற்ற நிலை தற்போது நிலவுகிறது என்பதை புதிய முயற்சிகளால் பொருளாதாரம் வலுவடைந்துவிடாது. பணத்தைச் சம்பாதிக்கும் வழிமுறைகள் தெரிந்தும் கூட அதில் ஈடுபடும் போது நஷ்டமே ஏற்படுகிறது.

திடீர் பிரச்சனைகளும் அவ்வப்போது எதிர்நிற்கும். புத்தாண்டு பிறந்து ஜனவரி 15ம் திகதிக்குப் பிறகு அதாவது தை பிறந்த பிறகு உங்களின் வாழ்வில் முன்னேற்றம் ஏற்படும் அறிகுறி தெரிகிறது.

பிப்பிரவரியில் மாற்றம் பெற உள்ள ராகு கேது பெயர்ச்சிகூட அனுகூலம் அளிக்கவல்லதல்ல. இதனிடையே செவ்வாய் மேஷத்தில் ஆட்சி பெறவுள்ளதால் உங்களின் சங்கடங்கள் பெரும்பாலும் குறையும்.

தொழில் வியாபார நிறுவனங்கள் சற்று நிம்மதி பெற்று இயங்கத்துவங்கும். போட்டிகள் குறைந்து நல்ல ஆதாயம் பெருகும்.

ஏப்ரலில் மீண்டும் ஒரு இறுக்கமான சூழ்நிலை ஏற்பட்டு ஆகஸ்ட் இறுதிவரை நீடிக்கும். பாலைவனத்தில் தண்ணீர் ஊற்றுக்கிடைத்தது போல் ஜூலையில் 9ம் இடத்திற்கு மாறவுள்ள குரு உங்களின் வாழ்க்கையில் தென்றலாய் வீசுவார்.

பொருளாதார பணபலம் சொல்லிக்கொள்ளும் விதத்தில் அமையும். உங்களுக்கு உதவிட பலரும் முன்வருவார்கள். திட்டமுடன் நீங்கள் செயல்படுத்தும் ஒவ்வொரு பணியும் வெற்றியடையும்.

(மீதி அடுத்தவாரம்)

மன்னர்



இவர்தான் ஆப்கானிஸ்தானின் முன்னாள் மன்னர் ஷாஹிர்ஷா. 29 வருட கால அஞ்ஞாதவாசத்தின் பின்னர் கடந்தவாரம் மீண்டும் ஆப்கானிஸ்தான் திரும்பியுள்ளார். ஆப்கான் அமைதியாக இருந்த காலத்தில் அந்த நாட்டைக் கடைசியாக ஆண்டவர் இந்த ஷாஹிர்ஷாதான். இவர் அயல் நாடொன்றில் மருத்துவ சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த சமயம் இவரது ஒன்றுவிட்ட சகோதரர் நாட்டின் அதிகாரத்தைச் சதிப் புரட்சி மூலம் கைப்பற்றினார். அதன் பின்னர்தான் ஆப்கானின் அழிவுகாலம் ஆரம்பமானது. அதிகாரத்திலிருந்து கவிழ்க்கப்பட்ட ஷாஹிர்ஷா இத்தாலியில் சென்று குடியேறினார்.

இப்போது தலிபான் ஆட்சியிழந்தப்பட்டு ஆப்கானில் ஜனநாயகம் துளிர்விடத் தொடங்கியிருக்கும் சமயத்தில் இவர் நாடு திரும்பியிருக்கிறார். காபுலில் வந்திறங்கிய ஷாஹிர்ஷாவை மக்கள் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வரவேற்றனர். இதற்கிடையில் இந்த 87 வயது மனிதர் ஆப்கான் தீவிரவாதக் குழுக்களினால் உயிராபத்தை எதிர் நோக்கியிருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

பத்திரிகையாளர்கள் போல் வேடமணிந்த சிலர் இவரைக் கொலைசெய்யத் திட்டமிட்டு வருவதாக உளவு நிறுவனங்கள் எச்சரித்துள்ளன.

1வது பிறந்தநாள் வாழ்த்து

சாகித்தியன் 23.04.2002

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்வகுமார்-ரதினா தம்பதிகளின் செல்வப் புதல்வன் சாகித்தியன் தனது முதலாவது பிறந்த தினத்தைக் கண்டதையிட்டு தனது இல்லத்தில் அப்பா, அம்மாவுடன் வெகு விமரிசையாகக் கொண்டாடினார்.

இவனை அப்பா, அம்மா, பிரான்ஸில் இருக்கும் அம்மம்மா, பதுக்குடியிருப்பில் இருக்கும் அப்பப்பா, கொழும்பில் இருக்கும் அப்பப்பா, அப்பம்மா, லண்டனில் இருக்கும் நந்தி மாமா, குருநகர் அந்தை, அத்தான்மார் குகியான், யதுஷன், அனுஷன், பிருந்தன், நந்தா பெரியப்பா, நந்தா பெரியப்பா, அக்கா முதுக்கா, அண்ணா ரிஷிந்தன், தம்பி சிந்துஜன், பிரான்ஸில் இருக்கும் கசோ சிந்துப்பா, தாரிணி சிந்தி, அண்ணா கவோதன், தம்பி விநோதன், சிங்கப்பூரில் இருக்கும் இளங்கோ மாமா, கொழும்பில் இருக்கும் பெரியத்தை, அத்தான்மார் தர்சன், தியகுமார், புவனேஷ், சிவனந்தன், அத்தான்மார் சாமான், கனோஷியன், சிங்கப்பூரில் இருக்கும் சின்னமாமா, பதுக்குடியிருப்பில் இருக்கும் குட்டி மாமா, குட்டி அத்தை, மச்சாள் சோபிதா, பெரியப்பா, உடுப்பிட்டி இலக்கணாவத்தையில் இருக்கும் அப்பப்பா, பவனேந்திரன், அம்மம்மா, பபா, சிந்துமாமாக்கள், தேனமொழி, மாமா இலைபரிதி, மற்றும் அப்பாச்சி, அப்பப்பா, உமா அத்தை, கதன் சிந்துபா மற்றும் உற்றார் உறவினர் அனைவரும் வலைமுத்துமாரி அம்மன் அருளைபெற்றுச் சீரும் சிறப்பாகப் பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: திருமதி. கமலேந்திரன் (சின்ன அத்தை)
11, ஸ்ரீசித்தார்த்த வீதி, கிருஷ்ணன், கொழும்பு-06. தொலைபேசி: 812746

முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

யோகராஜ் லுக்ஷான் 24.04.2002

பிரான்ஸைச் சேர்ந்த யோகராஜ்-கிருஷ்ண வேணி தம்பதிகளின் செல்வப் புதல்வன் லுக்ஷான் தனது முதலாவது பிறந்த நாளை பிரான்ஸில் உறவினர் தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடினார்.

இவரை அட்டனிலிருக்கும் நவரட்ணம் அப்பா குடும்பம், கணபதி அப்பா குடும்பம், செல்வராணி அப்பம்மா, சக்தி மாமா, மாவிலி மாமி, ஸ்ரீரிகாந்த மாமா மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் அட்டன் ஸ்ரீமாணிக்கப்பிள்ளையார் அருள் பெற்று பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துகிறார்கள்.

தகவல்: சக்தி, அட்டன், இலங்கை

கொடூரம்

ஒரு மாதகால முற்றுகையின் பின்னர் தரைமட்டமாக்கப்பட்டுள்ள பாலஸ்தீன மேற்குக் கரையில் ஜெனின் அகதிமுகாமை நேரில் சென்று பார்வையிட்ட ஐ. நா. சபை அதிகாரிகளுக்கு அந்த இடத்தில் ஒவ்வொரு அங்குலத்திலும் அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி.

போர் விதிகள் தொடர்பான ஜெனீவா உடன்பாடு இஸ்ரேலியப் படைகளால் அப்பட்டமாக மீறப்பட்டு பெண்கள், பச்சிளம் பாலகர்கள் என்று 500 ற்கும் மேற்பட்டவர்கள் வீடுகளோடு சேர்த்து தரைமட்டமாக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஐ. நா. சபையின் விசேட பிரதிநிதியாக ஜெனினுக்கு விஜயம் செய்த அதிகாரி அங்கு நேர்ந்திருக்கும் கொடுமையைப் பார்த்துத் தன் தலையில் கை வைத்து அதிர்ச்சியை வெளியிடுவதைத்தான் இங்கு காண்கிறீர்கள்.

அந்த இடத்தைப் பார்வையிட்ட சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கற்பனைக்கு எட்டாத கொடூரம் ஜெனினில் நடந்திருப்பதாக அறிவித்தது. இந்த அகதிமுகாமில் சமுகப்படுகொலைப் படலம் ஒன்றையே இஸ்ரேல் அரங்கேற்றியதெனப் பாலஸ்தீன அதிகாரசபை அறிவித்தது. இவையனைத்தையும் நியாயப்படுத்திப் பேசும் இஸ்ரேல், ஐ. நா. சபையினரும், செஞ்சிலுவைச் சங்கத்தினரும் உணர்ச்சியின் வந்துதலால் கருத்து வெளியிட்டு வருவதாகக்கூறியுள்ளது.

ஐ. நா. சபை என்பது அமெரிக்காவின் கைப்பொம்மை. அதிலுள்ள அதிகாரிகளே தலையில் கைவைக்கும் அளவுக்கென்றால் நிலைமையை அனுமானிக்க முடியுமல்லவா?

முதலாவது பிறந்ததின வாழ்த்து

செரூபாபேல் சாம் 22.04.2002

இத்தாலி, மிலேரமோவில் வசிக்கும் செல்வராஜா, கிறிஸ்டா(மீனா) தம்பதியினரின் செல்வப் புதல்வன் செரூபாபேல் சாம் தனது முதலாவது பிறந்த தினத்தை 22.04.2002 அன்று இத்தாலியிலுள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடினார். இவரை அன்பு பாடி, மம்மி, இத்தாலியில் வசிக்கும் ஜொலி மாமா, அப்பப்பா, அப்பம்மா(மன்னார்), Grandmama(இத்தாலி) ராஜன் பெரியப்பா குடும்பம்(இத்தாலி), ரொபின்சன் மாமா குடும்பம்(பிரான்ஸ்), ரொபேட் மாமா குடும்பம்(லண்டன்), கிறிஸ்ரோ மாமா குடும்பம்(கொழும்பு), பரீசா மாமி குடும்பம்(கொழும்பு), குருசா சித்தப்பா(இத்தாலி), சசி சித்தப்பா குடும்பம்(இத்தாலி), ரஞ்சி அத்தை(பெல்ஜியம்), விநோதராஜா குடும்பம்(கொழும்பு), நவரெத்ன மாமா குடும்பம்(மன்னார்), பிரேம் சித்தப்பா(மன்னார்), மற்றும் உற்றார் உறவினர்கள் நண்பர்கள் சபை போதகர் விஜயசீலன் அனைவரும் இவரை சிறிஸ்துவின் நிறைவான ஆசீர்வாதமும் கிருபையும் பெற்றுச் சிறப்பாக வாழ்கவென ஆசீர்வதித்து வாழ்த்துகின்றனர்.

"இதோ பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம்" – சங்கீதம் 127:4

இப்பக்கிரிகை கொழும்பு-05, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 18A, ஆம் இலக்கத்தில் டி.டி. என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் பொரளைகமுவவில் உள்ள சி.பி.டி. அச்சகத்தில்ஏப்ரல் 28ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.